Registered as a News Paper
பக்கம் – 28

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly
: 16.00
நாதம் – 15 வெள்ளம் – 23 06 – 12 – ஓகஸ்ட் – 2004

6 AUG 2004



## யுத்த நிறுத்தத்தை பாதுகாக்க யாரால் முடியும்..?


### போராட்டத்திற்கு முடிவு..?

# திருமுக அறிமுகம்

அந்தக்காலத்தில்.... அதாவது 1967க்கு முற்பட்ட காலப் பகுதியில் வடமராட்சீப் பகுதியில்.. குறிப்பாக கரவெட்டிப்பகுதியில் அண்ணாவியார் என எவரும் பேசிக்கொள்ளும் கௌரவத்திற்குரிய நபராக அவர்விளங்கினார்.

*1940* களின் ஆரம்பத்தில் இருந்து *1960* களின் ஆரம்பம் வரைக்கும் அந்த அற்புதமான கலைஞரின் கலைத்திறன் மிக்க ஆளுமைக்குள் அந்த பிராந்தியமெங்கும் சொக்கிப் போயிருந்தது என்றால் அது மிகையில்லை. அண்ணாவியார் என்றால் ஆழ்வார்... ஆழ்வார் என்றால் அண்ணாவியார் கிருஷ்ணாழ்வார் என்று அடித்துக் கூறும் அளவுக்கு அவர் பெருமையும் புகழும் அப்போது ஓங்கியிருந்தது.

அந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்த ஸ்பெசல் நாடக மரபில் அவரது 'ஸ்திரி பாட்'நடிப்பு அதி உச்சமாகப் பேசப்பட்ட ஒன்றாகும். ஆண் வேடங்களிலும், பெண்வேடங்களிலும் தன்னுடைய அற்புதமான நடிப்பாற்றலால் அனைவரையும் பிரமிக்க



வைத்தவர். அவரது அரங்கு ஸ்பெசல் நாடக அரங்கென்று அப்போதும், இசை நாடகம் எனத் தற்போதும் கூறப்படும் வகையைச்சார்ந்ததாகும். ஒரு காலத்தில் இலங்கை-இந்தியா-மலேசியா போன்ற நாடுகளில் மிகவும் புகழ் பெற்றிருந்த இந்த அரங்க மரபானது யாழ்ப்பாணம் உட்பட ஈழத் தமிழ் பிரதேசங்களிலும் மலையகத்திலும் கூட பிரபல்யமாகி இருந்தது.

நாட்டுக் கூத்துக்கு சற்று அடுத்த கட்ட வளர்ச்சியின் அடையாளமாக விளங்கிய ஸ்பெசல் நாடக அரங்கில் ஆழ்வாரின் ஆற்றல் வெளிப்பாடு அற்புதமான ஒன்றாக விளங்கியது என்றால் மிகையில்லை.

ஆழ்வார் நடித்த முதல் நாடகம் 'சுபத்திரை' ஆகும். இதில் சுபத்திரையாக தோன்றி அற்புதமாக நடித்தமையால் கிருஷ்ணாழ்வார், சுபத்திரை ஆழ்வார் எனவும் அழைக்கப்படும் ஒருவரானார். வாழ்நாள் பூராவும் சுபத்திரை என்ற பெயரும் ஆழ்வாருடன் ஒட்டிக்கொண்டிருந்தது.

தமிழ்-ஆங்கிலம் என இருமொழிப் புலமைமிக்க அற்புதமான தமிழ்ப் புலவராவார்.'வரகவி'என்ற ஸ்தானத்திற்கு பொருத்தமான ஆழ்வாரின் கவிதைகள் தனித்துவமானவை.

அவரது குரல் வளமும் இசைஞானமும், நடிப்பாற்றலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உடன் கவி இயற்றிப்பாடும் திறனும் வசீகரமான தோற்றமும் மேடையில் அவர் தோன்றும் போதெல்லாம் ரசிகர்களின் ரசனைப் புலன்கள் அனைத்தையும் அவரை நோக்கியே குவிமையங்கொள்ள வைத்து மெய்மறக்கச் செய்துவிடும் என்று கூறுவார்கள்.

ஆழ்வாரின் காலம் சாதி,மத அடிப்படையில் சனங்களைப் பேதப் படுத்தி வைத்திருந்த காலம். அவரோ இதனையெல்லாம் கடந்த கலைஞன் சமூக முரண்பாட்டு-சாதி வேறுபாட்டு கொடுமைகளை கடுமையாகவும் மனிதாபிமான உணர்வோடும் எதிர்த்தவர் அவர். இது சாதிமான்களை அவர் மீதுகோபங்கொள்ளவைத்தாலும் அவரது கலைத்திறனால் அவர்கள் கவரப்படவே செய்தனர்.

சுபத்திரையாக நடித்து சுபத்திரையாழ்வார் எனப் புகழ் பெற்றவர் கிருஷ்ணனாக, கிருஷ்ணலீலாவில் நடித்து கிருஷ்ணாழ்வார் என்றும் பெயர் பெற்றவர் என்றால் அவரது நடிப்பாற்றலின் உச்சத்தன்மையை உணர்ந்து கொள்ளுங்களேன்.அவர் அண்ணாவியாராக நாடகங்களை பயிற்றுவிக்கும் போது பயிற்சியின் ஆளுமைத் திறனை உணரமுடியும். பாத்திரங்க ளுக்கேற்ப குரற்பயிற்சியை வழங்குவதில் அவருக்கு நிகர்அவரே தான்.

அவர் கரவெட்டிப் பகுதியின் ஆஸ்தான கவிஞராகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். சமரகவி, வாழ்த்துக்கவி போன்றவற்றை எழுதுவதிலும் உடனியற்றிப் பாடுவதிலும் ஆழ்வார் கலைமகளின் அருள் பெற்றவரகவியென்றே போற்றப்பட்டார்.

மண்வாசனையும், மனிதாபிமான உணர்வும் கொண்ட அவரது தனக் கவிதைகள்,கவிதையுலகையும் ஆளும் திறன்கொண்டவர் ஆழ்வார் என்பதை உறுதிப்படுத்தும் தன்மை கொண்டவையாகும்.

ஆழ்வாரின் நகைச்சுவையுணர்வு இயல்பானது.. சிலேடையாகப் பேசிச் சிரிக்க வைப்பதில் வல்லவர். அந்தக்காலத்தில் இந்தியாவில் இருந்து வந்து இங்கு நாடகங்களை நடத்திய் புகழ்பெற்ற கலைஞர்கள் பலருடனும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த ஆழ்வாரின் கலைத்திறனை அவர்கள் வியந்து பாராட்டத்தவறியதே இல்லை.

சினிமாவின் வருகை மேடை நாடகத்தின் செல்வாக்கை குறைத்த போதும் ஆழ்வார் மீதான மதிப்பும் மரியாதையும் ஒரு போதும் குறைந்தது கிடையாது.ஒரு தடவை கல்லடி வேலுப்பிள்ளை என்ற ஆசுகவி சுதேச நாட்டியம் என்ற தனது பத்திரிகையில் (1926இல்) இப்படி எழுதினார்.

இந்தியாவின் கல்லடிபட்டு, சொல்லடிபட்டு இருப்பவர்களைப் பெரும் பணம் செலவு செய்து இங்கு அழைத்து வந்து அவர்களைப் புகழ்ந்து சிந்தாமணி,அந்தமணி, இந்தமணி என பட்டமளித்து விளக்கு மாற்றுக்கு குஞ்சம் கட்டுவது போல் நாம் அலைவதை விட நம் நாட்டிலுள்ள கிருஷ்ணாழ்வார் போன்ற பெரும் நடிகர்களின் நடிப்பைக் கண்டு நன்றாக மகிழலாம். கல்லடி வேலனின் விமர்சனம் காரசாரமானது என்பதை அவரையறிந்தோரே அறிவர். இன்றைக்கும் பொருத்தமான இந்த விமர்சனக் கருத்து கிருஷ்ணாழ்வாரின் கலைத்திறனுக்கு ஒரு சான்றாகும் 15.03.1931 இல் பருத்தித்துறை காட்லிக்கல்லூரியில் மேடையேற்றப்பட்ட கிருஷ்ணாழ்வாரின் நாடகத்தைப் பார்த்து பிரமித்து வியந்த ஆங்கிலேயர் ஒருவர் அவருக்கு வழங்கிய பாராட்டு வாழ்த்தில், "I have nothing, but the sincerest admiration for the superb acting of Mr.M.V.Krishnalvar. I had the brevilege of seeing him in the role of Ehelapola Kumarihamy. It was a relevation".மலேசியா வாழ் தமிழ் மக்கள் அவருக்கு 'இலங்கையர் திலகம்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

"திறமான புலமையெனில் வெளிநாட்டவர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்'என்ற பாரதியின் பாடல் வரிகள் அந்த அமர கலைஞன் கிருஷ்ணாழ்வார் விடயத்தில் உண்மையாகியுள்ளதல்லவா....

**அட்சயன்**

# காரசாரம்

## காலம் மாற வேண்டும்-அல்லது நாம் மாற்ற வேண்டும்

தமிழர்களை வந்தேறு குடி என்று கூறி வரலாற்றையே மாற்றிவிட்டவர் சிறிலங்கா சனாதிபதி. தமிழ் என்ற மொழியும் தமிழ் என்ற இனமும் உலகெங்கும் பரந்து சாதனை செய்திருக்கிறது. இன்று. தமிழன் பதினொரு கோடிக்கு மேல் சனத் தொகையைக் கொண்டிருந்தாலும் அவனுக்கென்று குந்த ஒரு கோடியில்லை. ஆயிரத்துத்தொள் ளாயிரத்து ஐம்பத்து எட்டிலே தென்னிலங்கையில் அடிபட்டு அவலப்பட்டு வந்த தமிழனுக்கு "ஆனையிறவுக் கங்கால போடா" என்று சிங்களவனே சொல்லி அனுப்பிவைத்தான்.

உண்மையில் ஐம்பத்தெட்டிலோ, எழுபத்தேழிலோ தமிழர்களிடம் ஆயுதம் இருக்கவில்லை. எண்பத்து மூன்றிலும் கூட முழுமையான போராட்டமாக எதுவும் நடக்கவில்லை. ஆனால் அவலப்பட்டு வந்த தமிழருக்கு அடைக்கலம் கொடுத்தது தமிழீழம். இன்று இதே போன்றதொரு இனப்படுகொலைநடந்தால்... இல்லை சும்மா பேச்சுக்குத்தான் நடந்தால், தமிழர் எங்கே போகமுடியும். வசிப்பிடமற்ற அடைக்கல மற்றநிலை வராதோ. வன்னி மட்டுமே பாதுகாப்பாக உள்ளது.

ஏராளமானவர்கள் வசதியுடைய வீடுகளை மடக்கி அதில் எட்டடி உயரத்துக்கு வேலி, பூந்தோட்டம், விளையாட்டரங்கு, அலங்கார பலகணிகள் என்று அவர்களிருக்கும் சொகுசும் உங்கள் கண்களை உறுத்தவில்லையோ. அண்ணன் தம்பியாக இருந்தாலும் அரையடி வேலியை அகட்டிப் போட்டால் வெட்டிப் போட்டு மறியலுக்குப் போகும் தமிழன் அக்கா தங்கையானாலும் எல்லை வேலியில் ஒரு சுள்ளி முறித்து அடுப்புப்பற்ற வைத்து விட்டால்... அவளுடைய சரித்திரமே சந்திக்குவரும், அப்பேர்க் கொத்த தமிழச்சிகள் இன்று ஆராரோ வந்து நின்று ஆட்சி பண்ணவாங்கோ, வந்திருங்கோ என்றுகூறிவிட்டு கொழும்பிலும், குருநாகலிலும் குடியிருப்பதேன்.

உரிமைக்குக் குரல் கொடுக்கத் தயக்கமென் [illegible]ஆண்டாண்டு காலமாய் அடி[illegible]டுக்கிடக்கும் மண்ணின் கள[illegible]தைத் துடைக்க அலையென[illegible]ண்டு வரும் இளைஞர்களுக்கு ஏ[illegible]ங்கள் ஆதரவாக இருக்க[illegible]டாது. அயல் நாடுகளுக்குப் [illegible]லம் பெயர்ந்து சென்றுள்ள மக்களின் ஆதரவு எங்கள் மண்ணுக்கு கிடைத்து வருகின்றது தான். அருகில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வாழும் நீங்கள் மட்டும் அரசுதரும் சம்பளத்தில் அழகான வீடுகள், அமரவசதியாய் சாய்மனைக்கட்டிலும் சாய்ந்தாடத் தொட்டிலும் வேடிக்கைபார்க்க வீடியோப் படங்களும் மென்டிஸ் மிரண்டா மினுமினுக்கும் சேலைவகை கொண்டைக்குக் குஷ்பு, கோவில் பெருவிழாக்கள் அங்காலும் இங்காலும் அசையாத பயணங்கள், ஆமிக்கு முன்னால் அன்றாடம் பல்லிளிப்பு, என்று வாழும் சீர் கெட்ட வாழ்க்கையுமாக, ஏன் மற[illegible]தீர் உங்கள் போர்க் குணத்தை ஏன் துறந்தீர்? காலம் மாறவேண்டும். அல்லது மாற்ற வேண்டும். எங்கள் இழி நிலை மாறும்காலம் இது. உங்கள் ஒவ்வொருவருக்கும் வரும் வெற்றியில் பங்குண்டு அதை உழைத்துப்பெறுவோமே.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தியேழிலும், எண்பத்து மூன்றிலும் தமிழர்கள் தரைவழியாகக் கூட யாழ்ப்பாணத்துக்கு ஓடிவர முடியவில்லை விமானத்தில் ஏற்றிப் பலாலியிலும், கப்பலில் ஏற்றிப் பருத்தித்துறை, காங்கேசன்துறையிலும் கொண்டு வந்துகொட்டியது அப்போதைய அரசாங்கம். பாருங்கோ, படை அவர்களுடையது. கஜானா அவர்களுடையது, அதிகாரம் அவர்களுடையது, மக்கள் அவர்களுடையவர்கள். ஆனால் தமிழர்களை காப்பாற்றத் தம்மால் இயலவில்லை என்றுதாமே அவர்களை ஏற்றி அனுப்பி வைத்த இடம் யாழ்ப்பாணம். தமிழர்களுக்கு அவர்களுடைய தாயகத்தில்தான் பாதுகாப்பு என்று சிங்கள அரசாங்கம் தானே உணர்ந்து நடந்து கொண்ட தற்கு, வேறென்ன சான்று வேண்டும்.

யாக இதை மறந்து போய்விட்டனர். மக்களின்நிலை இப்படியிருக்க மக்களைப் காப்பாற்றவேண்டியபாதுகாப்பு படையினருக்குப் பாதுகாப் பில்லையாம். என்ன வேடிக்கை உயர் பாதுகாப்பு வலயங்களில் அவர்களுடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டுள்ளதால் அங்கே மக்கள் குடியிருக்கத் தடையாம். இந்தப் பாதுகாப்புப் பொறிகளின் பின்னே குடியிருக்கும் மக்கள் ஒரு, போதும் சிந்திக்கக் கூடாது. என்பதில் இராணுவமும் அரசும் கவனமாகவே இருக்கின்றனர்.

தமிழர்கள் எப்போதும் மனதில் ஒன்றை நினைக்க வேண்டும். இந்த மண் எங்களின் சொந்த மண், இதற்கு அந்நியர்களின் பாதுகாப்புத் தேவையில்லை. எங்களை எங்களால் பாதுகாக்க முடியும் இப்போதுள்ள அச்சப்பாடுக ளெல்லாம் பாதுகாப்புப் படையினரால் வருவதுதான் எங்க

# கொஞ்சம் கூட வெட்கம் இல்லை

என்னதான் நாகரிகம்வளர்ந்து வந்த போதும், மனித நடத்தைகளில் அது தொற்றிக்கொண்ட போதும் இன்னும் மாறாதுள்ள பெடிகளை என்னென்பது. அதிகரித்து வரும் திருமணப்போட்டிகளை எண்ணும்போது பெரும் வேடிக்கையாகவும் வேதனையாகவும் உள்ளது. தெருவில் போகும் போதோ, பஸ் தரிப்பு நிலையத்தில் நிற்கும் போதோ பசித்த ஒருவர் வந்து எம்மிடம் கையேந்தினால் முகத்தைச் சுழிக்கிறோம். 'உனக்கு உழைத்துப் பிழைக்க இயலாதா?' என்ற கேள்வி வேறு. ஒருவர் இக்கட்டான நிலையில் பெற்றகடனை மீளச் செலுத்த முடியவில்லை. கடன் கொடுத்தவன் அவனை மரியாதைக் குறைவாகப் பேசிவிடுகிறான். கடன் பட்டவன் அவமானத்தால் குறுகிப் போகிறான். ஒருவரிடமிருந்து சும்மா காசு வாங்கவேண்டியேற்படும் போது மனம் என்னபாடுபடுகிறது. ஆனால் திருமணம் என்றபெயரில் லட்சக்கணக்கான சொத்துக்களைக் கேட்கும் ஒரு இளைஞன், வெட்கப்படுவதில்லையே ஏன்? அடுத்தவர் உழைப்பை ஒரு பெண்ணுடன் தான் சேர்ந்து வாழுவதற்கான கூலியாகவா கேட்கிறான். அப்படித்தான் கொட்டிக்கொடுத்து ஒருவனுக்கு பெண்ணைத்தாரைவார்க்கும் பெற்றோர், பெண்ணை வைத்துக்காப்பாற்றத்தான் சீதனம் கொடுக்கிறோம். [illegible]களே அவன் அந்தப் பெண்[illegible] வைத்தாகாப்பாற்றுகிறான். இல்லையே, தாலி கட்டினால் மனைவி, காலையில் தேநீர் கொடுக்க, உணவு சமைத்துப்பரிமாற, உடை தோய்க்க, பாய்விரிக்க என்று ஒரு சம்பளமற்ற வேலையாளாகத்தானே போகிறாள். இன்னும் வீட்டுக்கு உழைக்கும் பெண்களும் கூட சீதனம் கொடுக்கிறார்கள். எல்லாம் சரி, தனக்கு வரும் வாழ்க்கைத்துணைவியிடம் கை நீட்டிப்பண்ம் வாங்கி, அந்தப் பணத்தில் தாலிக்கொடி செய்து, அந்தப்பணத்தில் கலியாணவீட்டுச் செலவையும் செய்து 'பஸ்ஸொன்றையோ ஒரு'ஹைஹயேஸ்' வாகனத்தையோ வாடகைக்கு அமர்த்தி நண்பர்கள் உறவினர்களை ஏற்றி விலாசம் காட்டும் போது கொஞ்சங் கூட வெட்கம் ஏற்படுவதில்லையோ? கணவ னைவிட மனைவி கூடப் படித்தால் சரியில்ல, வயசு கூடிற்றால் சரியி ல்ல, கணவனைவிட மனைவி பெரிய வேலையில் கூடியசம்பளத்தில் இருந்தால் சரியில்ல, சீதனம் வாங்கும் போதுதான் விலைக்கு அவிழ்த்த மாடுதான் என்ற நினைப்பு ஏன் வருவதில்லை. இளைஞன் கள் சமூகமே... மானமிழந்து போவதுபோலதான் தெரிகிறது. குருவிகூட தாமாகக் கூடுகட்டியபின்தான் குடும்பம் தொடங்குகின்றது. எனக்குத் தெரிந்த விலங்கினங்கள்கூட தமது இடத்தை நிச்சயம் செய்தபின்பே கூடுகின்றன. மனிதன் மட்டும் கலியாணம் செய்யு முன் வீடு கட்டித்தாறியளோ என்று மாமனாரைக் கேட்கிறான். சீதனம் என்பதே கேவலம். ஆண்மைக்கு விடப்படும் ஏல விற்பனையை வேறெப்படிச் சொல்வது.

திருமணம் முடித்து புதுக் கருக்கழியாத சோடிபட்டு வேட்டி கூறைப்புடவை சகிதம் கோவிலுக்கு வருகிறது. புதிதாக எடுத்த மோட்டார் சைக்கிள் பெண்ணின் கழுத்தில் இன்னும் தொய்யதா வட்டத்தாலிக் கொடி அட்டியல் கைநிறைந்த தங்கவளையல், பத்து விரல் மோதிரம், மார் பதக்கம் சங்கிலி, முத்துக்குவியல் தோடு. மாப்பிள்ளையும் ஒரேவிரலில் இரண்டு மோதிரம், சங்கிலி என அட்டகாசமாக த்தான் வருகிறார். அவர்களோடு ஒட்டியவளாக மாமியார். பெண்ணின் தாய். "மாப்பிளை - எவடம்" பேச்சுக் கொடுத்தேன். யாழ்ப்பாணம். "ஆ..." என்றேன். பக்கத்தில் நின்றபெண், "என்ன முடிஞ்சுது" என்று கேட்டாள். மாமியார் மனம் நோக, ரெண்டு பேற்ற நகைதாலி எல்லாமா மூண்டு லச்சம், காசா அஞ்சுலெச்சம், இனி மோட்டார் சையிக்கிள், வீடுவளவு, கலியாணச் சிலவு, தரகர்கூலி எல் லாமா ஞாயமா முடிஞ்சுது. என்றார் கண்கலங்க. மாப்பிள்ளை பெண்ணுடன் கோயிற் பிரகாரம் சுற்றிவருகிறார். பெண் ணின் நகையை நேர்செய்துவிடுகிறார். ஏதோ அதில் காப்பவுணாவது அவர் செய்து போட்டது போல. அவனைப் பார்க்கும் போது ஒரு கொள்ளைக்காரனைப் பார்க்கும் உணர்வு ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை.

**மாயா**

# யுத்த நிறுத்தத்தைப் பாதுகாக்க யாரால் முடியும்?

ஹெல்கேசன் சொல்கிறார் நாடு ஒரு யுத்தத்தைநோக்கிப் போகிறது என்ற தொனிப்பட.

சந்திரிகாவுக்கு மிக நெருக்கமான அமைச்சர் மங்கள சமரவீர சொல்கிறார்.... ஹெல்கேசன் நிலைமைகளை மிகைப்படுத்திச் சொல்கிறார் என்றும் அரசாங்கமோ புலிகளோ யுத்தத்தை விரும்பவில்லை என்றும்.

ஆனால் ஒரு மென்தீவிர யுத்தம் ஏற்கனவே தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது. கொழும்பிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாகத் தலைகள் உருள்கின்றன. ஹெல்கேசன் சொல்வதுபோல இனிமேல்தான் ஒரு யுத்தம் தொடங்கப்போகிறது என்பதல்ல. அது ஒருவித மென்தீவிர நிலையில் ஏற்கனவே தொடங்கிவிட்டது.

உண்மையில் ஹெல்கேசன் சொன்னதைவிடவும் நிலைமைகள் மோசமாய் இருக்கின்றன என்பதே களயதார்த்தம்.

ஆனால், அமைச்சர் சமரவீர ஹெல்கேசன் சொன்னதையே மிகைப் படுத்தல் என்று சொல்ல முயல்கிறார்.

ஆயின், நோர்வேயும்சரி அரசாங்கமும் சரி நிலைமையின் தீவிரத்தைப்பற்றி குறைத்துக் கூறுவதன் நோக்கம் என்ன?

நோக்கம் இதுதான்- யுத்த நிறுத்தத்தை இழக்க யாருமே தயாராயில்லை. யுத்தநிறுத்தத்தைப் பாதுகாக்கலாம் என்ற நம்பிக்கை இன்னமும் கருகிவிடாதபடியால்தான் ஒரு மென்தீவிர யுத்தத்தை நாடு சகித்துக் கொண்டிருக்கிறது. நோர்வேயும் சர்வதேசமும் சகித்துக் கொண்டிருக்கின்றன.

யுத்தநிறுத்தத்தைக் காப்பாற்றலாம் என்றொரு நிலை உள்ளவரை அதைக்குறித்து அவசரப்பட்டு அதிகம் எதிர்மறையாக எதையாவது சொல்ல அரசாங்கமும் விரும்பவில்லை நோர்வேயும் விரும்பவில்லை.

அமெரிக்காவின் விருப்பமும் அத்தகையதே என்று தெரிகிறது. அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் பிரதான பதில் உதவி ராஜாங்கச் செயலர் டொனால்ட் ஏ காம்ப் பத்திரிகையாளருடனான சந்திப்பில் இதைப் பிரதிபலித்திருக்கிறார்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய எதிர்மறையான கேள்விகளுக்கெல்லாம் அவர் பிடிகொடாது பதிலளித்த தொனியில் யுத்தநிறுத்தத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற கரிசனை அதிகம் தெரிகிறது. மேலும் இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்றைக்குறித்த பேச்சுக்களை அமெரிக்கா ஆதரிக்கிறது என்ற செய்தியும் அவரது பதில்களில் சூசகமாகக் கூறப்பட்டிருக்கிறது.

தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் இருவரை அவர் சந்தித்தது என்பதும் சமாதானத்தின்பால் விரக்தியுற்றிருக்கும் தமிழர்களை சாந்தப்படுத்தும் நோக்கிலானதே.

ஹெல்கேசனின் அறிக்கையும் மங்கள சமரவீரவின் பதில் அறிக்கையும் அமெரிக்க ராஜதந்திரியின் விஜயமும், பதில்களும் ஒன்றைத் தெளிவாகக் காட்டுகின்றன. அதாவது, யுத்தநிறுத்தத்தை இழக்க அவர்கள் தயாரில்லை என்பதே.

ஆயின், நாடு ஏன் ஒரு மென் தீவிர யுத்தத்துள் மெல்ல மெல்ல அமிழ்ந்துகொண்டிருக்கிறது?

இதைத்தடுத்து நிறுத்த ஏன் அமெரிக்காவாலோ அல்லது நோர்வேயாலோ அல்லது அரசாங்கத்தாலோ முடியாதிருக்கிறது.?

பிரச்சினை இதுதான் - இலங்கைத்தீவின் சமாதானம் அமெரிக்காவுக்கும் இந்தியர்வுக்கும் இடையே கிழிபடத்தொடங்கிவிட்டது.

இம்முறை சமாதானம் மேற்கிலிருந்து வருகிறது. எனவே சமாதானம் செய்யும் நாடுகள் முன்பு ரணிலின் மீது செலுத்திய அதேயளவு செல்வாக்கை சந்திரிகாவின்மீது செலுத்தமுடியாத ஒரு நிலை காணப்படுகின்றது. இது தான் இப்பொழுது நிலவும் தேக்கத்துக்குக் காரணம்.

சந்திரிகாவின்மீது செல்வாக்குச் செலுத்துவதில் மேற்கு நாடுகளுக்கு இடறலாய் இருக்கும் காரணிகள் இரண்டு. முதலாவது ஜே.வி.பி. இரண்டாவது சந்திரிகாவின் பேராசை. இந்த இரண்டு காரணிகளும் அவரை மேற்கைவிடவும் இந்தியாவை நோக்கியே அதிகம் சாய வைப்பனவாகக் காணப்படுகின்றன. இந்த இரண்டு காரணிகளையும் சிறிது விரிவாகப் பார்ப்போம்.

முதலாவது காரணத்தின்படி, சந்திரிகாவின் ஆட்சிப் பங்காளியாய் இருக்கும் ஜே.வி.பி. வெளிநாட்டு முதலீடுகளை முதலில் கடுமையாக எதிர்த்தது. ஆனால் இப்பொழுது இந்திய சீன முதலீடுகளை அது விரும்பி வரவேற்கத்தொடங்கிவிட்டது.

அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்த ஜே.வி.பி. இணையமைச்சர் வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராகக்கதைத்தபோது, சீன அதிகாரிகள் கேட்டார்களாம் அப்படியென்றால் ஏன் இங்கேவந்தீர்கள்? என்று. உண்மையில் ஜே.வி.பி. மேற்கத்தேய முதலீடுகளையே எதிர்க்கிறது. பிராந்திய மட்டத்திலான முதலீடுகளை அது எதிர்க்கவில்லை.

இந்நிலையில் ஜே.வி.பி.யைப் புறமொதுக்கிவிட்டு மேற்கை நோக்கிச் சாயும் முடிவை எடுப்பதன் மூலம் ஏற்கனவே தளம்பிக் கொண்டிருக்கும் நாடாளுமன்றத்தை ரணிலுக்குச் சாதகமாக சோதனைக்குள்ளாக்க சந்திரிகா தயாராகப்போவதில்லை. இது தவிர இரண்டாவது காரணமாகிய அவருடைய பேராசையின்படியும் அவர் மேற்கு நாடுகளை நோக்கிப் போகவேண்டிய தேவை ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகிறது. அந்த இரண்டாவது காரணத்தை இனிப்பார்ப்போம்.

சந்திரிகா ஆட்சியதிகாரத்தில் தொடர்ந்தும் இருப்பதென்றால் அதற்கு சமாதானத்தில் வாய்ப்புக்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால், சிலசமயம் யுத்தம் ஒன்றின் மூலம் புதிய வாய்ப்புக்கள் எதையாவது திறக்கமுடியுமா என்று சந்திரிகா முயற்சிசெய்யக்கூடும்.

அப்படி யுத்தம் அவருடைய இறுதிக்கட்டத் தெரிவுகளில் ஒன்றாயிருக்கலாம் என்ற ஒரு சாத்தியக்கூறு உள்ளவரை அவர் இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்பாட்டுக்குப் போவதற்கான வாய்ப்புக்களும் பிரகாசமாகவே இருக்கும். அதோடு கருணாவைப் பேணவேண்டிய தேவையும் இருக்கும். எனவே, யுத்தம் சந்திரிகாவின் தெரிவுகளில் ஒன்றாயுள்ளவரை அவர் சமாதானம் செய்ய முயலும் மேற்கைவிடவும் இந்தியாவைநோக்கியே அதிகம் சாய முற்படுவார் அல்லது குறைந்தபட்சம் இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை செய்யத் தேவையான தளத்தையாவது பொறியாதுபேண விரும்புவார்.

**— நிலாந்தன் —**

இதன்படி கூறின், இலங்கை இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றுக்கான வாய்ப்புக்கள் மங்காதிருக்கும் வரை இலங்கை அரசாங்கம் சமாதானத்துடன் விளையாடுவதை நிறுத்தப்போவதில்லை.

இப்படியொரு ஒப்பந்தம் உருவாக்கக்கூடிய வாய்ப்புக்களைக் குறித்து அண்மையில் பி.பி.சி. தமிழோசை, வை.கோபாலசாமியைப் பேட்டிகண்டது. இப்பேட்டி முழுவதிலும் வைகோ பெருமளவுக்கு நம்பிக்கையின் பாற்பட்டே கதைத்தார். தர்க்கபூர்வமாக ராஜீய நுணுக்கங்களை உள்வாங்கிக் கதைத்த தாகத் தெரியவில்லை. ஆனால் இதிலுள்ள பிரச்சினை என்னவெனில் - நம்பிக்கைகள் மட்டும் அரசியலாகிவிடுவதில்லை என்பதே. இந்தப் பிராந்தியத்தில் அதிகம் நம்பிக்கெட்ட சனக்கூட்டம் ஈழத்தமிழர்களே.

எனவே, இதுவிசயத்தில் இந்தியா எடுக்கப்போகும் முடிவுகளே சந்திரிகாவின் அடுத்தகட்ட நகர்வுகளைத் தீர்மானிக்கப் போகின்றன.

சந்திரிகா உலகப் பொதுப் பொருளாதார ஒழுங்கு ஒன்றுக்குக் கீழ்ப்படிந்து மேற்கு நாடுகள் கொண்டு வரும் சமாதானத்துக்கு ஒத்துழைக்க வேண்டிய ஒரு நிலையில் இருக்கிறார்தான்.ஆனால் மேற்கண்ட இரண்டு காரணிகளும் அவரை மேற்கை நோக்கி ரணில் அளவுக்கு சாய விடாது தடுக்கின்றன.

இதில் சில சமயம் ஜே.வி.பி. நடைமுறைச்சாத்தியமான விதங்களில் நெகிழ்ந்துகொடுத்தாலும் கூட அவருடைய தனிப்பட்ட பேராசைகளைப் பொறுத்தவரை யுத்தத்தைத் தவிர வேறெந்த கண்ணுக்குத் தெரியக்கூடிய தெரிவும் புதிய வாய்ப்புக்களைத்திறக்கக்கூடியதாக இல்லை என்பதே இங்குள்ள பயங்கரம்.

எனவே, அவர் யுத்தத்துக்கும் சமாதானத்துக்கும் இடையில் அதாவது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் முடிவெடுக்க முடியாது தடுமாறுகிறார் போலவே தெரிகிறது.

அவர் இந்தியாபக்கம் சாயலாம் என்ற ஒரு நிலை உள்ளவரை இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்றுக்குப் போகவேண்டிவரும் போதெல்லாம் அவர் அதிகமதிகம் இந்தியர்களின் எதிர்பார்ப்புக்களையே பிரதிபலிக்கவேண்டியிருக்கும். அல்லது அவர் இடைக்கால நிர்வாக ஏற்பாட்டின் அதிகார உள்ளடக்கத்தைக் குறைக்க விரும்பினாலும் இந்தியாவைநோக்கியே போக இடமுண்டு.

ஆயின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபைக்குள்ள அதிகாரங்களை விட கூடுதல் அதிகாரங்களுடன் ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை அவர் ஏற்றுக்கொள்வதென்றால் அதற்கு இந்தியாவின் நிலைப்பாட்டில் ஏதாவது பெரிய திருப்பங்கள் வந்தால்தான் உண்டு.

ஏற்கனவே ரணிலின் காலத்தில் ரணில் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது வாஜ்பேயுடன் சேர்ந்து வெளியிட்ட ஒரு கூட்டறிக்கை பின்வருமாறு கூறுகின்றது. "எந்தவொரு இடைக்கால ஏற்பாடும் இறுதித் தீர்வின் ஒன்றிணைந்த ஒரு பகுதியாய் இருக்கவேண்டும்." இப்போதுள்ள இந்திய அரசாங்கம் இந்த நிலைப்பாட்டிலிருந்து மாறாத வரையும் அதோடு, சந்திரிகா ஒரு பாதுகாப்பு உடன்படிக்கைக்காக இந்தியாவில் தங்கியிருக்கும் வரையும் இடைக்கால நிர்வாக ஏற்பாட்டைக் குறித்து ஆச்சரியப் படத்தக்க மாற்றங்கள் எதற்கும் வாய்ப்பேயில்லை.

எனவே, சந்திரிகா அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையில் தடுமாறிக்கொண்டிருக்கும் வரை சமாதான முயற்சிகளில் பெரிய பாய்ச்சல் ஏதும் நிகழப்போவதில்லை.


பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட சொல்கிறார் இலங்கைத்தீவின் ஆளும் வர்க்கம் விரைந்த பொருளாதார வளர்ச்சிகளுக்காக நாட்டின் சுயாதிபத்தியம் என்று அவர்கள் கருதுவதை இழக்கத் தயாரில்லை என்றும் இதை உதவி வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும் விளங்கிக்கொள்ளவில்லை என்றும். அதாவது, ரோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட நிதியுதவிக்காக சந்திரிகா எதுவரை விட்டுக்கொடுக்கக்கூடும் என்பதிலுள்ள வரையறைகளையே உயாங்கொட உணர்த்த முயல்கிறார்.

ஆனால், தமிழர்களை நசுக்குவதற்காக எப்பொழுது இலங்கையரசு பிறநாடுகளிடம் மண்டி யிடத் தொடங்கியதோ அப்பொழுதே இலங்கைத்தீவு அதன் சுயாதிபத்தியத்தை இழந்துவிட்டது. எனவே கடன்வாங்கும் விசயத்தில் மட்டும் சுயாதிபத்தியத்தை பேண முயல்வது என்பது அந்தக்கடனுக்காக புலிகளுடன் சமரசம் செய்யத்தயாரில்லை என்ற அர்த்தத்தில்தான்.

எனவே ரோக்கியோ நிதியுதவிகளைக்காட்டி சந்திரிகாவை மசியவைக்கலாம் என்ற நம்பிக்கைகள் சோரத் தொடங்கிவிட்டன.

இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கைக்குப்போக வேண்டியிருக்கும் என்று அவர் நம்பும்வரை மேற்படி நம்பிக்கைகளை தளைக்கச் செய்வது கடினம் என்றே தோன்றுகிறது.

அதாவது இலங்கைத்தீவின் சமாதானத்தில் இப்பொழுது நிலவும் தேக்கத்தை உடைக்கத்தேவையான முடிவுகளை இந்தியாதான் எடுக்கவேண்டியிருக்கிறது என்பதே மெய்நிலை.







ஆனால், தமிழர்களை நசுக்குவதற்காக எப்பொழுது இலங்கையரசு பிறநாடுகளிடம் மண்டியிடத் தொடங்கியதோ அப்பொழுதே இலங்கைத்தீவு அதன் சுயாதிபத்தியத்தை இழந்துவிட்டது. எனவே கடன்வாங்கும் விசயத்தில் மட்டும் சுயாதிபத்தியத்தை பேண முயல்வது என்பது அந்தக்கடனுக்காக புலிகளுடன் சமரசம் செய்யத் தயாரில்லை என்ற அர்த்தத்தில்தான்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# நறுக்கென...

## திருவோடு ஏந்தியபடி தெருவோரம் அரசியல் பேசலாமா...?



என்னமோ, அண்மைக்காலமாக பௌத்த பிக்குமாருக்கு காலமே சரியில்லை. அண்மைக்காலமாக அவர்களைப்பற்றி வெளிவரும் செய்திகள் அப்படித்தான் எண்ணத்தோன்றுகின்றன.

அரச பதவியை உதறியெறிந்துவிட்டு ஆன்மஞானம் தேடி அரசமரத்தடியை நாடிய சித்தார்த்தன் வழிதொடர்ந்து அவரைப்போன்று புத்த நிலையடைய துறவுபூண்டு மஞ்சள் அங்கிக்குள் 'தம்மை மறைத்து மழித்தலும் நீட்டலுமின்றி' பிட்சாபாத்திரம் ஏந்தி யாசகம் பெற்று வாழ்ந்தபடி அறவழி போதித்துவந்த பிக்குகளில் பலர் லௌகீக வாழ்க்கையை குறித்து ஏக்கத்துடன், போலித்துறவிகளாக நடமாடுகிறார்களோ என்ற சந்தேகமும் இந்தச் செய்திகள் மூலம் ஏற்படத்தொடங்கியுள்ளது. புத்தபிக்குகளில் பலர் 1956களில் இருந்தே தீவிர பேரினவாத சிந்தனை கொண்ட பௌத்த மத வெறியர்களாக தம்மை பகிரங்கமாகவே இனங்காட்டி வந்துள்ளனர். 1958ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் தொடங்கி சிங்கள அரச பயங்கரவாதம் அரங்கேற்றிய அனைத்து தமிழ்மக்களுக்கு எதிரான வன்செயல்களுக்கும் பிக்குகளின் பின்னணி இருக்கவே செய்தது. தமிழ் மக்களாலும் வணக்கத்துக்குரியவர்களாகக்கருதப்பட்ட பிக்குகளின் சுயரூபம் இனக்கலவரங்களின் போதுதான் வெளிப்பட்டது. பிக்குகள் துப்பாக்கி ஏந்தி கொலை செய்யக்கூடிய 'கருணையுள்ளம்(!?)கொண்டவர்கள் என்பதை பண்டாரநாயக்க கொலைச் சம்பவம் நிரூபித்தது. அதன்பின்னரே அரசியலுள் - அரச பீடங்களுள் பிக்குமாரின் செல்வாக்கு பெருமளவில் ஆதிக்கம் பெறத்தொடங்கியது.

மல்வத்தை - அஸ்கிரிய பீடங்கள் அரச உயர்பீடத்தையே ஆட்டிப்படைக்கும் அதியுயர் சக்திகளாயின.

ஆன்மஞானத்தை போதிக்க வேண்டியவர்கள் அரசியல் தந்திரோபாயத்தை உபதேசிக்கும் இழிநிலைக்கு இறங்கினர். சிங்களப்பேரினவாத வெறி பௌத்ததர்மத்தை மூட்டைகட்டி ஒருபுறம்வைத்துவிட்டு காவியுடையுடனும் மஞ்சள் அங்கியுடனும் திருவோடு ஏந்தியபடியே தெருவோரம் அரசியல் பேசவைத்தது.

பௌத்தபிக்குகளை ஆக இழிநிலைக்கு இழுத்து வந்து மூன்றாந்தர அரசியல் வாதிகளாக்கிய பெருமை சிகல உறுமயக்காரரையே சாரும். தம் அரசியல் இலக்குகளை சுலபமாக எட்ட பிக்குமார்களை ஒன்றிணைத்து ஜாதிகஹெல உறுமயக் கட்சியை தோற்றுவித்து அரசியல்பேசி வாக்குயாசகம் கேட்கவைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கி அங்கு அவர்கள் இன்று சந்திக்கும் அவலங்களுக்கும் அவமானங்களுக்கும் காரணமானவர்கள் சிகலஉறுமயவினரான திலக்கருணாரத்னக் கும்பலைச் சேர்ந்தவர்களே...


இப்போது பிக்குகளின் மஞ்சள் அங்கிகள் நாடாளுமன்றத்திலேயே களையப்படுகின்றன. கண்டபொருட்களும் அவர்கள் மீது வீசப்பட்டு அவர்கள் காயங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். பதவியை விட்டு விலகுமாறு அவமதிக்கப்படுகின்றனர். அவர்கள்மீது அஸிட்வீசப்படுகிறது. கொல்லப்படுகின்றனர். விகாரைகள் வன்முறைகளின் மையமாகிவருகின்றன...

இத்தனையையும் செய்பவர்கள் பௌத்தசிங்களப் பெருமக்கள் என்று தம்மைப்பிரகடனம் செய்து கொள்வோர்தான்... தமிழ்மக்களல்ல...

பாவம் புத்தபகவான் அவரின் புனித பெயரைப் பயன்படுத்தி புத்தபிக்குகளே இப்படி அவரை, அவரது தர்மசிந்தையை, அவமானப்படுத்தலாமா?

'புத்தம் சரணம் கச்சாமி' என்ற குரலைக்கேட்டாலே புத்தர் நிஷ்டைகலைந்து எழுந்து தலைதெறிக்க ஓடும் நிலையை புத்தபிக்குகள் - சிறிலங்காவின் புத்தபிக்குகள்.

## முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்க முடியாது



கடைசியாக அந்த கொழு[illegible] கொட்டாவ இரகசியப் பாதுகாப்பு மறைவிட படுகொலை சம்பவமானது அரசுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ள விடயமாகிவிட்டது.

கருணாவையும் அவரது குழுவினரையும் வைத்து தமிழ் தேசியத்தின் எழுச்சியைச்சிதைக்கவும், பிரதேசவாதத்தை மூலோபாயமாக்கி வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகக்கோட்பாட்டில் குழப்பங்களை உருவாக்கி தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கு பின்னடைவினை ஏற்படுத்தவும் சிங்கள அரசுபோட்டதிட்டம் இந்தச் சம்பவத்தினையடுத்து முழுமையாகவே வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

கருணாவுக்கும் தமக்கும் எந்தச்சம்பந்தமும் கிடையாது- என அரச தரப்பும், படைதரப்பும் மாறிமாறி அறிக்கை விட்டு முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயன்ற கோமாளித்தனம் இப்போது அனைவருக்கும் தெரியவந்துவிட்டது.

சில நாட்களுக்கு முன்னர்தான் கருணாவை அநுரா சிங்கப்பூருக்கு கூட்டிச்சென்ற செய்தி வெளியானது. இப்போது கருணாவின் ஆட்களுக்குள்ளேயே பிளவுகள் ஏற்பட்டு கருத்து முரண்பாடுகள் படுகொலைகளில் முடிந்துள்ளது. அதுவும் கொழும்பில் ரகசிய பாதுகாப்பு மறைவிடமொன்றில் இச்சம்பவம் நடந்துள்ளமையானது அரசுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் கருணாவுடனும் அவரது ஆட்களுடனுமான தொடர்பை நிரூபித்துவிட்டது.

கருணாவின் குழுவினர் கொழும்பின் பு[illegible]ப்பகுதியில் வசதியான மாளிகையொன்றில் ஆயுதங்களுடன் தங்கியிருக்க ஏற்பாடு செய்த[illegible]ர்?

அந்த வீட்டை இரகசிய பாதுகாப்பு மறை[illegible]ம் என இராணுவச்சொற்களைப் பயன்படுத்தி அழைக்கக்காரணம் என்ன?

அங்கு கொல்லப்பட்ட 'தம்மிக்க' என்ற சிங்கள இளைஞர் இராணுவப்புலனாய்வு பிரிவைச்சேர்ந்தவர் என்ற செய்தியை அரசு நிராகரிக்குமானால் அவர் யார் என இன்று வரை வெளியிடாமல் இருக்கக்காரணம் என்ன?

இந்தக்கேள்விகளுக்கும் இதே போன்ற வேறுபல சந்தேகங்களுக்கும் விளக்கம் கூறவேண்டியது அரசு மட்டுமேயாகும்.

ஏற்கனவே இருவருடங்களின் முன்னர் இதே அத்துக்கிரிய பகுதியில் இருந்த மிலேனியம் சிற்றி இராணுவப்புலனாய்வுப்பிரிவினரின் கட்டுப்பாட்டில் இயங்கிய இரகசிய பாதுகாப்பு மறைவிட விவகாரம் இன்னமும் விசாரணையில் 'நாறிக்' கொண்டிருக்கிறது.

இங்கிருந்து தான் தமிழ்த்தேசவிரோத சக்திகள் இராணுவப்புலனாய்வுப்பிரிவினரின் வழிகாட்டலின் கீழ் கூலிப்படையாக இயங்கும் ஆழ ஊடுருவித்தாக்கும் படையணி (LRRP) செயற்பட்டு விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்களை இலக்கு வைத்து தாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது தெரிந்தவிடயமே.

இப்போது கொட்டாவ -அத்துக்கிரிய பாதுகாப்பு மறைவிடத்தில் இருந்து கொல்லப்பட்ட கருணா கும்பலைச் சேர்ந்தவர்கள் அதேபோன்ற மற்றுமொரு புதிய (LRRP) அணியினராக இருக்கக்கூடும் என்பதில் சந்தேகமேயில்லை.

இவர்களே மட்டக்களப்பில் பதற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவர்களாகவும் இருந்திருக்கக்கூடும்.

எதுவானாலும் இச்சம்பவம் இராணுவப்புலனாய்வுப்பிரிவினருக்கும், அரசுக்கும் கிடைத்த மற்றொரு மகத்தான தோல்வியென்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## சந்திப்பதும், பேசுவதும் எத்தனை காலம் நீழக்கும்?



மனோ- மலிக் குழு என்ற பெயர் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? எங்கேயோ... எப்போதோ கேட்டது போலுள்ளதா? நிச்சயமாக கேள்விப்பட்டிருப்பீர்கள்.

முன்னொரு காலத்தில், அதாவது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட சமாதான நகர்வுகளின் போது, அரசுக்கும் சனாதிபதிக்கும் இடையே இது தொடர்பாக ஏற்பட்டிருந்த முரண்பாடுகளைக் களையும் நோக்குடனும் இருதரப்புக்குமிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி இனப் பிரச்சினைத்தீர்வுக்கு ஒரு இணக்கமான சூழலை உருவாக்கவென அமைக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழு தான் மனோ - மலிக் குழுவாகும்.

சனாதிபதியின் ஆலோசகர் மனோதித்தவெல ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரின் தலைமையிலான இக்குழுவினர் முன்னர் ரணில் தலைமையிலான பழைய ஆட்சியின் போது பல தடவைகள் சந்தித்துப், பல தடவைகள் பேசிக் கொண்ட போதும் பலனேதும் கிடைக்கவில்லை.

ஆட்சிக் கலைப்புடன் மனோ மலிக் குழுவின் செயற்பாடும் ஓய்ந்து போயிற்று இப்போது மீண்டும் அதற்கு உயிர் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

புதிய அரசின் சமாதான முயற்சிகளுக்கு அரசுக்குள்ளேயே கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளமையானது அரசின் எதிர்கால செயற்பாடுகள் அனைத்தையுமே கேள்விக்குறியாக்கியுள்ள நிலையில் சனாதிபதி அரசுக்கு வெளியே தனது தோழமைக்கட்சிகளுக்கு அப்பால் எதிர் கட்சியின் ஆதரவை ஏதாவது ஒருவகையில் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் தவிர்க்கவே முடியாத வகையில் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான விடுதலைப்புலிகளின் கோரிக்கையை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் அரசு ஆரம்பிக்க முன்வந்தால் அதற்கு முழுமையான ஆதரவை தாம் வழங்கத்தயார் என்று ஐ.தே.கட்சி வெளிப்படையாக அறிவித்தமையானது அரசுக்கு அதிர்ச்சியையும், அரசுக்குள் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது உண்மைதான்.

எதிர்க்கட்சி இந்த அறிவிப்பை அரசு சாதகமாக பரிசீலித்து பயன் படுத்திக் கொள்ளாது விட்டால் சர்வதேச சமாதான சமூகம் அரசையும் சனாதிபதியையும் சமாதான விரோதிகளாக அடையாளப்படுத்தி விடும். அரசு- ஐ.தே கட்சியுடன் கைகுலுக்க முன்வந்தால் பேரினவாதிகளும், ஜே.வி.பி. -ஹெல உறுமய போன்ற சமாதான எதிர்ப்பாளர்களும் சனாதிபதியையும் அரசையும் தேச விரோதிகள் எனப்பிரசாரம் செய்யத் தொடங்கி விடுவார்கள்.

சனாதிபதிக்கு இக்கட்டான நிலைதான்.

இந்த நிலையில் சர்வதேசத்தைப் பகைப்பதை விட, உள்ளூர் தோழமை கட்சிகளைப் பகைப்பது இப்போதைக்குப் பரவாயில்லை என சனாதிபதி தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

அதன் எதிரொலியே மனோ-மலிக் குழுவின் புத்துயிர்ப்பு நடவடிக்கையாகும்.

இது ஐ.தே.கட்சிக்கு கிடைத்த ஒரு வெற்றியேயாகும்.

சரி மனோ மலிக்குழு இனி என்னதான் செய்யப் போகிறதாம்?

சந்திக்கும்...பேசும்... பிரியும் அறிக்கைவிடும்... மீண்டும் சந்திக்கும், பேசும்..... இப்படியே தொடரும்.. அவ்வளவுதான் எப்படியோ காலம் கடந்தும் நடவடிக்கை மட்டுமேதொடரப் போகிறது...!

## எச்சரிக்கையின் அச்சத்தை எப்படித்தான் மறைக்க முடியும்



அந்த நோர்வேக்காரர்-அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் சமாதான முயற்சிகளைக் குழப்ப முயல்பவர்களை நோக்கி 'நெருப்புடன் விளையாட வேண்டாம்' என எச்சரித்து அறிக்கை விட்டு ஒரு பத்து நாட்கள் கூட ஆகவில்லை. அந்த எச்சரிக்கை குறித்து அரச தரப்பு உள்ளூர அச்சம் கொண்டுள்ள போதிலும் அதனை வெளிப்படையாகக் காட்டவில்லை என்பது உண்மை.

ஆனாலும் அந்த உள்ளச்சம் குறித்த தாக்கங்களின் எதிரொலியாக சில நிகழ்வுகள் நடந்தேறவே செய்துள்ளன.

சனாதிபதிக்கும் நோர்வே பிரதியமைச்சருக்கும் இடையியேயான பேச்சுக்கள் எந்த விதமான முடிவையும் அறிவிக்கவில்லையாயினும் நிலைமையின் விபரீதத்தன்மையை சனாதிபதிக்கு உணர்த்த அவர் அந்த சந்திப்பை பயன்படுத்தியதாகத் தெரிகிறது.

குறிப்பாக அரசுக்குள் இருக்கும் சமாதான விரோத சக்திகளின் செயற்பாடுகளும், அறிக்கைகளும், பிரசுரங்களும் அமைதி முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதை அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது" அரசின் சமாதான முயற்சிகள் மீதான விசுவாசத் தன்மையை சந்தேகிக்க வைப்பதாக நோர்வே காரர் பூடகமாக உணர்த்தியுள்ளதாகத் தெரிகிறது. இதனை 'நெருப்புடன் விளையாட வேண்டாம்' என்ற அவரது எச்சரிக்கையுடன் ஒப்பீடு செய்து பார்க்கும் போது ஏதோ ஒரு பாரிய அழுத்தம் ஒன்றுக்கு அரசு முகம் கொடுக்க வேண்டிய சூழல் உருவாகவுள்ளதை சுட்டிக்காட்டுவதாக அரச வட்டாரங்களில் பேசப்படுவதாகக் கூறப்படுகிறது.

இது சந்திரிகாவை பொறுத்த வரை கசப்பை ஏற்படுத்தியுள்ள ஒரு விடயமாகவே உள்ளது. ஹெல உறுமய பிக்குகளை விலை கொடுத்து வாங்கி அரசின் பெரும்பான்மை பலத்தை உறுதி செய்ய முயற்சிகள் நடப்பதாக செய்திகள் அடிபடும் வேளையில்,ஜே.வி.பி.யினரின் அளவுக்கு மீறிய அதிகாரக் கூத்து சனாதிபதி அம்மையாருக்கு சகிக்க முடியாத ஒன்றாகவே உள்ளது என்பதைஅவரின் சிறுநடவடிக்கைகள் உணர்த்தி நிற்கின்றன.

ஜே.வி.பி. யினரின் அமைச்சுப் பொறுப்புக்களில் அவர் தன்னிச்சையாக மேற்கொண்ட மாற்றங்கள், மனோ-மாலிக்குழுவுக்கு புத்துயிரூட்டும் நிகழ்வு போன்றவை சிறந்த உதாரணங்களாகும்.

ஜே.வி.பிக்கு தனது 'கடுப்பை' வெளிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே சனாதிபதி அம்மையார் இதனை செய்துள்ளார் எனலாம்.

ஜே.வி.பியும் பதிலுக்கு 'சீறி' தனது சினத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆக அரசுக்குள் முறுகல் அதிகரிக்க தொடங்கியுள்ளதுபோல தெரிந்தாலும்... ஆனாலும் சந்திரிகாவுக்கும், ஜே.வி.பியினருக்கும் ஒருவரைவிட்டால் மற்றவருக்கு கதி ஏதுமில்லையென்ற நிலை தொடரவே செய்யும்.

இந்தக் கட்டத்தில் சமாதான முயற்சிகள் தாமதமானால் சர்வதேசத்தின் கவனம் வேறு பக்கம் திரும்பிவிடும் என்ற அமெரிக்க எச்சரிக்கையும் வெளிவந்துள்ளது. இது அரசுக்கு ஏற்பட்டுள்ள அடுத்த அதிர்ச்சியாகவும் உள்ளது.

சரி, அரசு என்னதான் செய்யப் போகிறதாம்?

சனாதிபதி அம்மையார் தான் முடிவு செய்ய வேண்டும்!

**செங்குட்டுவன்**

கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் வீதி 96ம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு சில மணித்தியாலங்கள் மக்களின் போக்குவரத்துப் பயணங்கள் புலிகளால் இடைநிறுத்தப்பட்டது. இந்நேரகால இடைவெளிக்குள் எங்கும் ஒரேபரபரப்பு உருவாகி மக்கள் பதற்றமான சூழ்நிலைக்குள்ளானார்கள்.

இப்பதற்றமான சூழ்நிலையின் மத்தியில்தான் பாலையடி விநாயகர் கோவில்முன் கிரவல் வீதியில், இரண்டு சிறியகான்களில் 4970g நிறையுடைய வெடிமருந்து (PE3A ரகம்) இறுக்கப்பட்டு ஒரு அடி ஆழத் வெல்டிங் கராச்சில் வேலைசெய்து வந்தார். அவ்வேலைத்தளத்தில் பரஸ்பர நட்புடன் கூடி வேலை செய்து வரும்போது பஸீர் என்கிற முஸ்லிம் நபருடன் நட்புப் பூண்டார். இருவரும் நண்பர்களானார்கள்.

இப்படியாக நாட்கள் நகர பஸீரிடம் வந்துபோகும் ஜெகனும் மோகனின் நண்பராகினார். அந்நட்பு இருவரும் ஒன்றுகூடி மது அருந்தும் நிலைக்கு வளர்ந்தது. இந் நாட்களில் மோகனின் வாழ்க்கை அதிருப்தி, துயரம் மற்றும் விரக்தியால் நிரப்பப்பட்டு அவரது வறுமையான வாழ்க்கை ஒரு முழுமை அற்ற சூழ்நிலைகள் மதுபான விருந்துடன் நடைபெறுவது வழக்கமாகியது. இச்சந்தர்ப்பங்களின் போது ஜெகன் சிங்கள இராணுவப்புலனாய்வாளனாக இயங்குவது பற்றி மோகன் சாடைமாடையாக தெரிந்துகொள்கிறார். அதனை நிரூபிப்பதுபோல் ஒரு நாள் ஜெகன் மோகனிடம் ஒருவெடிகுண்டு தந்தால் அதனை புலிகள் பகுதிக்குள் வெடிகக வைத்தால் உனக்குப்பணம் கிடைக்கும். அப்பணத்தினை வைத்துக் கொண்டு நீ தனியாக ஒரு தொழிலை ஆரம்பித்து முன்னேறலாம். என்கிற ஆசைவார்த்தைகளைக்கூறினான். அந்த ஆசையால் மோகனின் பயிற்சிகள் நிறைவுபெற்றதும் வெடிமருந்தினை உடம்போடு கட்டிக் கொண்டு போகக்கூடியவாறு ஓர் அங்கி வடிவமைக்கப்பட்டு மோகனின் உடம்போடு உருமறைப்புச் செய்து புலிகளின் பகுதிக்குள் மோகனை வழியனுப்பி னார்கள்.

இவ்வழியனுப்பும் வேளையில் MI அதிகாரியான கப்டன் மீரா ரூபா ஆயிரம் மட்டும் (1000/=) மோகனிடம் கொடுத்தபின் இத்தாக்குதல் வெற்றியாக முடிந்தால் மிகுதிப்பணம் தரலாமென ஆசைவார்த்தை கூறினார். அத்தோடு நின்றுவிடாது ஒரு சயனைட் வில்லையும் மோகனின் ஆனால் அவருக்குத் தூக்கம் வரவே இல்லை. அவரின் இதயத்தில் விபரிக்க இயலாத பல உணர்ச்சிகள் மோதின. அவரின் முகத்தில் சிந்தனையின் சாயல் தீவிரமாகப் படர்ந்தது. அவரின் மனதிலோடிய நல்லெண்ணங்களாலும் மனதில் படர்ந்திருந்த கருமை விலகி வெள்ளை சூழ்ந்தது. அதன் வெளிப்பாடாக தன் மனச்சாட்சிக்குள் சில கருத்தாடல்களைச் செய்தார். இந்நாசவேலையை செய்வது தமிழினத்திற்கு, தமிழர் விடுதலைப் போராட்டத்திற்குத் தான் செய்யும் துரோகம் அல்லவா! அற்ப ஆசையினால் இத்துரோகத்தை

# இறுதி நேரத்தில் விழித்துக் கொண்ட தமிழ் உணர்வும்

# இறுதி நேரத்தில் தோல்வியைச் சந்தித்த சிங்களப் புலனாய்வும்

**“தமிழர்கள் விழிப்புணர்வோடும் தமிழின உணர்வோடும் புலிகளின் முறியடிப்பு புலனாய்வுப்பிரிவினருக்கு உதவும் கடமையில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். அப்போது தான் சிங்களப்புலனாய்வுப் பிரிவினரின் இரகசிய அச்சுறுத்தல் களையோ நாசவேலைகளையோ முறியடிக்கத்தக்க ஆற்றல்களை புலிகளின் புலனாய்வு அமைப்புப் பெறும் என்பதே முதன்மைப் படுத்தப்படுகிற செய்தியாகும்.”**

தில் புதைக்கப்பட்டிருந்ததனை புலிகள் மீட்டெடுத்தார்கள். இத்தகவல் பரவ மக்களின் விழிகளில் வியப்பு நிலவி மனமும் நிலைகுலைந்து திகைத்துப்போயிருந்தன.

இத்தகவல் சம்பவ சாட்சியங்களை ஆதாரப்படுத்தி தமிழ்தேசிய ஊடகங்கள் முக்கிய செய்திகளாக வெளியிட்டன. அதாவது சிங்கள இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் திட்டமிட்டு மேற்கொள்ளவிருந்த நாச வேலைக்காகப் புதைக்கப்பட்டிருந்த வெடிமருந்துப் பொதியை “மோகனதாஸ்” புலிகளின் புலனாய்வுப்பிரி வினருக்கு எடுத்துக் கொடுத்துள்ளார். மோகனதாசின் மனமாற்றத்தால் பெருந்தீங்கு விளைவிக்க இருந்த நாசவேலை ஒன்று செயலிழந்து போனது. அதனால் மோகனதாசிற்கு தேசியத்தலைவர் பொதுமன்னிப்பு வழங்கி அவரின் இயல்புவாழ்க்கை மேம்படவும் உதவினார்.

இந்த மோகனதாஸ் யார்? சிங்கள இராணுவப்புலனாய்வுப் பிரிவின் பொறிக்குள் இவர் எப்படி வீழ்ந்தார்? இவரை உள்வாங்க கூறப்பட்ட ஆசைவார்த்தைகள் என்ன? இறுதி நேரத்தில் நாசவேலை செயலிழந்து போனதற்கு மோகனதாசின் மனப்பாங்கு தான் என்ன? போன்ற கேள்விகளுக்கான விளக்கங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கோடு அலசி ஆராய்ந்து பார்ப்போம்.

மோகனதாஸ் பெற்றோர்களால் மோகன் என அன்பாக அரவணைக்கப்பட்டு, வறுமையான குடும்பச்சூழலில் வாழ்ந்துவந்தார். அவரது குடும்ப வறுமையைப்போக்க அவர் திருமலை, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள பலசரக்குக்கடை, நகை அடகு பிடிக்கும் கடைகளில் வேலை செய்து வரலானார். அப்போது அவருக்கு வயது 18.

83 கலவரத்தின் பின் அவரும் அவரது குடும்பமும் பட்ட அவலம் மிகவும் துயரம் மிக்கவையாக இருந்ததனால் தன் குடும்பத்தோடு 90இல் கிளிநொச்சி வந்து குடியேறினார். அவரின் உழைப்பிற்கான களமாக வவுனியா இருந்ததனால் அங்கு கண்டிவீதியில் அமைந்துள்ள காஸ் யில் இருப்பதனை ஜெகன் கணிப்பிட்டுக்கொண்டான்.

இச் சூழ்நிலைக்குள் வாழும் மோகனை ஜெகன் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் தீயநோக்கோடு ஒரு நாள் இருவரும் மதுவருந்தும் வேளையில் ஜெகன் மோகனிடம் நீ இப்படியே இருந்து என்ன செய்யப் போகின்றாய்? நீ ஏதாவது சொந்தத் தொழிலைச் செய்தால்தான் முன்னேற முடியும் என்று ஜெகன் ஆசை வார்த்தைகளை உதிர்த்தான்.

ஜெகன் ஒரு சிங்கள இராணுவப்புலனாய்வாளன் என்பது பற்றியும் ஜெகன் தீய எண்ணத்தோடு மனதில் கருமை படர்ந்தது.

ஜெகனின் ஆசைவார்த்தைகளால் கவர்ந்திழுக்கப்பட்ட மோகன் தாண்டிக்குள இராணுவ முகாமில் MI அதிகாரியான கப்டன் மீராவை சந்தித்தார். அச்சந்திப்புக்கள் மறுநாளும் தொடர்ந்தபிற்பாடு ஜோசேப் முகாமில் மேஜர் சகீர், கப்டன் மீரா, லெப். எட்வேட் ஆகிய MI அதிகாரிகளையும் மோகன் சந்தித்துக்கதைத்தார்.

இதன் பின்னர் மோகனும் ஜெகனும் ஜோசேப்முகாம் தனி அறையொன்றில் தங்கியிருந்த சமயம் மோகன் ஜெகனிடம் தன் சேட் கொலரினுள் மறைத்துக் கொடுத்து தற்செயலாகப் புலிகளிடம் பிடிபட வேண்டி ஏற்பட்டால் சயனைட் வில்லையை கடிக்கும் படியும். அறிவுறுத்தியுள்ளார்.

இப்படியாக MI யினரின் ஆசைவார்த்தைகள் அறிவுறுத்தல்களுடன் மோகன் ஓமந்தை புலிகளின் தடைமுகாம் வந்து சேர்ந்தார். அங்குள்ள கிறிஸ்தவ கோவிலுக்குப் பின்பாக மறைந்திருந்து வெடிமருந்து அங்கியை கழற்றித்தன்பயணப் பைக்குள்மறைத்து வைத்தபடி கிளிநொச்சியிலுள்ள தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

**••• இராணுவ MI அதிகாரியான கப்டன் மீரா ரூபா ஆயிரம் மட்டும் (1000/=) மோகனிடம் கொடுத்தபின் இத் தாக்குதல் வெற்றியாக முடிந்தால் மிகுதிப்பணம் தரலாமென ஆசை வார்த்தை கூறினார். அத்தோடு நின்று விடாது ஒரு சயனைட் வில்லையும் மோகனின் சேட்கொலரினுள் மறைத்துக் கொடுத்து தற் செயலாக புலிகளிடம் பிடிபடவேண்டி ஏற்பட்டால் சயனைட் வில்லையை கடிக்கும் படியும். அறிவுறுத்தியுள்ளார். •••**

தன்னுடன் பழகிவருவது பற்றியும் புரிந்துகொள்ளாத மோகன் எனக்கும் முன்னேற ஆசைதான் அதற்குப் பணம் தான் இல்லையென தன் ஆதங் கத்தை வெளிப்படுத்தினார்.

அதற்கு ஜெகன் பதில ளிக்கையில் பணம் வரும் வழி ஒன்று உள்ளது. அதற்காக நீ சிறிய வேலை செய்தால்போதும் பணம் உன்னைத் தேடிவரும் என்றார். அதனைச் செவிமடுத்த மோகன் நான் என்ன செய்ய வேண்டும் என்பதனை தெளிவாகச் சொல் என ஜெகனிடம் வினாவினார். அதனை நான் பின்பு சொல்கிறேன் எனக்கூறி அன்றைய மதுபான விருந்தை இருவரும் முடித்துக் கொண்டு தங்கள் தங்குமிடங்களுக்கு சென்றுவிட்டார்கள்.

இவ்வாறான சில சந்திப்புக் மன அச்சத்தை பகிர்ந்துகொண்டார். அதாவது இவ்வேலைக்கு தெரியாத்தனமாக சம்மதம் தெரிவித்து விட்டேன். என்ன நடக்கப்போகின்றதோ தெரியவில்லை என் மனச்சாட்சி உறுத்துகின்றது என்று கூற, அம் மனத்தளம்பலை மாற்றி அமைக்கக்

**— நீலன் —**

கூடிய கருத்தூட்டல்களை ஜெகன் வழங்கி மறுநாள் வெடிகுண்டு பயிற்சிக்கு சம்மதம் தெரிவிக்கக் கூடியவாறு மோகனைத் தயார்ப்படுத்தினான்.

மறுநாள் மடுக்கந்தை இராணுவ முகாமை அண்மித்த காட்டுப் பகுதியிலே மேஜர் செனவிரட்ணவினால் வெடிமருந்து பயிற்சிகள் மோகனுக்கு வழங்கப்பட்டது. அப் மோகன் அன்று இரவோடு இரவாக வெடிமருந்து அங்கியை பாதுகாப்பான இடமொன்றில் மறைத்து வைத்துவிட்டு தாக்குதலுக்கான இடத்தினையும் தெரிவு செய்தார். மறுநாள் அவர்வவுனியா சென்று மீராவையும் செனவிரட்ணாவையும் ஜோசேப் முகாமில் சந்தித்து தாக்குதலுக்கான வயர் றோள், இரண்டு டிற்னேற்றர் களையும் MIயினரிடம் பெற்றுக் கொண்டு அன்றே கிளிநொச்சிக்கு வந்தார்.

அன்று இரவு ஊர் முழுவதும் வழமைபோல் உறங்கியது. பின் மோகன் குஞ்சுப்பரந்தன் கிரவல் வீதியில் இரண்டு சிறிய வெடிமருந்து கான்களையும் தனித்து நின்று புதைத்து விட்டு வீடு வந்து தூக்கத்திற்காக படுக்கையில்கிடந்தார். செய்ய உடன்பட்டிருக்கவே கூடாது. இதை செய்யவேகூடாது. தமிழரின் நியாயமான, சுதந்திரமான போராட்டத்திற்கு தமிழனான தன்னால் எந்தவொரு தீங்கும் ஏற்படவேகூடாது. புலிகளின் புலனாய்வுப்பிரிவுடன் தொடர்பு வைத்திருக்கும் நான் சிங்களப் புலனாய்வாளர்களின் பொறிக்குள் இருந்து விடுபட்டு புலிகளின் புலனாய்வுப் பிரிவுக்கு உதவிசெய்து சிங்களத்தின் நாசகாரத் திட்டத்தினை முறியடிக்கவேண்டும். போன்ற சிந்தனைகளால் மோகனின் தீய எண்ணம் மெது மெதுவாகக் குறைந்து அப்படியே இல்லாமல் போனது.

இவ்வாறாக அவரது மனம் அமைதியான சூழ்நிலைக்குள் மாறும் வேளையில் புலிகளின் புலனாய்வு பிரிவில் சந்திரனுடன் ஓர் உறவு ஏற்படுகின்றது. அவ் உறவின் ஊடாக மேலும் மோகன் தெளிவடைந்து, பின் தாக்குதல் செய்வதே இல்லை என்கின்ற உறுதியான தீர்மானத்திற்கு வருகிறார். அக்கணத்தில் சந்திரனிடம் வெடிபொருட்கள் தொடர்பான தகவல்களை பரிமாற எத்தணித்த போதும் அவரது மனப்பயம் அவரை தடுத்து நிறுத்தியது.

மறுநாள் மோகன் கொழும்பு செல்லும் வழியில் MI எட்வேட்டை சந்திக்க சந்தர்ப்பம் ஏற்பட்டபோது எட்வேட் மோகனிடம் ஏன் தாக்குதலை இன்னும் செய்யவில்லை. என வினாவியபின் பங்களாதேசிற்கு உயர்படிப்பிற்காக சென்ற மீரா தொலைபேசியில் கதைக்கும்போது தாக்குதல் பற்றி கேட்பதாகவும் சொன்னார். அத்தோடு நீங்கள் இந்தத் தாக்குதல் செய்யாவிட்டால் மீராசேரின் பதவியை இறக்கிவிடுவார்கள் என்கிற கருத்தையும் பகிர்ந்துகொண்டார்.

இவைகளை மோகன் கேட்டபின் கொண்டுபோன டிற்னேற்றர் பழுதடைந்து விட்டன ஆகையால் இனும் இரண்டு புதிய டிந்னேற்றர் தரும்படி கேட்டு அவற்றையும் பெற்றுக் கொண்டு புலிகளின் பகுதிக்குள் வந்து சேர்ந்தார்.

இனிமேலும் தாமதிப்பது நல்லதல்ல அது சிக்கல்களை, ஆபத்துக்களை தோற்றுவித்துவிடும் என்கிற மோகனின் சிந்தனை ஓட்டத்தின் விளைவாக...(22ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 06 . 08 . 2004

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


## பாராட்டுக்குரிய காவல்துறை

சிறிலங்காவின் நாடாளுமன்றத்தில் பொலிஸ் பதவி உயர்வுகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தின்போது - வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே தமிழீழ காவல்துறையின் கட்டுக்கோப்பை பாராட்டியுள் ளதுடன் காவல்துறைப்பொறுப்பாளர் ப.நடேசன் அவர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதே இலங்கையில் சீரழிந்திருக்கும் பொலிஸ் சேவையை முன்னேற்ற சாலச்சிறந்த வழியெனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜெயராஜபெர்ணாண்டோபுள்ளேயின் இந்தப்பாராட்டின் மூலம் இன்றைய இலங்கையில் யதார்த்த நிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்கள்மீதும் ஆட்சி அதிகாரபீடங்கள் மற்றும் நிர்வாக பீடங்கள் யாவற்றின் மீதும் தமிழ்மக்கள் நம்பிக்கை இழந்து போனதோடு நின்று விடாது தமது நம்பிக்கைக்குரிய நிர்வாக அலகுகளை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளனர். என்பதே ஜெயராஜ் பெர்ணாண்டே புள்ளேயின் உரையில் உள்ள பிரதானமான விடயமாகும்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டேபுள்ளே குறிப்பிட்டதுபோல சிறிலங்காவின் பொலிஸ்துறை உட்பட எல்லா நிர்வாகக்கட்டமைப்புகளுமே அரசியல் மயப் பட்டதாகவும் இலஞ்சம் ஊழல் நிறைந்ததாகவுமே காணப்படுவதோடு அதிகார துஷ்பிரயோங்களை மேற்கொள்ளும் ஒரு காவல் துறையாக காணப்படுகிறது.

இதற்கு அமைச்சர் குற்றம் சுமத்துவதுபோல தனித்து ஐக்கிய தேசியக்கட்சி மட்டுமல்ல காரணம். இதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சிமுதல் இலங்கையின் ஆட்சி அதிகாரங்களில் அங்கம்வகித்த எல்லோரையுமே சாரும்.

ஆனால், இந்த குழறுபடிகளிற்குள் அமிழ்ந்து போகாத தமிழ்மக்களின் தலைமையான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் அதனை வழிநடத்திவரும் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் தலைமையில் சிங்கள தேசம் மட்டுமன்றி உலகின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் ஒரு காவல் துறையைக் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறதென்றால் தமிழ் மக்கள் அனைவரும் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும்.

சிறிலங்காவின் காவல்துறையைப் போலன்றி இலஞ்சஊழல்கள் எதுவுமற்ற ஒரு காவல்துறையாகவும், எந்தவித அதிகாரதுஷ்பிரயோகங்களுமின்றி செயற்படும் தமிழீழ காவல்துறையினரையும், தமிழீகாவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும் பாராட்டுக்குரியவர்களே

இதன்மூலம் இலங்கையில் இரண்டு சமாந்திர அரசுகள் இருக்கின்றதென்ற சர்வதேச ஆய்வாளர்களின் கணிப்பிற்கமைய இந்த சமாந்திர அரசுகளின் ஒன்றின் கீழ் செயற்படும் காவல்துறை மற்றைய சமாந்திர அரசின் காவல்துறையின் செயற்பாடுகளை விஞ்சி பாராட்டும் படியான செயற்படுகிறது தெளிவுப்படவெளிப்படுத் தப்பட்டுள்ளது.

இந்த வகையில் தமிழீழ தேசிய தலைவர் மேதகு.வே. பிரபாகரன் அவர்களின் கனவைப்போல விடுதலையின் பின் எமது நிர்வாக கட்டமைப்புக்களை வளர்த் தெடுப்பது என்பதை விடபோராடிக்கொண்டே அதற்கு இணை யாக எமது நிர்வாகக்கட்டமைப்புகளை வளர்த்து செல்ல வேண்டும் என்ற தீர்க்கதரிசனமான அவரின் எண்ணத்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவே தமிழ்மக்கள் இதனை கருதவேண்டும்.

அந்தவகையில் தமிழீழகாவல்துறையின் செயற்பாடுகளை தமிழ்மக்களும் நிச்சயமாகப் பாராட்டியேயாகவேண்டும்.

## தூரனின்பார்வை

கடைசியில் சந்திரிகா அம்மையார் ஜே.வி.பியின் மிரட்டலுக்கு அடி பணிந்து விட்டார். அவரின் அதிகார ஆளுமையை ஜே.வி.பி ஒடுக்கி விட்டது. இதன் அடிப்படையில் பார்த்தால் அம்மையார் சூழ்நிலையின் கைதியாக தன்னைத் தானே மாற்றிக்கொண்டார் என்றே உறுதி கொள்ளத் தோன்றுகிறது.

சில நாட்களின் முன் தன் அதிகார முனைப்புடன் ஜே.வி.பியினரின் வசமிருந்த விவசாயத்துறை அமைச்சின் கீழிருந்த சில பொறுப்புக்களை அவர்களுடன் ஆலோசிக்காது தன் வசம் எடுத்துக்கொண்டார் என்பது தெரிந்ததே.

இந்த பொறுப்பு அபகரிப்பானது சனாதிபதியின் அத்துமீறல் நடவடிக்

ஜே.வி.பிக்கு பணிந்து போவதைத் தவிர உடனடி மாற்றுவழி ஏதும் தென்படவில்லை என்றே கூற வேண்டும்.

இதற்கிடையே இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயார் என்றால் ஐ.தே.கட்சி அதற்கு முழுமையான ஆதரவை வழங்கத்தயார் என்ற எதிர்கட்சியின் அறிவிப்பால் ஏற்பட்ட குழப்பமும் அரசுக்குள் நெருக்கடியைத் தோற்றுவித்திருந்தது.

எப்போதும், எந்த விடயத்திலும் உண்மையாகவும், நேர்மையாகவும் நடந்து கொள்ளும் தன்மையற்ற வரும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப கொள்கைகளையும் கருத்

ளுக்கிடையே அல்லாடும் ஒருவராகவே இப்போது உள்ளார்.

ஒருவரை சமாளிக்க, மற்றொருவரைப்பகைப்பதும், பின்னர் அவரை சமாளிக்க இன்னொருவ ரைக்குழப்புவதும், பிறகு அவரை தெளிவிக்க மற்றொருவரைச் சிக்க லில் மாட்டுவதுமென சந்திரிகா தன்னைத்தானே விடுவிக்கமுடியாத ஒரு பொறி வலைக்குள் மெல்ல மெல்ல சிக்கி வருகிறார் என்றால் மிகையில்லை.

ஏற்கனவே பலவீனமான நிலையிலுள்ள ஓர் அரசின் தலை வியாக தள்ளாடித்தள்ளாடி இயங்கி வரும் சந்திரிகா தற்போ தைய நிலையில் தனது அனைத்து பிரச்சினைகளுக்கும் தன்மீதான அனைத்து அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்து சமாளிக்கவேண்டுமானால்.

# நெருப்புடன் விளையாட முனைப்புக்கொள்ளும் அரசின் ஆபத்தான நகர்வுகளின் எதிர்காலம்



துக்களையும் மாற்றி மாற்றியே பழக்கப்பட்ட வரு மான சந்திரிகாவு க்கு இந்தப் பிரச் சினைகளிலும் அவ்வாறு நட ந்து கொண்டு தன் னை அச்சிக்கலி ருந்து உடனடியா க விடுத்துக் கொள்ள அதிக நேரம் எடுக்க வில்லை.

கையாகவே கருதிய ஜே.வி.பியினர் அவரது இந்த செயற்பாட்டை கடு மையாக விமர்சித்ததுடன் இதனைத் தம்மால் அங்கீகரிக்க முடியாது என்றும் கூறினார்.

சனாதிபதி என்ற அதிகார தோர ணையுடன் தமது விவகாரங்களில் சுயாதீனமாக நடவடிக்கை எத னையும் மேற்கொள்வதை ஜே.வி. பியினர் எந்தக்காலத்திலும் விரும் பவோ அனுமதிக்கவோ போவ தில்லை என்பதையே அவர்களின் சீற்றமிகு விமர்சனங்கள் எடுத் துக்காட்டின.

இதேவேளை சமாதான முன் னெடுப்புகள் தொடர்பாகவும் சனா திபதி எந்த முடிவையும் சுயாதீனமாக எடுக்கக்கூடாது என்பதிலும் ஜே.வி.பியின் நிலைப்பாடு சமரசங்க ளுக்குட்படாத ஒன்றாகவே உள்ளது.

கடந்த வாரத்தில் இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர் பாகவும் அதன் அடிப்படையிலும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த் தைகளைத் தொடர அரசு தயார் என்று சனாதிபதி செயலகச் செய்தி கள் வெளியானதையடுத்து கிளர்ந் தெழுந்த ஜே.வி.பியினர் இம்மா திரியான முயற்சியில் அரசு அல்லது சனாதிபதி இறங்க நேரிட்டால் அதன் விளைவை அரசு எதிர்கொள்ள நேரிடும் எனவும், விடுதலைப்புலிக ளுடன் இடைக்கால நிர்வாகம் தொடர்பான எந்தப்பேச்சுக்களையும் மேற்கொண்டால் அரசிலிருந்து ஜே.வி.பி விலகுவதுடன், அரசாங்கம் பெரும்பான்மைப்பலத்தை இழக்கும் அபாயத்தை தோற்றுவிக்கும் எனவும் எச்சரித்திருந்தது.

இந்த இரண்டு பிரச்சினை களுக்கும் - மிரட்டல்களுக்கும் தீர்வு காண அரசும்- ஜே.வி.பியும் சனா திபதியின் வருகைக்காகக் காத்தி ருந்தன.

தாய்லாந்தில் இருந்து திரும்பிய சந்திரிகாவுக்கு ஜே.வி.பியினரின் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட அவரால்

சரணடைதல் சந்திரிகாவின் தந்திரோபாய இயல்புகளில் மீளவும்

முதலில் அமைச்சர் அதிகார பொறுப்பு மாற்றத்தில் ஜே.வி.பியி னரிடம் சரணடைந்த சந்திரிகா பறித்ததை திருப்பிக்கொடுத்து பரிதாபமாக தோல்வி கண்டார். அவர் தான் செய்தது சரியென்றால் ஏன் திருப்பிக்கொடுக்கவேண்டும்?

ஆக ஜே.வி.பியினரின் அதிகார பலப்பிரயோகத்தின் அடிப்படை யிலான அச்சுறுத்தலுக்கு அவர் பயந்து பணிந்து விட்டார் என்று தானே அர்த்தம்!

அடுத்தது இடைக்கால நிர்வாகம் குறித்துப்பேசினால் ஆட்சிக்கு வழங் கும் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் நேரிடும் என்ற ஜே.வி.பியின் அச்சுறுத்தலுக்கும் சந்திரிகா அரண்டு போனார் என்றே கூறவேண்டும்.

தான் அப்படி எதுவும் கூற வில்லை என்று தெரிவித்து விட்டுக்குத்துக்கரணம் ஒன்றை அடித்து ஜே.வி.பியினரையே திணரடித்துவிட்டார் என்றே கூறவேண்டும்.

இப்போது அரசின் மூக் கணாங்கயிறு ஜே.வி.பி யின் கைக்குள் முழுமையாகப் போய் விட்டது என்றே கூறவேண்டும்.

ஜே.வி.பி இழுத்த இழுப்புக்கெல்லாம் திரும்பவேண்டிய நிலையில் ஒரு நிறைவேற்று அதிகார பலமிக்க சனாதிபதி இருக்கிறார் என்றால் அதனைவிட அவமானம் வேறு .... என்ன இருக்கிறது?

ஆனால் அவரால் இப்போது அடித்த குத்துகரணநிலையிலும் நிரந்தரமாக நிற்கமுடியுமா என்பதே கேள்வி.

ஒரு புறம் இந்திய கேள்வி இன்னொரு புறம் அமெரிக்க அழுத்தம்.

மற்றொரு புறம் சர்வதேச அழுத்தம் வேறொருபுறம் ஜே.வி.பி அழுத்தம், இப்படியாக சந்திரிகா அழுத்தங்க

தற்போதைய ஆட்சியைக் கலைத்து மீண்டும் தேர்தலை நடத்தி தனிப்பட்ட முறையில் ஜே.வி.பியின் துணையின்றி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வரவேண்டும்.

அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தோ அல்லது அதன் ஆதரவுடனோ ஜே.வி.பி யை புறந்தள்ளி விட்டு புதிய அர சொன்றை அமைக்க வேண்டும், அல் லது ஹெல உறுமய போன்றவர் களை தனது சர்வாதிகார பலம் கொண்டு அடக்கி சமாதான முயற் சிகளை ஆதரிக்க வைக்கவேண்டும்.

அல்லது தானே பதவியை விட்டு விலகிவிடவேண்டும்.

இதில் ஏதாவது ஒன்றாவது சாத்தியமாகுமா? எதுவுமே சாத்தி யமாகாது என்பதே இதற்கான பதிலாகும்.

எனவே சனாதிபதியால் அதாவது இலங்கையின் அதிகாரமிக்க பலம் அதிகார அம்மணியால் இந்த நாட்டில் இப்போதைக்கு எந்த வகையிலும் அமைதியோ சமாதானமோ ஏற்பட எந்த வழியும் தென்படுவதாக இல்லை.


எனவே தற்போதைய சகல பிரச்சினைகளும் தொடரும் அல்லது புதுவடிவம் கொள்ளும் சாத்தியக் கூறே தென்படுவதாக உள்ளது.

அரசுக்கு தற்போது இருக்கும் பெரும் நெருக்கடி நிதி நெருக் கடியேயாகும். நிதிவழங்கும் நாடுகள் சமாதானப்பத்திரத்தில் கையொப்ப மிடச் சொல்கின்றன. அரசுக்கு அதில் கையெழுத்து போடாமலே நிதியை பெறுவதிலேயே விருப்பம். சர்வதேச சமூகத்தின் சமாதான நிலை சிங்கள அரச தரப்பால் தொடர்ந்து கேட்க முடியாமல் இருப்பதென்பதே உண்மைதான்.

ஆனால் காதைப்பொத்திக் கொண்டு கருத்துக்கூறாமல் மௌனம் காத்து நிற்க சர்வதேசம் விடுவதா கவும் இல்லை.

அரசு என்னதான் செய்யப் போகிறது? அது என்ன செய்தாலும் சமாதானத்தை முழுமையாக கொண்டு வர அதனால் முடியாது என்பதே யதார்த்தம் ஏதோ ஒரு கட்டத்தில் அது நோர்வேயின் எச்சரிக்கையை நிரூபிக்கும் வகையில் நெருப்புடன் விளையா டியே தீரும் போல் உள்ளது...! ஆனால் நெருப்புடனான அரசின் விளையாட்டு கரிக்கட்டையாகக் கூடமிஞ்சாது சாம்பலாகத்தான் எஞ்சும் என்பதே போரியல் ஆய்வா ளர்களின் பலம் கலந்த கருத்தாகவும் உள்ளது.

# யாரை நம்புவது...?




பேச்சுக்களின் பின்னணியில் செயற்படும் சர்வதேசத்தை நம்பி இந்த அரசோடு பேசுவதா?.

நிலவும் நிலமையின் பிரகாரம் தமிழ்மக்கள் எந்த வகையிலும் அரசோடு பேசக்கூடிய வழிவகைகள் எதனையும் அரசு விட்டு வைக்கவில்லை.

காரணம். இதற்கு முன்னர் நடந்த பல சமாதான பேச்சுவார்த்தைகளின் போது புலிகள் இயக்கம் தமிழீழ கோரிக்கைக்கு மாற்றீடாக யாகவே நிலைமைகள் காணப்படுகின்றன.

காரணம்-பிரச்சினைகளுக்கு காரணமான இரண்டு தரப்பும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையீனமாக இருப்பது இயல்பானது. ஆனால் இந்த இரண்டு தரப்பையும் இணைக்கின்ற மூன்றாம் தரப்பு இந்த இரண்டு தரப்புகள் மீதும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் சம்மந்தப்பட்ட இரண்டு தரப்புக்கும் சமாதான முயற்சியின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும்.

இப்போது சர்வதேச



சனாதிபதி சந்திரிகா சிரட்டையும் கையுமாகத் திரிகிறார்.

அவரின் ஏறத்தாள பத்து வருடகாலத்தை அண்மிக்கும் அரசியல் சகவாழ்வில் அவருக்கு எஞ்சியது இந்த சிரட்டை மட்டும்தான்.

ஏனென்றால் தமிழர் மொழிவழக்கில் ஒரு பழமொழி ஒன்று உண்டு.

உருட்டும் பிரட்டும் சிரட்டையும் கையும் என்பது தான் இந்தப் பழமொழி. சந்திரிகா தனது பத்துவருட அரசியல் சகவாழ்வில் இதைத்தான் செய்து வருகிறார்.

ஆகவே சந்திரிகாவிடம் எஞ்சியது சிரட்டை தான். எஞ்சப்போவதும் ளது.

அவர் இறுதியாக பின் வாங்கியது 'தாம் ஒரு போதும் விடுதலைப்புலிகள் முன் வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தப் போவதாகக்கூறவில்லை என்பதே.

சந்திரிகாவின் இந்த பின்வாங்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒனறும் புதுமையானதல்ல தான். ஆனால் இந்த பின்வாங்கலின் பின் சமாதானத்துக்கான நிச்சயத் தன்மைக்கு சந்திரிகா என்ன சொல்கிறார்.

ஆக,. தமிழ்மக்களுக்கான செய்தி ஒன்றை நிகழ்ச்சி நிரலின் ஒழுங்கில் புலிகள் இயக்கம் வலியுறுத்திய விடயமும் புலிகள் தன்னை நம்பத்தயாரில்லாமல் இருந்ததனை நிரூபித்து விட்டேன் என்பது போலல்லவா இருக்கிறது.

அல்லது சனாதிபதி சந்திரிகா அம்மையார் புலிகளின் சார்பில் சில அரசியல் வேலைகளை செய்யத் தொடங்கி விட்டார் எனக்கொள்ளலாமா?.

அதாவது அரசு புலிகளுக் கிடையிலான சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போது விட்டுக் கொடுப்புகள் பற்றியும், இரு தரப்புகளுக் கிடையிலான நம்பிக்கைகள் பற்றியும் சர்வதேச சமூகத்தால் அதிகமாகவே பேசப்பட்டது.



அதன்பிரகாரம் இரு தரப்புகளுக்கிடையிலான விட்டுக்கொடுப்புகள் என்ற வகையிலும், நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வது என்ற வகையில் பல்வேறு விட்டுக் கொடுப்புகளையும் நல்லெண்ண சமிஞ்ஞைகளையும் புலிகள் விடுத்தனர்.

கைதிகள் பரிமாற்றம், ஆரம்பத்தில் பேச்சுவார்த்தைகள் சுமுகமாகநடைபெறவென சிக்கலான விடயங்களை தவிர்த்து சுமூகமான பேச்சுவார்த்தைக்கான பங்களிப்பை வழங்கியமையென புலிகள் தமது நல்லெண்ணங்கள் பலவற்றை வெளிப்படுத்தியபின் புலிகள் அரசினுடனான பேச்சுக்களின் போது இறுக்கமான போக்கை கடைப்பிடிப்பதற்கான நியாயங்களை மெய்ப்பிக்கும் காரியங்களை சனாதிபதி சந்திரிகா அம்மையார் புலிகளின் சார்பில் இப்போது அவரே மேற்கொள்கிறார்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் யாரை நம்பி சமாதானப் பேச்சுக்களை யாருடன் ஆரம்பிப்பது.

தமிழ்மக்கள் ஒன்றில் அரசை நம்பி அரசுடன் தமிழ் மக்களின் தீர்வுபற்றி பேசுவதா?.

இரண்டாவது பேச்சுக்களை ஒழுங்குபடுத்துவதோடு எந்த கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை. இதற்கு அப்போதைய அரசு களும் விசுவாசத்துடன் பேசுவது என்பதற்கு பதிலாக போலியான பேச்சுக்களை நடத்தினர். ஆனால் தமிழீழ கோரிக்கைக்கு மாற்றீடான திட்டத்தை அரசு சமர்ப்பிக குமாயின் அதனை பரிசீலிக்க தயார் என்ற தமது நிலைப் பாட்டை தெரிவித்தி ருந்தனர். இப்போது பேச்சுக் கான ஒரு வரையறையினையும், பேச்சுக்களை முன்னெடுக்கத் தக்கதாக ஒரு இடைக் கால தன்னாட்சி அதிகார சபைக கான திட்ட வரைபினையும் சமர்ப்பித்தாகி விட்டது. ஆனால் அரசு எதனடிப்படையிலும் பேசத் தயாரில்லை

**சிறி.இந்திரகுமார்**

என்ற வகையில் தமது நடவடிக்கைகளை வெளிப்படுத்துகிறது.

ஆகவே இந்த அடிப்படையில் அரசை நம்பி புலிகள் பேச்சுக்களை நடத்த முடியுமா? அல்லது பேச்சுக்களை நடத்தக்கூடிய ஏது நிலைகள் தானும் ஏதும் உண்டா?

இரண்டாவதாக சர்வதேச சமூகத்தை நம்பி பேச்சுக்களில் ஈடுபட்டுவரும் புலிகள் இயக்கத்தக்கு இந்த நம்பிக்கைகளில் கூட ஒரு நம்பிக்கையீனம் நிலவும்படி சமூகத்துக்கே அரசின் மீது நம்பிக்கையீனம் நிலவுகிறது. இதனால்தான் சர்வதேச சமூகம்கூட ஒருவிதகாத்திருப்பை மேற்கொள்கிறது போலத் தெரிகிறது.

இந்த காத்திருப்பின் பின் அறுவடையாக சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பது ஒன்று- சந்திரிகாவின் வீழ்ச்சி, இரண்டாவது ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியின்மீள்எழுச்சி. இந்த இரண்டு காரியங்கள் நடைபெறும் வரை தமிழ்மக்கள் காத்திருக்க வேண்டும் என்பது போலத்தான் நிலைமைகள் காணப்படுகிறது.

ஆனால் சந்திரிகாவின் வீழ்ச்சியின் மூலம் ஒரு வேளை ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் எழுச்சி நிகழுமாயின் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட கால ஆட்சியின் அனுபவங் கள் தமிழ்மக்களுக்கு போதுமானதாகவுள்ளது. ஆனால் சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் அனுபவமோ இனிமேல் தான் நிகழ வேண்டும்.

இந்தநிலையில் எது நிகழ்ந்தாலும் தமிழ்மக்கள் நம்பவேண்டியது. எதனை இறுதி இலட்சியம் என வரித்திக் கொண்டோமோ அதனை இன்னும் இறுக்கமாக பற்றிக் கொள்ள வேண்டும் என்பது தான்

சிரட்டைதான்.

இத்தனை வருட அரசியல் வாழ்வில் அவர் எத்தனையோ பின்வாங்கள்களை மேற்கொண்டார். பின்வாங்கல்களுக்கான வரையறைகளைத்தாண்டி நாளுக்கு நாள், நிமிடத்துக்கு நிமிடம் அவரின் சொல்லும் செயலும் பின் வாங்கியபடிதான் உள் சனாதிபதி சந்திரிகா அம்மையார் சூசகமாக வெளிப்படுத்தியுள்ளார் எனக் கொள்ளலாமா?

அதாவது இடை நின்றுபோன சமாதான முயற்சிகளுக்கு புலிகள் இயக்கம் கோரியதாக கூறப்பட்ட எழுத்து மூலமான வாக்குறுதியும், பேச்சுவார்த்தைக்கான

# நேர்நோக்கு

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்த என்று கூறிக்கொண்டு மீண்டும் மலிக் சமர விக்கிரமவையும் மனோதித்த வெலவையும் பேச்சுவார்த்தை நடத்துமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரியிருக்கிறார்.

சனாதிபதியின் ஆலோசகரான மனோதித்தவெலயும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான மலிக் சமர விக்கிரமவுக்கும் இடையே இவ்வாறான தொடர் பேச்சுவார்த்தை சனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதற்கும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கும் இடையே நடைபெற்றது. முக்கிய அமைச்சுக்கள் மூன்றை சனாதிபதி பொறுப்பேற்ற போதும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறமுடியாத நிலையில் இச்சந்திப்புக்கள் இடம் பெற்றன. இதன் பெறுபேறாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அப்போது பிரதமராக இருந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கூட சந்திப்புக்கள் இடம் பெற்றன. ஆனால் பயன்தான் எதுவும் கிடைத்து விடவில்லை.



தேசிய அரசாங்கம் அமைப்பது அதிகாரத்தைப் பங்கீடு செய்து, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஒத்த கருத்தை எட்டுவது என்றெல்லாம் இந்தச் சந்திப்புக்களுக்குக் காரணங்கள் கூறப்பட்டன. ஆனால் அவ்வாறான இணக்கப்பாடுகள் எதுவுமே எட்டப்படவில்லை. இறுதியில் ஐ.தே.முன்னணி ஆட்சி கலைக்கப்பட்டது.

இப்போது மீண்டும் மலிக்-தித்த வெல சந்திப்புக்கு சனாதிபதி அழைப்பு விட்டிருக்கிறார். இப்போது ஆட்சியதிகாரம் சனாதிபதியின் கையிலுள்ளது. ஆனால் இன்னமும் பெரும்பான்மைப் பலம் நிரூபிக்கப் படவில்லை ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து

## மலிக் - தித்த வெல எதுவரை?

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை அமைத்துக் கொண்டு விட்டது ஆனால் பெரும்பான்மையில்லாதது ஒருபுறமிருக்க ஜே.வி.பியுடன் தொடர்ந்தும் சமரச முயற்சிகள் தேவைப்படும் நிலையே காணப்படுகிறது. எடுத்ததற்கெல்லாம் கூட்டிலிருந்து வெளியேறுவது குறித்து அரசைக் கவிழ்ப்பது பற்றியும் ஜே.வி.பி.பேசி வருகிறது.

குறிப்பாக இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடானது அதனை ஓர் இறுதி நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இதில் சிறிதளவாவது தளர்வை ஏற்படுத்த வேண்டிய நிலையில் உலகின் பார்வையில் சந்திரிகா இருக்கிறார். அவ்வாறில்லாவிடின் அவர் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை முற்றாகக் கைவிட வேண்டி வரும். அது மாத்திரமல்லாது சிறிலங்காவின் பொருளாதார மீட்சியையும் எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டவரைபினூடாகத் தான் நகர்த்தத் தயாரென சந்திரிகா குமாரதுங்க அறிவித்ததும் உடனேயே அதுவே ஆட்சியின் முடிவாக இருக்கும் என ஜே.வி.பி எச்சரித்தது. இந்நிலையில் ஜே.வி.பி ஆட்சியை விட்டு வெளியேறினால் தாம் அரசுக்கு ஆதரவு தருவதாக ஐ.தே.க தெரிவித்தது.

இதனை உடும்பாகப் பற்றிக் கொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மலிக்-தித்த வெல குழுவைப் பணித்துள்ளார்.

இம்முறை ஆட்சியதிகாரம் பற்றியல்லாது இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் எதிர்க்கட்சி தலைவரைப் பங்கு கொள்ளும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் இணக்கப்பாட்டிற்கு வருவது தொடர்பாக முன்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முதலாவது ஆட்சிக் காலத்தில் லியன் பொக்ஸ் எனும் பிரித்தானிய அமைச்சர் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தினார். அது இப்பொழுது மறக்கப்பட்டு விட்ட ஒன்று. அதிலே இனப்பிரச்சினை விவகாரத்தில் பொது உடன்பாட்டுக்கு வருவது என்பதும் முக்கியமான விடயம். அதுவும் மறக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது மலிக்-தித்தவெல ஆகியோரும் இது தொடர்பான முயற்சியில் ஈடுபடப்போவதாகக் கூறப்படுகிறது. இதற்கான அ்ழைப்பை சனாதிபதியே விடுத்திருக்கிறார். ஆனால் இந்த முயற்சி வெற்றி பெறுமா? என்ற கேள்வியைவிட எத்தனை நாளைக்குத் தொடரப் போகிறது என்ற கேள்வியை எழுப்புவதே பொருத்தமாயிருக்கும். ஏனெனில் இந்த நடவடிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கப்பாட்டிற்கு வருவது என்பதை விட நெருக்கடி நேரங்களில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கையாள்கின்ற தந்திரோபாயங்களில் ஒன்று என்றே இதனைக் கொள்ளலாம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதற்கு அவசியமான ஒரு நிலையில் கூட்டுக் கட்சியான ஜே.வி.பி அதற்குச் செல்லவிடாது சனாதிபதி சந்திரிகாவை மிரட்டுகிறது. இந் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி சமாதானமே தனது ஒரே குறிக்கோள் அதற்காக ஆளும் கட்சியுடன் கூட எந்த ஒத்துழைப்புக்கும் தயார் எனக் காட்ட முயல்கிறது.

ஜே.வி.பி.யின் மிரட்டலுக்காக சமாதான முயற்சிகளை முற்றாகக் கைவிட்டுவிட்டதாகக் காட்டிக் கொள்ள இயலாத நிலையில், அதற்காக எதிர்க் கட்சி தலைவருடன் இணைந்து இந்த முயற்சிகளை மேற்கொள்வதாகக் காட்டுவதே மலிக்-தித்தவெல ஆகியோருக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்திருப்பதன் நோக்கமாகும்.

விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடாது தவிர்த்துக் கொண்டாலும் தான் சமாதான முயற்சிகளில் ஏதோவொரு வகையில் ஈடுபட்டிருப்பதாகக் காட்டுவதற்கு அவருக்கு இது உதவும்.

அதற்கு ஏற்றாற் போலவே அண்மைக்காலமாக ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் இணைந்து சமாதான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் எனவும் அதற்கு இந்தியா உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இப்போது ஐ.தே.க. தந்திரோபாய ரீதியாக விடுத்த ஒரு செய்தியின் அடிப்படையில் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுவதாகக் காட்டப்படுகிறது. இதன் மூலம் இணக்கம் எதுவும் எட்டப்படப்போவதில்லையாயினும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஏதோ செய்வது போலக்காட்டக் கூடிய அடுத்த நகர்வொன்று கிடைக்கும் வரை தொடரும்.

**வேலவன்**

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பட்டதாரிகளுக்கான வேலை வழங்கும் பட்டியலின் ஒரு தொகுதி வெளியாகிவிட்டது.

இதன்படி அரசு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் அரச துறைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நிரப்புகிற வகையில் பதினேழாயிரம் பட்டதாரிகளின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது.

இந்த பதினேழாயிரம் பட்டதாரிகளின் பெயர் விபரங்களை விட இன்னும் பத்தாயிரம் பேரின் பெயர் விபரங்கள் வெளியாகவுள்ளன.

ஆனால் இதுவரை வெளியாகியுள்ள விபரப்பட்டியல் அரசின் கபடத்தனத்தின் உச்சத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

இலங்கைத்தீவில் சிறுபான்மை இனங்களை அரசு இன்னும் சிறுமையாக எண்ணுவதோடு அரசின் பழிவாங்கலுக்கும் அரசிடம் கையேந்திப் பிழைக்க வேண்டிய ஏதிலிகளாக எண்ணும் மனப் போக்கில்தான் செயற்படுகின்றது என்ற உண்மையையும் அதன் பட்டதாரிகளின் வேலை வாய்ப்பில் வெளிப்படுத்தியுள்ளது.

அரசின் பட்டதாரிகளுக்கான விபரம் வெளியாகியதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணம் எங்கும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் உச்சமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை என வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் விஸ்தரித்துள்ளது.

இதற்கு பிரதான காரணம் அதை மேற்கொண்ட புறக்கணிப்பும் அரசியல் ரீதியிலான நயவஞ்சக செயலுமேயாகும்.

நாடு முழுவதும் உள்ள பட்டதாரிகளைக் கவனத்தில் கொண்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்கள் முற்றாகவே திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டதற்கு எந்த விதமான நியாயபூர்வமான காரணங்களையும் அரசு கொண்டிருக்கவில்லை.

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திர



கட்சி மற்றும் அரசுக்கு அடி வருடியாக செயற் பட்டு வரும் ஈ.பி.டி. பி போன்ற கட்சி களின் வாக்கை நிமிர்த்துக் கொள்ளவும், அரசியல் ரீதியாக தமக்கு ஒரு அனுகூலங்களைப்பெற்றுக்கொள்ளலாம் என்ற நப்பாசையின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகவே இந்த

## பட்டதாரிகளின் போராட்டத்துக்கு முடிவு என்ன...?

வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கை அமைந்துள்ளது.

பல வருடங்களாக போரின் கொடிய பிடியில் சிக்கி வாழ்ந்த போதும் தமது கல்வியை பல்வேறு இடர்களுக்கும் மத்தியில் அயராது தொடர்ந்து பல்கலைக்கழகம் சென்ற தமிழ்மாணவர்களை அரசு சீண்டியுள்ளது என்பதே பொருத்தமானதாக இருக்கும்.

வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பெயர் விபரங்கள் கூட எந்த விதமான ஒழுங்கு அடிப்படைகளுமின்றி தான்தோன்றித்தனமாக பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது இளமைக்காலத்தின் பெரும்பகுதியை கல்விக்காக செலவிட்டு பல வருடங்களாக தமது வீடுகளில் வேலை வாய்ப்புக்களுக்காக ஏங்கியிருந்தவர்களை அரசு எந்த அடிப்படையில் வேலை வாய்ப்புக்கு பட்டதாரிகளை தெரிவு செய்தது என்று தெரியாமலே பெயர் விபரங்களை அறிவித்துள்ளது.

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வழங்கும் நடவடிக்கையில் ஜே.வி.பியின் கரங்கள் பெருமளவு செல்வாக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் தனித்து இனவாதத்தை மட்டுமே வெளிப்படுத்தி வரும் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் இலங்கைத்தீவில் கொண்டு வர முயலும் புதிய கலாசாரம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தப்போகிறது என்பதற்கான முதல் நடவடிக்கையாகக் கூட இதனைப்பார்க்கலாம்.



தமிழ் மக்களின் இன்றைய வீறுபெற்ற விடுதலைப்போராட்டம் இத்தனை வலிமை மிக்கதாக தோன்றுவதற்கு எந்தக்காரணம் அடிப்படையாக இருந்தது என்பதை இன்றும் பெரும்பான்மை சிங்கள இனவாதிகள் புரிந்து கொள்ளவில்லை.


கடும் சீற்றத்துக்கும் சினத்துக்கும் உள்ளாகியிருக்கும் தமிழ் பட்டதாரிகளின் கோபங்களுக்கு அரசு எவ்வாறு பதிலளிக்கப்போகிறது என்பதில் தான் இதற்கான தீர்வு தங்கியிருக்கிறது.

**அ.அ.அ**

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் யுத்த நிறுத்த உடன்பாடு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியிருந்தது. கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேல் அமைதி சமாதானம். இலங்கையில் நிலவியதுடன் போரற்ற பொருளாதார அபிவிருத்தி தென் இலங்கையில் சாதகமான சூழலை ஏற்படுத்தியது. இதனால் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அதிக எதிர்பார்க்கையுடன் செயல்பட்டபோது சனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகித்து ஆட்சி மாற்றத்துக்கு வித்திட்டார். புதிய ஆட்சியில் ஜனதா விமுத்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) ஆதிக்கமுடைய சக்தியாக விளங்கியதுடன் ஹெலஉறுமய என்ற பௌத்த குருமாரைக் கொண்ட அரசியல் கட்சியும் கணிசமான இடத்தைப் பெற்றது. அது பௌத்த இராட்சியம் என்ற அரசியல் எண்ணக்கருவுடன் கட்சி அரசியலை ஏற்படுத்திக் கொண்டது. இத்தகைய இனவிரோத போக்குடைய தீவிர அரசியல் சக்திகளையும், நிறைவேற்று அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் சனாதிபதியையும் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வோ அல்லது போர்நிறுத்த உடன்பாடோ எவ்வாறு சாத்தியப்படும் என்ற சந்தேகம் நிலவுகிறது. இக் கருப்பொருளை விரிவாக புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

## கிழக்கு ஒரு பொறி...

கிழக்கு இலங்கை பற்றிய அரசியல் நேற்று, இன்று ஆரம்பித்த தொன்றல்ல. சுதந்திர இலங்கையின் அரசாங்கமே அதனை ஆரம்பித்து விட்டது. வடக்கையும் கிழக்கையும் துண்டாடுவதன் மூலம் தமிழர் தாயகக் கோட்பாட்டை உடைத்து சிங்கள மக்களின் ஆதிக்கத்தை கிழக்கில் நிலைநிறுத்த வேண்டுமென ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் திட்டமிட்டன.



கிழக்கை சிங்கள தேசமாக்குவதே ஆட்சியாளர்களின் திட்டமிடலாகும். இது தொடர்பாக உலகம் எப்படியான கொள்கையைக் கொண்டிருக்கும் என்பது அடுத்த கேள்வியாகும். அதனைச் சற்று விரிவாக பரிசீலிப்போம்.

இலங்கை இனப்பிணக்குடன் அதிகமான நெருக்கத்தைக் கொண்ட இந்தியா, அமெரிக்கா என்ற இரண்டு அரசுகளையுமே உலகம் என்ற பார்வைக்குள் தொடர்புபடுத்திப் பார்க்கமுடியும். ஐரோப்பிய யூனியன் கணிசமான பங்கை எடுத்தாலும் ஆழமான பிரிநிலை அரசியலுக்கு நேரடியாக பிரவேசிக்காத போக்கு காணப்படுகின்றது. வேண்டுமாயின் அமெரிக்க நலன் ஐரோப்பிய யூனியனுக்குள் ஊடுருவியிருக்கலாம். அதனால் சில வேலைத்திட்டங்களை அது வகுக்கலாம். ஆனால் அரசசார்பற்ற அமைப்புக்களில் பல அமெரிக்காவினது மறைமுக செல்வாக்குடன் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதனால் அவற்றில் நடவடிக்கையையும் உலகத்தின் நடவடிக்கையாக கணக்கில் எடுக்கப்படுகின்றன. இதில் நோர்வேயின் பங்கும் அமெரிக்க சார்ந்த நிலையில் இந்தியாவுக்கு அடிப்படையில் இரண்டு பிரதான நோக்கங்கள் உண்டு.

01. தமிழர் தேசியவாதத்தை உடைத்து விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தி ஈழக்கோரிக்கைக்கு மாற்றீடான ஒன்றை சாத்தியப்படுத்துவது.

02. கிழக்கை வடக்கிலிருந்து தமிழர் தாயகத்தை கூறுபோட்டு அசாத்தியமான ஒரு தீர்வை முன்வைப்பது.

இவை இரண்டையும் இந்தியா காலத்துக்குக் காலம் மாற்றி கையாண்டு வருகிறது. முதலாவதின் முக்கியத்துவத்தை விட இரண்டாவது வலுவாக காணப்படுமாயின் அதனை பின்பற்றி செயல் வடிவம் கொடுத்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதனை காண முடிகிறது. இந்தியாவின் ஆட்சிமாற்றம் ஏதும் திட்டமிட்ட வரையறைக்கு வெளியே செல்லாத அமுலாக்கத்தையே கொண்டியங்குவதைக் காணலாம். ஆனால் சில அரசாங்கங்களின் ஆட்சியில் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல் இந்திய நலன்கள் மறைமுகமாக காணப்படும். இதனை இந்திய ஆட்சித்துறை அயல்நாடுகள் மீது பிரயோகப்படுத்தும் தொடர்ச்சியான கொள்கையாக அமைந்திருக்கும்.

அம்சங்களிலிருந்து உணரமுடிந்தது. இலங்கையுடன் அமெரிக்கர் செய்த பாதுகாப்பு உடன்படிக்கையின் பிரகாரம் திருகோணமலை கடற்போக்குவரத்திற்கும், விமானப் போக்குவரத்திற்கும் முக்கியமான பிரதேசமாக உள்ளது.

எனவே, அமெரிக்காவைப் பொறுத்தவரை கிழக்கிலங்கையை வடக்கிலிருந்து பிரிப்பதும் அதனால் அமெரிக்க நலனுக்கு ஆபத்தற்றதெனவும் கணக்குப் போடுகிறது. குறிப்பாக இலங்கையில் போர் நிகழ்வது அமெரிக்காவின் ஏனைய பிராந்தியங்கள் மீதான நடவடிக்கைகளுக்கு ஆபத்துமிக்கது என்பதுடன் இலங்கையின் அமைதி தென்னாசியாவுக்குள்ளும் இந்து சமுத்திரத்துக்குள்ளும் அமெரிக்க நலன்களை பாதுகாக்கவல்லது. இதனால்



# சமாதான முயற்சிக்கான தடைகளும் உலக நாடுகளின் கொள்கை வகுப்புக்களும்

நோக்குவோம்.

புதிய அரசின் வரவு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளிடம் வழங்கி விடுவார் என்ற பிரசாரத்துடனேயே சாத்தியப்பட்டது. இப்புதிய அரசின் வரவு முறைதவறிய வரவாகவே காணப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஆட்சியைப் பறிப்பதற்கு சனாதிபதியின் சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் போட்ட உபாயமே மக்கள் சுதந்திர முன்னணியாகும். இம் முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் போர் நிறுத்தம் மீறப்பட்டதுடன் சமாதான பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டன. விடுதலைப்புலிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டகருணா முதன்மைப்படுத்தப்பட்டு வந்ததுடன் கிழக்கை குழப்பும் முயற்சியாக தமிழ்த் தேசியத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டது. பல போராளிகளையும், தமிழ்த்தேசியத்தின் புத்திஜீவிகளையும், ஊடகத்துறையினரையும் அழிக்கும் வேலையில் புலனாய்வுப் பிரிவு தீவிரமாக ஈடுபட்டமை தெரியவந்துள்ளது. இதற்கு பின்னால் சிறிலங்கா இராணுவமும் இராணுவத்தளபதிகளும் அரசாங்கத் தரப்பு தொடர்புடையதாக குற்றம் சாட்டுவதற்கு அதிக ஆதாரங்கள் உண்டு.

சனாதிபதியின் ஆளும் தரப்பு அமைச்சர்களும் இராணுவமும் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளமை அம்பலமாகிய விடயமே. அதுபற்றிய அரசாங்கத்தின் நிராகரிப்பு போலியானதென்பது தெளிவாக தமிழ் மக்களுக்கு தெரிந்த விடயம். ஆனால் கிழக்கு, அரசியல் சூழலை பயன்படுத்தி இலங்கையின் அமைதிச் சூழலை அரசாங்கம் குழப்ப முயலுகின்றதென்பதையே ஆழமாகப் அதற்கான முதல் நடவடிக்கையாக சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழர்களின் குடியிருப்புக்களை அழித்து ஆதிக்கத்தை நிலைநாட்டினர். சிங்களக் குடியேற்றங்கள் மீதான நெருக்கடி ஆரம்பிக்க தமிழ் முஸ்லிம்களின் குடியேற்றத்தை ஊக்குவித்ததுடன் அவர்களை தமிழர்களுக்கு எதிரானவர்களாக மாற்றுவதில் இலங்கை சிங்கள ஆட்சியாளர்கள் ஈடுபட்டனர். அதற்கான அணுகுமுறை தீவிரமடைய முஸ்லிம்கள் தமக்கான அரசியல் பலத்தை நிலைநாட்டிக்கொண்டு சிங்கள அரசுடன் பேரம்பேச ஆரம்பித்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆயுதம் தாங்கிய தமிழ் அமைப்புக்களை சிங்கள ஆட்சியாளர்கள் தமது பக்கம் அரவணைத்துக் கொண்டு கிழக்கின் அமைதிச் சூழலை நெருக்கடிக்கு உள்ளாக்கினர். ஆயுதம் தரித்த விடுதலை இயக்கங்களை முன்நிறுத்தியபோக்கு ஆட்டங்காண அவற்றில் கட்சி அரசியல் செயற்பாட்டுக்கு வாய்ப்பளித்தனர். கட்சி அரசியல் செயற்பாட்டின் வளர்ச்சிக்கூடாக சனநாயகம் என்ற சுலோகத்தை காண்பித்து தமிழ்த் தேசியத்தை உடைத்தனர். இவ்வாறே விடுதலைப்போராட்ட அமைப்புக்களை பயன்படுத்தியது போன்று விடுதலைப்புலிகளிலிருந்து வெளியேற்றிய கருணாவைப் பயன்படுத்தி இயல்புச் சூழலை தமக்கு சாதகமாக்கி வருகின்றன.

சுதந்திரத்திற்கு பின்பு இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் கிழக்கு தொடர்பாக வகுத்த கொள்கை கணிசமான இலாபத்தை கொடுத்துள்ளதென்றே கூறலாம். கிழக்கின் இயல்பு நிலையை முற்றாகத் தகர்த்து தமிழர்களின் பாதுகாப்பை கேள்விக்குரியதாக மாற்றி அணுகப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை மத்திய அரசும் மாநில அரசும் அதனது உளவுத் துறைகளும் கூட்டான போக்கை கடைப்பிடிப்பதில் அதிக கவனம்

**கே.ரி.கணேசலிங்கம்**

செலுத்திவருகின்றன. கிழக்கின் அரசியல் சூழலை ஆபத்தான அரசியல் கையாள விரும்பும் இந்தியாவின் போக்கு ஊடகங்களூடாக உணரமுடிந்தது. விடுதலைப் புலிகளுக்குள் மிக ஆபத்தான நெருக்கடி காணப்படுகிறதென்பதை உலகத்திற்கு அம்பலப்படுத்துவதில் இந்திய ஊடகங்கள் கணிசமான பங்குவகித்தன. இந்தியாவில் கொள்ளை வகுப்பை மேற்கொள்ளும் The Hindu பத்திரிகை கருணா குழுவின் மீதான விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கையை கண்டித்ததுடன் இலங்கை அரசு கருணாவை பாதுகாக்க தவறியது ஏற்றுக்கொள்ள முடியாதென ஆசிரிய தலையங்கத்தில் குற்றம் சாட்டியது. கருணாவின் அரசியலுக்கு மறைமுகமான சக்திகள் பல தொடர்புபட்டுள்ளன என்ற குற்றச்சாட்டின் பின்புலத்தையும் உணரமுடிகின்றது.

அதாவது கிழக்கை வடக்குடன் இணைப்பதில் கவனம் செலுத்திய இலங்கை- இந்திய உடன்பாடு அது பற்றிய முக்கியத்துவத்தை சற்று அடக்கியே வாசிக்கின்றது. அத்துடன் முஸ்லிம்களின் தனியலகு தொடர்பான விடயத்தினை ஊக்கப்படுத்துவதுடன் பேச்சுக்களில் மூன்றாம் தரப்பாக முஸ்லிம்களை இணைக்க வேண்டும் என்பதில் இந்தியா கவனம் செலுத்துகிறது. இதனை அவதானிக்கும் போது கிழக்கை பிரிநிலைப்படுத்த இந்தியா விரும்புவது தெளிவாகின்றது.

எனவே கிழக்கில் காணப்படும் அசாத்தியமான சூழலை பெரிதுபடுத்தி தமிழ் மக்களிடமிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தை அந்நியப்படுத்தலமென்பதே இந்திய புலனாய்வு உட்பட்ட அனைத்துத் தரப்பினரதும் நோக்கமாகும். முதலில் விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துவது இரண்டாவது அதனூடாக தேசிய விடுதலைப்போராட்டத்தை தகர்ப்பது. இவையிரண்டும் சாத்தியமாகும் போதும் பலவீனமான நிலை தோற்றம் பெறும். அப்போது தனது நலன் சார்புடைய சக்திகளை பதவியிலமர்த்தி இந்தியா தமிழரைப் பாதுகாக்கிறது என்ற தோரணையைக் காட்டுவதாகும்.

இந்த விடயத்தில் அமெரிக்கர்கள் தரப்பு எப்படி தனது தந்திரத்தையும் அணுகுமுறையையும் கையாள விரும்புகின்றது என்பதனை விரிவாக நோக்குவோம்.

இந்தியாவைப் போன்று அமெரிக்காவுக்கும் இலங்கை மண்ணில் அதிக இலாபங்களும் நலன்களும் காணப்படுகின்றதென்பதை அமெரிக்க இராணுவத் தளபதியே அண்மையில் கூறியிருந்தார். இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையத்தில் உள்ள தென்ற பழையவாதத்தையே அவர்கள் மீண்டும் மீளுருவாக்கம் செய்துள்ளனர். ஆனால் கிழக்கில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் சமமான நலன்கள் உண்டென்பது திருகோணமலை எண்ணெய்க் குதங்களை குத்தகைக்கு எடுத்ததன் மூலம் புரிந்துகொள்ளலாம். திருகோணமலையின் துறைமுகம் மற்றும் பிரதேசங்கள் பற்றி அமெரிக்கர்கள் மிகத் தெளிவாகக் கற்றுவைத்துள்ளனர். இதனை Benjamin maes என்ற அமெரிக்கர் (American Times) நேரடியாக வெளிப்படுத்திய

இலங்கை அரசாங்கம் விரும்புவது போல் வடக்கை தனிமைப்படுத்தி ஒரு தீர்வை வழங்குவது அமைதியை பேணவைப்பதுடன் அமெரிக்க இலங்கை நெருக்கத்தையும் பாதுகாக்கலாமென கருதுகின்றது. அத்தகைய பாதுகாப்புக் கொள்கையில் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் கூட்டுத்தன்மை உண்டு என்ற அடிப்படையில் கிழக்கு அரசியல் குழப்பத்தை தூண்டிவிட்டு அரசியல் இலாபம் தேட அமெரிக்கா விரும்புகிறது.

கிழக்கில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்திற்கு பின்பு நடந்த பல படுகொலைகளுக்கு எத்தகைய வார்த்தையையும் வெளியிடாத அமெரிக்கா சிறிலங்காவின் இராணுவப் புலனாய்வு உறுப்பினர் கொல்லப்பட்டபோது விடுதலைப்புலிகளை எச்சரித்ததுடன் கிழக்கில் ஏற்பட்டு வரும் நிலைமையை கண்டித்திருந்தது. மேலும் சிறுவர்களை படைக்கு சேர்ப்பதில் விடுதலைப் புலிகள் மீண்டும் ஈடுபட்டுவருவதாகவும் அமெரிக்கா குற்றம் சுமத்தியது. இவற்றை ஒரு காலக்கிரமான பணியாகவே அமெரிக்கா மேற்கொண்டு வந்தது. எல்லாக் காலகிரம பணிகளிலும் விடுதலைப்புலிகளை வெளிப்படையாக கண்டிக்காதது போல காட்டிக் கொண்டாலும் திரைமறைவில் பல நடவடிக்கைகளை விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொண்டு வந்தது. கிழக்கு அரசியல் குழப்பத்திற்கு சில அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆதரவாகவும், அதனை நியாயப்படுத்துவதாகவும் காணப்பட்டது. அவ் அரச சார்பற்ற அமைப்புக்கள் அமெரிக்காவின் பின்தளத்துடனேயே செயல்பட்டு வருவதாகவும்

(25 ஆம் பக்கம் பார்க்க..)

# தொழிற்கல்வியின் முக்கியத்துவம் இன்றும் உணரப்படவில்லை

**- கிளி . தொழில்நுட்பக் கல்வி நிறுவன அதிபர். தி. பிரபாகரன் -**

இன்றைய 'உலக மய மாதல்' பொருளாதார முறைமை யின் கீழ் அறிவும் தொழில் நுட் பமும் தகவலும் முறைமையான தொடர்பாடலும் சீரான மனித உறவு நுட்பங்களுமே அபி விருத்தியையும் பொருளாதாரச் செழிப்பையும் ஏற்படுத்தும் மார்க் கங்களாகும். இதனைக் கருத்தில் கொண்டே இன்றைய சூழ்நிலை யில் எமது வேலைத்திட்டங் களை வகுத்துள்ளோம் என்கிறார் கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்வி நிறுவன அதிபர் திரு. திருச்செல்வம் பிரபாகரன். யாழ். பல்கலைக்கழக பொருளியல் சிறப்பு இளங்கலைமாணிப் பட்ட தாரியான இவருடன் பல இளை ஞர்கள் இணைந்து நிர்வகிக்கும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனத் தின் செயற்பாடுகள் பற்றிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தொழில், தாழ்வான தொழில் எனப்பாகுபடுத்துவதே எமது சமூகத்தை உயர்த்தும், வழிகாட் டும் மனப்பாங்காக அமையாது எனக்குறிப்பிட்டார்.

இன்று வரை 800 க்கு மேற்பட்டவர்கள் இந்த நிறுவனத் தில் இருந்து பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர். இவர்களில் அநேகமானோர்-மேசன் பயிற்சி, தச்சுவேலைப் பயிற்சி பெற்று வெளியேறியோர் ஆவர். இன் றைய சூழ்நிலையில் நல்ல ஊதி யம் கிடைக்கும் இந்தத் தொழில்களில் ஓரளவு படித்த இ டை

கண்டாவளைப் பிராந்திய நிலை யங்களிலும் பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

இப்போது எமது பயிற் சித் திட்டங்கள் நான்கு வகை யாக நடத்தப்படுகின்றன. தொழிற்திறன் விருத் தியை அடிப்படை யாகக் கொண்டு வீட்டு மின் இணைப்பு, வானொலி தொலைக்

கொள்ளமுடியும். அது மட்டு மல்ல, இன்று உலகில் 102 நாடுகளில் தொழில்நுட்ப அங்கீ காரத்தைப் பெற்றுள்ள இலண் டன் சிற்றி அன்கில்ட் சான்றி தழ்களும் பெற்றுக் கொள்வதற் கான ஏற்பாடுகளும் எமது நிறு வனத்தின் ஊடாக மேற் கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இன்று கணினி தவிர்க் கப்பட முடியாத ஓர் அங்கமாக (மனித வாழ்வில்) மாறி விட்டது. இலண்டன் ரீ.ஆர்.ரெக் நிறுவனம் மிக நவீன கணினிப் பயிற்சி நிலையம்

நிறுவனத்தில் உருவாக்கப்பட்டு விட்டது. இது இப்போது எமது நிறுவனத்தில் பாரம்பரியமாக நடத்தப்பட்டு வந்த ஆங்கிலத் தேசிய சான்றிதழ் மாணவர் களுக்கும் ஏனைய கற்கைநெறி மாணவர்களுக்கும் பயன்படுகிறது.

கணக்கீடு, மற்றும் முகா மைத்துவம் தொடர்பான கற்கை களும் எமது நிறுனத்தில் நடை பெறுகின்றன கணக்கீட்டிலான தேசி யச் சான்றிதழ் பயிற்சியுடன் இப்போது கணக்கீட்டு தொழில் நுட்பவியலாளர் நிறுவன ஆங் கில மொழிமூலப் பாடநெறியை ஆரம்பிக்கவுள்ளோம். இதன் மூலம் நவீன கணக்கீட்டு முறைகளை தெரிந்த ஒரு சமூகம் இங்கு உரு வாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இப்பயிற்சியில் இருபது மாண வர்களுக்கு இலவசமாகப் பயிற்சி பெறும் வாய்ப்பும் ஏற் படுத்தப்பட்டுள்ளது என்றார்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில் வாய்ப்புகளைப் பெறும் பயிற்சி நெறிகளை அதற்கான முயற் சிகளை உருவாக்கிய இவர்களு டைய முயற்சி பாராட்டுதற்குரி யது. எனினும் விவசாயத்தையும், மீன்பிடித்தொழிலையும் மைய மாகக் கொண்ட எமது பிரதேசத் தின் வளங்கள் இன்று திறந்த


யுத்தம் கோர தாண்ட வமாடிய தொண்ணூறுகளின்



தொழில் நுட்பக் கல்லூரி பதிவுகளுக்கான நடவடிக் கைகள் தொடர்பில் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின செயலாளர் வருகைதந்திருந்தபோது.

பிற்பகுதியில் இந்த நிறுவனம் இடம் பெயர்ந்த வாழ்நிலையில் ஆனைவிழுந்தான் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், போறூட் நிறுவனம், பொருண்மிய மதியு ரையகம், தமிழீழ கல்விக் கழகம், வலயக்கல்விப் பணிமனை மற்றும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தியில் அக்கறை யுடைய மனிதர்கள் எனப் பலருடைய முயற்சியின் ஒருங் கிணைப்பே இந்த நிறுவனமாக உருப் பெற்றதாகக் குறிப்பிட்ட பிரபாகரன் எம்முடைய வன்னிப் பகுதி மக்களிடையே தொழிற் கல்வியின் முக்கியத்துவம் இன்றும் உணரப்படாத ஒரு சூழ் நிலை நிலவுவது வேதனைக் குரிய விடயம் எனக்குறிப்பிட்டார். தொழிற் கல்வி பற்றிய விழிப் புணர்வும், சிறு தொழில் முயற்சி அல்லது கூட்டுறவு முறையில் அமைந்த நடுத்தர தொழில் முயற்சிகளே எமது தாயகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கான அடித்தளமாகும் என குறிப்பிடும் அவர் தொழில் சார்ந்த ஏற்றத் தாழ்வுகள் அல்லது உயர்வான

நிலைக்கல்வியை முடித்த இளை ஞர்கள் பயிற்சி பெற முன்வரா திருப்பது எமது சமூகத்தின் மனப்போக்கையே காட்டுகிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்புள்ள இந்தத் தொழில்களில் உயர்நிலைப் பயிற்சிகளை 4 மாதங்களுக்கு




மொழியாய்வு கூடம்.

நடத்துவதற்கு இப்போ நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு கிளிநொச்சியில் அமைந் துள்ள தலைமை நிறுவனத்தி லும், பூநகரி, கச்சாய், பளை,

காட்சிப் பொறிமுறை, மர வேலை, மேசன் பயிற்சி, மோட் டார் தொழில்நுட்பம் என்பனவற் றிற்கான வகுப்புக்கள் நடத் தப்படுகின்றன. விரைவில் உருக் கியிணைப்பு அதாவது வெல்டிங் மற்றும் இயந்திரப் பொருத்துனர் பயிற்சிநெறிகள் தொண்டர் நிறு வனங்களின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்போது எமது நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினரால் (NITA) பரீட்சை நடத்தப்பட்டு சர்வதேச அங்கீகார முடைய தொழில்நுட்பவியலா ளர்கள் சான்றிதழ்கள் வழங்கப்படு கின்றன. தொழில் அனுபவ முடையவர்களும் இச்சான்றி தழை பெறுவதற்கான பரீட்சைக் குத் தோற்றுவதற்குரிய ஏற்பாடு களை எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொண்டு வருகி றோம். தொழிற்திறன் சான் றிதழ்கள் மின்னியல், கட்டடத் தொழில், இயந்திரத் தொழில், கோட்குடல் தொழில்கள், ஏன்

மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், சான்றிதழ் கள் வரை இந்தத் தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபை பரீட்சை ஊடாகப் பெற்றுக்

ஒன்றை உருவாக்கி இப்போது எம்.எஸ். அலுவலகப் பயிற்சிகள் வழங்கி வருகிறது. இவர்க ளுக்கான சான்றிதழ்கள் இலண் டன் சிற்றி அன் கில்ட்



நவீன கணினிக் கூடம்.

நிறுவனத்தால் வழங்கப்பட ஏற் பாடாகியுள்ளதுடன் எதிர் காலத் தில் மேலதிக தகவல் தொழில் நுட்பப் பயிற்சிகளும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதே ரீ.ஆர்.ரெக் நிறு வனத்தின் உதவியுடன் இப்போ ஆங்கிலம் கற்பித்தலிலான டிப் ளோமா பயிற்சிநெறி ஒன்று நடத் தப்பட்டு வருகிறது. இப் பயிற்சி நெறிதொடர்ந்தும் நடத்தப்படு

**நேர்காணல் -திசையன்**

வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இவர்களுக்கான பயிற்சிகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட சிறப்புத் தகைமையுடையோர் பயன்படுத்தப்படுவதுடன் மொழி கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பப் பயன்பாட்டையும் இணைத்துள்ளோம். அதுமட்டு மல்ல, கல்வித்தொழில்நுட்ப பிரயோகத்துடன் கூடிய நவீன மொழி ஆய்வுகூடம் ஒன்றும் (Language Laboratary) எமது

பொருளாதார உலக அமைப்பின் கீழ் மிக மலிவான விலையி லேயே விற்கப்படுகிறது. இத னால் எமது விவசாயிகளும் மீனவர்களும் பொருளாதார இலக் கில் இன்றும் மேம்பாடடைய முடியாத நிலையே காணப்படு கிறது. அறுவடையின் பின்னான பொருத்தமான தொழில்நுட்பப் பிரயோகத்துடன் கூடிய பயிற்சி களும் இணைக்கப்படுமாயின் எமது பிராந்தியத்தின் மாம்பழம், பலாப்பழம், மீன்வளம் எல்லாம் தகரப் பேணிகளில் அடைக்கப் பட்ட நிலையில் சர்வதேச சந்தை களில் நல்ல விலை போகும் வாய்ப்பு உரு வாகும். 100 ரூபாய் க்கு விலை போகும் யாழ்ப் பாணத் திராட்சை, இரசமாக்கப் பட்டால் 1000 ரூபாய்க்கு விலை உயரும். இதற்கான தொழில்நுட் பங்களுக்கும் இந்த நிறுவனம் வழிகாட்டுமாயின் எங்கள் வாழ் வை மாற்றும் ஒரு நெம்புகோ லாக இந்த நிறுவனமும் அமை யும் என்பது பொதுவாக நாம் எதிர்பார்க்கலாம்.

# கலாசார சீரழிவு நடவழக்கைகளுக்கு தண்டனையை அதிகரித்து கட்டுப்படுத்தவுள்ளோம்

## -தமிழீழ நீதி நிர்வாகப்பொறுப்பாளர் பரா

**நேர்காணல்**
**சு.பிரபா**

**தமிழர் தாயகப்பிரதேசத்தில் நீதி நிர்வாகத்தை செவ்வனே நிறைவேற்றி வரும் தமிழீழ நீதிநிர்வாகத்தினரின் செயற்பாடுகளை தெளிவுபடுத்தும் வகையில் இவ்வாரம் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா அவர்களை நாம் சந்தித்தோம்.**

**அவர் தமிழீழ நீதி மன்றங்களின் செயற்பாடுகள் பற்றியும் மனித உரிமைகள் தொடர்பாகவும் எம்மோடு ஆழமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டார் அவர் எம்மோடு பகிர்ந்து கொண்ட கருத்துக்களை எமது வாசகர்களுடன் நாமும் பகிர்ந்து கொள்கிறோம்.**



**தமிழீழ நீதிநிர்வாகத் துறையின் கீழ் தமிழீழ நீதிமன்றுகளில் பதிவு செய்யப்பட்ட சில வழக்குகள் மிக நீண்டகாலமாக தீர்வுகாணப்படாதுள்ளன. அவ்வாறு காணப்படுகின்றமைக்கான காரணம்?**

தற்போது சில வழக்குகள் காலதாமதம் அடைவதற்கு முக்கிய காரணங்கள் சில இன்றைய சமாதானகாலச் சூழலில் குற்றச் செயல் புரிந்தவர்கள், அதாவது மனைவிமாரை விட்டு அல்லது பல்வேறு சமயங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தால் அவர்கள் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள பிரதேசங்களுக்கு சென்றுள்ளனர். இவர்களை நீதிமன்றுக்குக்கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் சில வழக்குகள் காலதாமதம் அடைகின்றன.

எதிராளிகள், வழக்காளிகள் தொடர்ச்சியாக நீதிமன்றத்துக்கு வராது விடுகின்றமையால் தொடர்ச்சியாக அந்த வழக்குகள் காலதாமதம் அடைகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு மூன்று தவணைகளுக்கு வழக்காளியோ அல்லது எதிராளியோ சமுகம் அளிக்காது விட்டால் நாங்கள் அவ் வழக்கை ஒரு முகமாக விசாரித்து தீர்ப்பினை வழங்கவுள்ளோம். குறிப்பாக கிளிநொச்சிப் பிரதேசத்தை பொறுத்தவரையில் பெருந்தொகையான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதனால் நீதியாளரின் தொகையினை நாங்கள் அதிகரித்து நீதிமன்றச் செயற்பாடுகளை, வழக்குகளை வேகமாக நகர்த்துவதற்கான ஒழுங்குகளை தற்பொழுது செய்துள்ளோம்.

**இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் பல்வேறு குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப் படுகின்றன. இதனைக்கட்டுப் படுத்துவதற்கான நடவடிக் கைகள் ஏதும் மேற்கொள்ளப் படுகின்றனவா?**

அதிகமாக இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுவதற்கு முக்கிய காரணம் எதிரியால் ஊக்குவிக்கப்படுவதும் அதாவது குற்றச் செயல்களை தூண்டுகின்ற வகையான கலாசார சீரழிவுகளுக்கு உடந்தையாக எதிரியும் அவர்களுடைய அடிவருடிகளும் செயற்படுவது முக்கிய காரணமாகும். இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இன்றைய சமாதான காலத்தில் எங்களுடைய போராளிகள் நிறைய போர் அங்கு சென்றமையால் தற்போது ஓரளவுக்கேனும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எங்களுடைய சமூக சீரழிவுகள் குற்றச் செயல்களை குறைப்பதற்கு போராளிகளின் நடவடிக்கைகள் காரணமாக இருக்கின்றன. இதனை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு அரசும் அரச படைகளும் இல்லாத பட்சத்தில்தான் குற்றச் செயல்களை முற்று முழுதாகத் தடுக்க முடியும் .

**கலாசார சீரழிவுகளையும் சமூக விரோத செயல்களையும் எந்த வகையில் கட்டுப் படுத்தி வருகின்றீர்கள்?**

தமிழர் தாயகப்பகுதிகளில் எங்களால் அமைக்கப்பட்டு இருக்கின்ற கலாசார அமைப்புக்கள் அரசியல் நடவடிக்கைகள் யாவுமே கலாசார விழுமியங்களை பாதுகாக்கின்ற வகையிலேதான் அமைகின்றன. அடுத்து எங்களுடைய சட்ட திட்டங்கள் யாவுமே குற்றச் செயல்களையும், சமூக சீரழிவுகளையும் தடுக்கக் கூடிய வகையில் உருவாக்கம் பெற்றுள்ளது. அந்த வகையிலே கலாசார சீரழிவு என்று கூறுகின்ற சம்பவங்களுக்குப் பாரிய தண்டனைகளை கொடுத்து அவற்றை தடுக்கும் நடவடிக்கைகளை ஏற் படுத்தி வருகின்றோம்.

**தமிழீழ நீதி நிர்வாகத் துறையில் குடும்ப ஆலோசனை சட்ட சபை என்ற ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதனுடைய செயற்பாடுகள் என்ன?**

உண்மையில் நீதிமன்றச் செயற்பாடுகளில் சாதாரணமாக குடும்பங்களில் ஏற்படுகின்ற சமூகப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக வருகின்ற பிரிவுகள் முரண்பாடுகள் என்பவற்றை பகிரங்க நீதிமன்றுகளில் விசாரித்து அந்தப்பிரச்சினைகளை மேலும் விரிவுபடுத்துகின்ற பிரிவுகளை அதிகரிக்காது, சாதாரணமாக இதில் அனுபவம் வாய்ந்தவர்களையும் தேர்ச்சி பெற்றவர்களையும் கொண்டு அதனூடாக அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை குடும்ப பிரிவுகள் ஏற்படுத்துவதற்' கான காரணங்களை ஆராய்ந்து கூடிய வரையில் அவர்களை சேர்த்து வைக்கின்ற ஒரு அமைப்பாகவோ, அல்லது அவர்களுடைய முரண்பாடுகளை தீர்க்கின்ற ஆலோசனை வழங்குகின்ற அமைப்பாகவோ இந்த குடும்ப ஆலோசனை அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

ஆனால் அதனுடைய முடிவுகளை நீதிமன்றம் தான் தீர்மானிக்கும். ஆனால் இவர்கள் ஒரு ஆலோசனையைக் கொடுத்து குடும்பங்களுக்குள்ள பிரச்சினைகளை முடிந்த வரையில் தீர்க்கக்கூடிய சில ஆலோசனைகளை முதற்கட்டமாக வழங்கக்கூடிய கட்டமைப்பாக அதை நாம் தற்பொழுதுதான் அமைத்துள்ளோம். அதனை தொடர்ந்து நடாத்துவதற்கான நடவடிக்கைகளையும் அதற்கான வகுப்புக்களையும் பயிற்சிகளையும் தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றோம். இது எதிர்காலத்தில் பாரிய வெற்றிகளை எட்டும் என எதிர்பார்க்கின்றோம்.

**மனித உரிமைச் சட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்?**

மனித உரிமைச் சட்டம் என்று கூறுகின்ற போது ஒரு நாட்டில் அந்நாட்டுமக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும் சுதந்திரமாகப் பேசுவதற்கும் இயல்பாகத் தங்களுடைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் அத்தோடு அவர்களுடைய சொத்துக்கள் உடமைகள் என்பவற்றை சுதந்திரமாக கையாளுவதற்கும் வாழ்வியலில் பண்பாடு கலாசாரம் என்பவற்றை பேணிநடப்பதற்கும் தடையான காரணிகளை நீக்கி சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதற் காகத்தான் மனித உரிமை பேணும் அமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் தான் அவர்களுடைய செயற்பாடுகள் அமையும். எங்களை பொறுத்த வரையில் தமிழீழ பிரதேசத்தில் உண்மையில் நீதி நிர்வாகம் அரசியல் துறை காவல்துறை ஆகியவற்றின் செயற்பாடுகளில் பெரும்பாலான செயற்பாடுகள் எமது மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையில் அவர்கள் சுதந்திரமாக வாழவேண்டும். அவர்களுடைய பண்பாடு கலாசாரம் மேம்படுத்தப்பட வேண்டும். என்ற அடிப்படையில் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. இச்சட்டம் எல்லா நாட்டுக்கும் ஒரேமாதிரியாகவே இருக்கின்றது.

**தமிழீழ நீதிநிர்வாக சட்டங்கள் எந்த அடிப்படையில் அமைகின்றன?**

தமிழீழ சட்டங்கள் பொதுவாக உலகளாவிய ரீதியில் சட்டங்கள் என்னென்ன தேவைகளுக்காக உருவாக்கப்படுகின்றதோ அந்த அடிப்படையில் எங்களுக்கும் குற்றவியல் சட்டம், சிவில் நடைமுறைச் சட்டம் பாரம்பரியங்களை பேணுகின்ற வகையில் தேசவழமைச் சட்டத்தில் சில மாற்றங்களை உருவாக்கி இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ற வகையில் அவற்றில் சில மாற்றங்காணச் செய்து அந்த சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எனவே எமது மக்களுடைய வாழ்வை மேம்படுத்துகின்ற வகையில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுகின்ற வகையில் குற்றச் செயல்கள் சிவில் உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையிலும் தமிழீழச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**தமிழீழச் சட்டத்தில் சாவொறுப்பு நிறைவேற்றப் படுகின்றதா? அது எவ்வாறான குற்றச் செயல்களுக்கு இத் தண்டனை விதிக்கப்படுகின்றது?**

சாவொறுப்பு வழங்கு வது என்பது ஓர் பாரிய குற்றச்செயலுக்கு ஆழமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பல மாவட்ட நீதிமன்று மேல் நீதிமன்று மூலம் விசாரணைகள் செய்யப்பட்டு மேல் முறையீட்டு நீதி மன்று, சிறப்பு மன்று போன்ற மன்றுகளினூடாக விசாரணைகள் செய்யப்பட்டு குற்றங்கள் உறுதிப்படுத்தப்பட்டுப் பின்னர் கருணை மனு பரிசீலனை குழுவினுடைய அனுமதியின் பின்புதான் சாவொறுப்பு விதிப்பதுண்டு. இது வரையில் நான்கு வழக்குகளுக்கு மட்டும் சாவொறுப்பு விதித் துள்ளோம். அவற்றுக்கு நான்கு பிரதான காரணங்கள். சாவொறுப்பு எமது சட்டத்தில் இருக்கின்றது. அவை யாவன, பாலியல் வல்லுறவு, திட்டமிட்ட கொலை, பாரிய கொலை கொள்ளை, போதைப் பொருள் கடத்தல், விற்றல் போன்றன பாரிய குற்றங்களாக இனங்காணப்பட்டு அவற்றுக்குக் கூடிய தண்டனையாக சாவொறுப்பு விதிக்கப் படுகின்றது. இது எமது சட்டத்தில் உள்ளது.

**தமிழீழ நீதி நிர்வாக துறையினரால் நடைமுறைப் படுத்தப்படும் சட்டக் கல்லூரி தொடர்பாகவும் அதன் செயற்பாடு தொடர்பாகவும் கூறமுடியுமா?**


தமிழீழ சட்டக் கல்லூரியானது 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களால் எங்களுக்கான ஒரு நீதி நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்குகின்ற பொழுது எங்களுடைய போராளிகள் பொதுவானவர்கள் படித்து சட்ட ரீதியாக தேர்ச்சி பெற்றுத்தான் நீதிமன்றங்களில் சட்டவாளர்களாகவும் நீதியாளர்களாகவும் செயற்பட்முடியும். அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் தமிழீழ சட்டக் கல்லூரி உருவாக்கப்பட்டது. அந்தச்சட்டக் கல்லூரி தொடர்ச்சியாக இன்று வரை இருந்து வருகின்றது.

**எவ்வாறு சட்ட நடைமுறைகள் இறுக்கமாகப் பேணப் படுகின்றன?**

குறிப்பாக எங்களுடைய சட்டத்தில் பெண்கள் சிறுவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற தன்மைகள் எங்களுடைய சட்டத்தில் இறுக்கமாகப் பேணப்படுகின்றது. இவற்றுக்கு ஏனைய நாடுகளில் இருக்கின்ற சட்டங்களை விட இறுக்கமான சட்டங்களின் அடிப்படையில் அதிகூடிய தண்டனைகள் எமது சட்டத்தின் மூலம் விதிக்கப் படுகின்றன. அது எமது சட்ட அமைப்பில் சேர்க் கப்பட்டுள்ளன.

அத்தோடு சட்டவாளர்களைப் பொறுத்தவரையில் சட்டவாளர்கள் நீதியாகவும் நேர்மையாகவும் செயற்படவேண்டும் என்பதும் வரையறை இன்றி சட்டங்களின் அடிப்படையில் பணங்களை அறவிடுவதோ நீதிமன்றங்களுக்குத் தெரியாது நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதில் சில கட்டுப்பாடுகள் நடைமுறைகள் எங்களுடைய நீதிமன்றத்தினூடாகவே அவர்களுக்கு உரிய பணத்தை செலுத்தப்பட வேண்டும் என்ற சட்டவிதியை நாங்கள் சேர்த்து இருக்கின்றோம். சாதாரணமக்கள் தாங்களாகவே நீதிமன்றத்துக்கு வந்து தங்களுடைய பிரச்சினைகளை வாதிடுவதற்கும் வழக்குகளை தாக்கல் செய்வதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கின்றது.



# 2800 ஆண்டுகள் வாழும் மண் வளையக்கிணறு



பூநகரியின் தெற்கே நாச்சிக்குடாவுக்கு வடக்கே கடற்கரையிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் கிராஞ்சியில் 2800 ஆண்டுகள் முன்பதான சுடுமண்வளையக் கிணறு ஒன்று இன்றும் இருக்கிறது.

தமிழர்களிடம் இருந்த 2000 ஆண்டுமுதல் 3000 ஆண்டுகள் வரையான, பெருங்கற்காலத்தில் மண் வளையக் கிணறுகளை பயன்படுத்தியுள்ளனர். மண் உறை கிணறு எனவும் இதனை அழைக்கின்றனர். இத்தகைய சுடுமண்வளையக்கிணறு ஒன்று பூநகரி கிராஞ்சியில் இப்பொழுது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 4 வளையங்களைக் கொண்ட இக்கிணறு கடற்கரை மணலில் தூயநீரை அள்ளுவதற்காக அமைக்கப்பட்டதாகும். தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு வெ.இளங்குமரன் அவர்களின் ஏற்பாட்டில் கிராஞ்சி சுடுமண் கிணறின் துண்டு ஒன்று காபன் - 14 கதிரியக்க காலக் கணிப்பு செய்யப்பட்டு அது 2800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறியப்பட்டது.

கைவிடப்பட்ட மணல் வெளிப்பிரதேசமான கிராஞ்சி இலங்கையின் ஆரம்ப மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்த 1871 இல் மக்கள் எவரும் வாழாத பகுதியாக இருந்தது. 1901 கணக்கெடுப்பில் 91பேர் இங்கிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. 1921 கணக்கெடுப்பில் 119 ஆக இது அதிகரித்தது.

1960களில் இங்கு குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வேளை நயினாதீவு மீனவர்களுக்கு சுடுமண்வளையக்கிணறு பகுதிகள் குடியமர வழங்கப்பட்டன இப்பிரதேசத்தினைவிட்டு அவர்கள் கடற்கரையையே அவர்கள் தாம் வாழ தெரிவு செய்தனர். எவரும் இதில் குடியேறாததால் இப்பகுதிகள் கிராஞ்சி வாழ் மக்கள் குடியமர 1970 களில் ஆரம்பத்தில் வழங்கப்பட்டது. அப்போது மண்வளையக் கிணறுக்குரியகுடும்பம் அவ் விடத்தை துப்புரவு செய்த போது சுமார் 10 அடிக்கு மேல் உயரமான மணல் திவளையில் ஒரு துரவில் இருந்த குழியினுள் மண் வளையக் கிணறைக் கண்டனர். உவர்நீர் நிறைந்த அப்பகுதியில் இது சிறந்த நன்னீரை கொண்டதாக இருந்தது. இக்கிணறை மையமாக வைத்து அக் குடும்பம் அங்கு குடியமர்ந்தது. கிணறின் மேல் மட்டத்திலிருந்து 8அடி உயரத்துக்கு வட்டமாக சிமெந்து கற்களால் மேல் மணல் படை உயரத்துக்கு ஒரு கட்டை அவர்கள் கட்டினர். இன்றும் அதே நிலையில் அக்கிணறு இருக்கிறது.

இந்த மண் வளையங்களின் உட்பகுதிவிட்டம் 2 அடிகளாகும். ஆழம் 4 அடிகள், அடியில் ஒரு செம்மைப் படுத்தப்பட்ட கல் உள்ளது. இதனை தளமாக கொண்டே மண்வளையங்கள் வைக்கப்பட்டுள்ளன. மண்வளையத்தின் மேல் அதனை உடையுவிடாது சிமெந்து கட்டப்பட்டுள்ளது.

இக்கிணறை இப்பகுதி மக்கள் பூதம் கட்டிய கிணறு என விழிக்கிறார்கள். ஆரம்பத்தில் தொல்லியல் சான்று தேடலாளர் கு.மேகநாதன் வழியாக இக்கிணறு பற்றி அறிந்து இதனை கலாநிதி ப.புஸ்பரட்ணம் வெளிச்சத்திற்கு கொண்டுவந்தார்.

ஆனால் இது ஒரு தமிழினத்தின் முக்கிய தொன்மைத் தொழில்நுட்பம் என்பதை அறிந்து இதில் கூடுதல் அக்கறை செலுத்திய தமிழீழக்கல்விக் கழகப் பொறுப்பாளரின் ஏற்பாட்டில் இதன் துண்டு ஒன்று C -14 கதிரியக்க காலக் கணிப்புக்கு உட்படுத்தப்பட்டது. இதில் இது 2800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என உறுதியானது.

இன்றும் தமிழரிடையே 2800 ஆண்டுகள் கழித்தும தொண்மையான தென்று வாழ்கின்றதெனில் அது இச்சுடு மண் வளையக் கிணறேயாகும்.

தமிழகத்தில் பெருங்கற் காலத்துக்குரிய சுடுமண்வளையக்கிணறு திருநெல்வேலி மாவட்டம் காயல் ஆதிச் சாறல்சார் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. இது காபன் -14 காலக்கணிப்புப்படி கி.மு 785 ஆண்டுகளுக்கு முற்பட்டது என வரையறை செய்யப்பட்டது.

இதைவிட வடஇந்தியாவில் அத்தினாபுரத்திலும் மண்வளையக் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. தமிழகம் வடஆர்க்காடு செங்கமேட்டிலும் ஒரு உறைகிணறு கண்டுபிடிக்கப்பட்டது.

தமிழர்களின் ஒரு காலகட்ட முக்கிய அறிவியல் தொழில்நுட்பம் நீரூற்றை கண்டுபிடித்து உறை கிணறுகளை அமைத்ததாகும்.

இந்த வகை மண் வளையக்கிணறு ஒன்று தமிழீழத் தாயகத்தின் தென்பகுதி மாவட்டம் ஒன்றிலும் கிடைக்கப்பெற்றுள்ளது.


இதைவிட இத்தகைய சுடுமண்வளையங்களை ஒட்டுசுட்டான் மானுருவி ஆற்றின் படுக்கையில் 3ஆண்டுகளின் முன் மக்கள் கண்டுள்ளனர். ஒன்றன் மேல் ஒன்றாக இருந்த மண் வளையங்களை மக்கள் உடைத்துவிட்டனர். இப்பகுதிக்கு தொல்லியல் ஆர்வலர்கள் சென்று பார்த்தபோது ஆற்றுமணலால் குறித்த பகுதி மூடப்பட்டுவிட்டது. மண் வளையத்துண்டுகளை மட்டுமே மீட்கமுடிந்தது. முல்லைத்தீவு நகரின் வடக்கில் கரையோரமணல் நிலத்தில் 1885இல் சுடுமண் வளை யக்கிணறு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாக ஆங்கிலேய நீர்ப் பாசனப் பொறியியலாளர் பார்க்சர் தெரிவித்துள்ளார். இது பற்றி பார்க்சர் விபரிக்கையில்.

1885இல் முல்லைத்தீவு நகரின் வடக்கே சிறிய தென்னந் தோட்டம் ஒன்றில் அதற்கு உரிமையாளராக இருந்தவர். உடைந்த மட்பாண்டத்துண்டுகள் இருந்த இடமொன்றை கண்டு அதனைத் தோண்டத்தொடங்கினார். தோண்டப்படுகையில் ஒருபெரிய சுடுமண்வளையத்தினைக் கண்டார். அதனை மேலும் அவர் துப்புரவு செய்த போது மண்ணினால் செய்து சுடப்பட்ட பெரியதொருவட்டத்தை கண்டார். அதன் அடிப்பகுதியை தேடி முழுமையாக மணலை அள்ளியபோது அதன் கீழ் மேலுமொரு மண்வளையம் இருப்பதை அவர் கண்டார். அதன் அடிவரை அவர் தோண்டிச் சென்ற போது அடியில் குடிநீர் சுரந்துவந்தது. மண்வளையத்தின் மேல் வளையம் 6 அங்குல உயரமாகவும் கீழ் வளையங்கள் 8 அங்குல உயரமுடையதாகவும் உட்புற விட்டம் 3அடியாகவும் இருந்தன. இதனுள் இலங்கையின் ஆரம்பகால நாணயமாக நீள்சதுர வடிவுடைய லக்குமிபிளேக் நாணயங்கள் 9 எடுக்கப்பட்டன. இவை கொழும்பு தொல்பொருட் சாலைக்கும் - அப்போதைய ஆங்கிலேய அரச அதிபரிடமும், பிரிட்டிஸ் தொல் பொருட்கள் சாலையிலும் ஒப்படைக்கப்பட்டன.

முல்லைத்தீவின் மண்வளையக்கிணறு அங்கு 2000 ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந்ததை உறுதிசெய்தது. தமிழ் மக்களின் தொன்மை அறிவியல் தொழில் நுட்பத்தின் வெளிப்பாடே சுடுமண் வளையக்கிணறு ஆகும். முல்லைத்தீவு தண்ணி முறிப்பில் அண்மையில் பல ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான சுடுமண்வளையக் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

**குரலோன்**

---



# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 08


முற்றுகையிடப்பட்ட யாழ்ப்பாணத்தின் தரைத் தொடர்பு தீவுகளின் மக்களோ யாழ்ப்பாணத்தினூடான தொடர்புகளை அராலி ஊடாக ஏரிக்கடல்வழியே மேற்கொள்கையில் - இரட்டை அவலத்தை ஏனைய தீவுகளின் மக்கள் அனுபவித்தனர்.

காரைநகருக்கு மேற்கே எழுவைதீவு - அதற்கு மேற்கே அனலைதீவு அதற்குத் தெற்கே நயினாதீவு. நயினாதீவிலிருந்து 07 கடல்மைல் தொலைவில் ஆழ்கடலில் நெடுந்தீவு ஆகிய மக்கள் வாழ் தீவுகள் இருக்கின்றன. இவை தரைத்தொடர்பற்றவை.

இவற்றில் வாழும் மக்கள் 'லோஞ்சுகள்' எனப்படும் பெரிய படகுகள் மூலமே யாழ்ப்பாணத்துடன் தொடர்வுகளை வைத்திருந்தனர்.

எழுவைதீவு, அனலைதீவு மக்கள் படகுப்போக்குவரவு ஊர்காவற்துறையுடன் இருந்தது.

நயினாதீவு - நெடுந்தீவு படகுப் போக்குவரவு புங்குடுதீவின் - குறிகாட்டுவானுடன் இருந்தது. இதில் சிறிலங்கா கடற்படைத் தளங்கள் காரைநகரின் நீலங்காட்டிலும் - நயினாதீவிலும் இருந்தன. காரைநகர் நீலங்காடு - பகுதியை அடக்கிய சிறிலங்காக் கடற்படையின் வடபகுதி தலைமையகத் தளமான (Comnorth) லெரா கொண்டிருந்தது. இதன்மூலம் எழுவைதீவு - அனலைதீவு வரையான கடற்பகுதிகளின் பரப்பினை அவதானிக்க முடியும். நீலங்காட்டுப் பகுதிவரை விரிந்திருந்த சிறிலங்காக் கடற்படைத்தளம் இந்த கடற்பிராந்தியத்தை நேரடியாகவும் - ராடர் மூலமாகவும்



அலசிக் கொண்டிருந்தது.


காரைநகர் லெரா கடற்படைத்தளம் பிரிட்டிஸ் கடற்படையால் அமைக்கப்பட்டு பேணப்பட்டுவந்தது. இத்தளம் பின்னர் சிறிலங்கா கடற்படையிடம் கையளிக்கப்பட்டது. அந்தத்தளத்தை வடபகுதி தலைமைத்தளமாக இயங்கிவந்த சிறிலங்காக் கடற்படை தமிழீழ விடுதலைப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக பரிணாமித்தபோது - அதனை பலப்படுத்தியது. உப தளத்தை நயினாதீவு விகாரையை மையமாகக் கொண்டும் அமைத்தது.

1984இல் சிறிலங்காக் கடற்படைத் தளபதி அசோக டிசில்வா இத்தளத்திற்கான பயணமாக கடல்விமானம் ஒன்றில் ஊர்காவற்துறை பருத்தியடைப்புக் கரையில் இறங்கினார். அசோகடிசில்வா காரைநகர் லெரா தளத்துக்குச்சென்றபின் - தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த கடல் விமானத்தை தாக்கி எரியூட்டி அழித்தனர்.

காரைநகர் லெரா கடற்படைத் தளத்துக்கு மேற்காக நீலங்காட்டில் சிறிலங்கா அரசின் பொதுவேலைகள் திணைக்களத்தின் படகுதிருத்தத்தளம் இருந்தது. பொதுவேலைகள் திணைக்களத்துக்குரிய பயணிகள் போக்குவரவுப் படகுகள் - துலாமூலம் கடலிலிருந்து தடம் வழியாக டொக்கில் ஏற்றிப்பட்டு திருத்தப்படும் பணி நடைபெற்றது.

1980களின் நடுப்பகுதியில் EPRLF காரைநகர் கடற்படைத்தளத்தை தகர்க்கிறேன் என்று புறப்பட்டு தோல்வியை தழுவியது. இதன் போது லெரா கடற்படையினரால் நீலங்காடு திருத்தத் தளத்தில் டொக்கில் ஏற்றப்பட்டிருந்த 'வடதாரகை போக்குவரவு படகும் - டொக்கில் ஏற்றவென கரையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மணிமேகலை, ராஜேஸ்வரி பயணிகள் படகுகளும் பீரங்கிகள் மூலம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இவை நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரவில் ஈடுபட்டிருந்தவை. அந்தத்தாக்குதலுடன் நீலங்காடு கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

நீலங்காட்டுக்கு மேற்காக கடலின் நடுவில் பவளப்பாறை மேடுஒன்றில் போத்



துக்கீசர் கட்டிய 'ஹெமன் ஹீல்' கோட்டை உள்ளது. கடற்கோட்டை என இதனை அழைப்பார்கள். 1948இன் பின் இது ஒரு சிறையாக கடுமையான குற்றவாளிகளை அடைத்துவைக்கும் இடமாக இருந்தது. 1970 களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி 'சிறிமாவோ' ஆட்சியில் ஜே.வி.பி. ஒழிப்பு நடவடிக்கையின்போது பிடிக்கப்பட்ட ஜே.வி. பியினர் இந்த கடற்கோட்டை சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர். அக்காலத்தில் யாழ் கோட்டை சிறையிலும் கிளிநொச்சியில் இன்றுள்ள அக்கராயன் மகாவித்தியாலயத்திலும் கூட ஜே.வி.பி. தலைவர் றோகண விஜேயவீர உட்பட்டோர் சிறைவைக்கப்பட்டனர்.


ஜே.வி.பி. சிறைக்குப் பின்னர் கடற்கோட்டை அம்மை உட்பட்ட கடும்தொற்று நோயாளிகளை வைத்திருக்கும் இடமாக கடற்கோட்டை இருந்தது. 1980களின் நடுப்பகுதியின் பின் கடற்கோட்டையும் கடற்படை ஆக்கிரமிப்புக்குட்பட்டது. இந்தத்தளங்கள் மூலம் எழுவைதீவு -அனலைதீவு ஆகியனவற்றுக்கான சகல நடமாட்டங்களும் நிறுத்தப்பட்ட இத்தீவுகளில் கடும்உணவு நெருக்கடி ஏற்பட்டது. பஞ்சம் என்ற அளவுக்கு அப்போது கடும் நெருக்கடி ஏற்பட்டது.

**துருவன்**





# "வீடியோ காரருக்கு புதிய குரோமாகீ"

'குரோமாகீ' (Chroma Key) எனப்படும் - காட்சியில் பின் புலத்தை இல்லாமல் செய்து வேறு காட்சிகளை பொருத்தும் தொழில்நுட்பம் வீடியோவில் உள்ளது.




நமது திருமணம், பூப் புனித நீராட்டு, பிறந்தநாள் கொண்டாட்டங்களில் - கதா நாயகர்களை பல்வேறு நம்ப முடியாத பின்புலங்களில் நடமாடச் செய்யும் வீடியோ விளையாட்டுக்களில் மயங்கியவர்கள் நாம். வீடியோக்காரர் நீலப் பின்னணி துணியைப்பிடித்து இந்த குரோமாகீ நுட்பத்தில் படம்பிடிப்பதை அறிவீர்கள் இந்த குரோமாக்கீயில் புதிய நுட்பத்தை Broadcast asia 2004 இல் நேரடியாகவே செய்து காட்டினார்கள். "Reflecmeia" என்ற பண்டன் நிறுவனத்தினர் இதை தொழில் நுட்பரீதியாக - குரோமாகீ, நீலத்திரை (Blue screen) Cso(colour separatian overlay) என்ற பெயர்களில் அழைக் கப்படுகிறார்கள்.



'குரோமாக்கீ'யின் நுட்பம் அலை நீளம் குறைந்த வண்ணத்தை இல்லாமல் செய்தல் ஆகும். அதற்காகவே அலைநீளம் குறைந்த - இலகுவில் சிதறக் கூடிய நீலம் தெரிவு செய்யப்பட்டது. இலகுவில் சிதறக் கூடிய வண்ணத்தையே லேசாக அகற்றமுடியும் என்பதே இதற்குக் காரணமாகும். குரோமாகீ உருவாக்கப்பட்ட 50 ஆண்டுகளில் இம்முறையே பயன்பட்டு வருகின்றது.

ரிப்லெக்மீடியா - புதிதாக தயாரித்துள்ள குரோமாகீ முறையில் - பின்னணித்திரையாக ஒரு வகைத் துணியை தயாரித்துள்ளது. ஊதாவண்ணமுடைய இதில் சிறியளவில் கண்ணாடித் துகள்கள் இலகுவில் கண்ணுக்கு புலப்படாவண்ணம் ஒட்டப்பட்டுள்ளன. இந்தத் துணியில் ஒளிபடும்போது அந்த ஒளிபட்டுத் தெறித்து நேர்கோடாக புறப்பட்ட இடத்துக்கு தெறிப்படையும் நுட்பம் இதன் முக்கியத்துவம். அதே போல் வீடியோ ஒளிப்படக்கருவியின் வில்லையின் முன்பாக ஒரு வட்ட வளையம் பொருத்தப்படும். அதில் சிறிய குமிழ்கள் ஒளியை வெளியிடும் இந்த வளையத்திலிருந்து புறப்படும் ஒளிதிரையில்படும்.




திரை ஒளியை தெறிக்கச் செய்யும். அந்த ஒளி நேராக திரும்புகையில் அது வீடியோ கமரா வில்லையுள் நுழைகின்றது.

அங்கு திரை ஒரு ஒளியாக - நிறமற்றே கமராவில் தெரியும்.

வழமையான 'குரோமாகீ'க்கு 1000W அளவுக்கு பிரகாசமான ஒளிதேவை ஆனால் இந்தப்புதுமுறை குரோமாகீக்கு குறைந்த அளவு ஒளி போதுமானது. இங்கு தெறிக்கும் அளவுக்கு ஒளி பிரகாசம் இருந்தால் போதுமானது.


இந்த குரோமாகீ படப்பிடிப்புக்கு மிகக்குறைந்தளவு இடம் போதுமானது ஏனெனில் ஒளி வளையும் வில்லை முன்பாக பொருத்தப்படுவது. திரை பெரியளவில் இல்லாதது என்பன இதற்குக் காரணம். வழமையான குரோமாகீக்கு இடம்என்பது கொஞ்சம் அதிகமாக தேவையாகும். இந்த குரோமாகீ முறை வீடியோ கமராவில் மட்டுமல்லாமல் படச்சுருளில் சலனப்படப் பிடிப்பிலும் பயன்படுத்தப்படலாம். ஒளிவளையத்தில் படச்சுருள் படப் பிடிப்புக்கான பளீரொளி பொருத்தும் பகுதிவந்தால் - கணனியில் உருவங்களை வெட்டுவதில் சிரமம் ஏற்படுவதை இந்த குரோமாக்கீ தவிர்க்கும். ஒளி வளையத்தில் 36 ஒளி உமிழ் டையோட் (led) மின் குமிழ்கள் அமைக் கப்பட்டுள்ளன இது உற்பத்தி செய்யும் ஒளி சிதறாமல் செல்லும் திறன் கொண்ட முக்கியமானது. இந்த ஒளிவளைய மின் குமிழ்கள் 10 W ஒளியையே வெளிவிடுகின்றன. இதற்கு 12வோல்ட் மின்சாரம் போதுமானதாகும். இந்த குரோமாகீ - சிறப்புத் திரை 07 அடி சதுர அளவில் நிறை 5 கிலோகிராம் ஆகும். Broadcast asia -2004இல் வீடியோ வணிகத்துறையில் புதிதாக அறிமுகம் செய்துள்ள பரபரப்பாக அனைவராலும் பார்க் கப பட்டது. இந்த "புது குரோமாகீ" நுட்பமாகும்.

**த.அருவி**




## உமிழ்நீர் வெளியேறுவதால் ஏற்படுகின்ற விளைவுகள்

நம் வாய் சுத்தமாகவும் ஈரமாகவும் இருப்பதற்கு எச்சில் (உமிழ்நீர்) தான் உதவுகிறது. அதில் உணவு செரிமானத்திற்கு உதவும் 'அமிலெஸ்' (Amylase) எனும் நொதி உள்ளது. 'லைசோசைம்' (Lysozyme) எனும் கிருமிக்கொல்லி நொதியும் அதில் அடங்கியுள்ளது. தவிர, சோடியம், பொட்டாசியம் பைகாபனேட் போன்ற தாது உப்புக்களும் அதில் அடக்கம்.




நீங்கள் அடிக்கடி எச்சிலைத் துப்பினால் இத்தனையும் எச்சிலோடு வெளியேறிவிடும். இதனால் வாய் வறண்டுவிடும். துர்நாற்றம் வீசும். சமிபாட்டுக் கோளாறுகள் தலைதூக்கும். நீங்கள் சாதாரணமாக இருக்கும் போது அடிக்கடி எச்சிலைத் துப்புவதால் ஏற்படும் விபரீதங்கள் இவை. இதுமட்டுமன்றி, நோய்வாய்ப்படும் காலங்களில் உங்கள் எச்சிலில் பக்ரீரியா அல்லது வைரஸ் நுண்ணுயிர்க்கிருமிகள் வாசம் செய்யலாம். எச்சில் துப்பும்போது இவை வெளியேறி காற்றில் கலந்து மற்றவர்களுக்கு நோய் பரப்புவதற்கு வழிசெய்யும்.

### வாய் நாறுவதைத் தடுப்பதற்கான வழி

புகைபிடிக்காதீர்கள்: வெற்றிலை, புகையிலை போடாதீர்கள், வாயை எப்போதும் சுத்தமாகப் பேணுங்கள். பற்களை 'ஸ்கேலிங்' முறையில் நன்றாக சுத்தம் செய்து கொள்ளுங்கள். தொண்டைப்புண், சொத்தைப்பல், நுரையீரல் நோய், இரைப்பைக் கோளாறுகள், பயோரியா ஆகியவை வராமலிருக்க மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வாய் நாற்றம் எளிதில் மறைந்துவிடும்.

## உயர் இரத்த அழுத்த (H.B.P) நோய்கள்



*உயர் இரத்த அழுத்தம் (H.B.P) தரும் நோய்கள் என்னென்ன?*

01. மாரடைப்பு. அதன் காரணமான அகால மரணம்.
02. மூளையில் இரத்த நாளங்கள் வெடித்தல்.
03. மனச்சோர்வு, உடல் உறுப்புக்களின் செயல்திறன் குறைதல்.
04. சிறுநீரகப் பாதிப்பு.
05. கண்களில் உள்ள இரத்த நாளங்கள் வெடிப்பு, இரத்தக்கசிவு.
06. உடலில் உள்ள இரத்த நாளங்களில் உண்டாகும் தொல்லைகள். நாளமில்லா சுரப்பிகளில் பாதிப்பு.

மேற்கூறிய நோய்கள் இல்லாதவர்களே இப்போது இல்லை என்றாகி விட்டது. உயர் இரத்த அழுத்தம் ஒரு Silent Killer எனலாம். எல்லா வகையான நோய்களுக்கும் பிறப்பிடம் உயர் இரத்த அழுத்தம் என்பது மிகையல்ல என்கிறார்கள் விஞ்ஞானிகள். வளர்ச்சி அடைந்த நாடான அமெரிக்காவில் மக்கள் தொகையில் நான்கில் ஒருவர் உயர் இரத்த அழுத்தத்தினால் அவதியுறுகிறார் என்று ஆய்வுகள் கூறுகின்றன. உயர் இரத்த அழுத்தத்தினால் ஏற்படும் மாரடைப்பு அபாயம் ஆண், பெண் இருபாலாருக்கும் உண்டு. உயர் இரத்த அழுத்த சிகிச்சை தேவைப்படுவோர் தொகை ஒவ்வொரு ஆண்டும் 20 லட்சம் அதிக மாகிவருகிறது என்பது ஒரு அதிர்ச்சியூட்டும் புள்ளி விபரம். உயர் இரத்த அழுத்த விளைவுகள் பற்றி அறிய ஆய்வுகள் இன்னும் ஆரம்ப கட்டத்தை மட்டுமே தாண்டியுள்ளன.

*உயர் இரத்த அழுத்தம் எப்படி ஏற்படுகிறது?*

01. உணவில் தேவைக்கு அதிகமான உப்பைச் சேர்த்துக் கொள்ளுதல்.
02. பருத்த உடல் - அதனால் அதிகரித்த எடை.
03. உடற்பயிற்சி இன்மை.
04. அதிக அளவில் மது அருந்துவது.
05. புகை பிடிக்கும் பழக்கம், புகையிலை உபயோகிப்பது.
06. உணவில் தேவையான அளவு பொட்டாசியம் சேர்த்துக் கொள்ளாதது.
07. பரம்பரையாக வருவது.

இரத்த அழுத்தக் கட்டுப்பாடும் சிறிதளவே ஆயினும் ஆச்சரியப்படும் அளவு மாரடைப்பு அபாயத்தைக் குறைக்கிறது.

## கொழுப்பைக் குறைக்கும் மாத்திரை

*உடம்பில் அளவுக்கு அதிகமாக கொழுப்புச்சத்து இருந்தால் ஆரோக்கியத்திற்கு ஆபத்துதான். மாரடைப்பு, இரத்தக் கொதிப்பு,பக்கவாதம், நீரிழிவுநோய் என்று பல நோய்கள் படையெடுக்கத்துவங்கிவிடும். எனவே, கொழுப்பைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம்.*

*உடம்பில் அதிகபடியாகப் படிந்திருக்கும் கொழுப்பைக் குறைப்பதற்கும், இனிமேல் கொழுப்பு சேராமல் இருப்பதற்கும் உதவக்கூடிய புதிய மருந்து ஒன்றை அமெரிக்காவில் லொஸ் ஏன்ஜெல்ஸ் நகரில் உள்ள கலிபோர்னியா மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இந்த மருந்தின் பெயர் 'ஓலிஸ்டட்' (Orlistat)*


*இது எப்படி வேலை செய்கிறது?*

*நாம் உண்ணும் உணவில் இருக்கும் கொழுப்புப் பொருட்கள் சிறுகுடலில் சிதைவடைவதை இந்த மருந்து தடுக்கிறது. அதன் மூலம் கொழுப்புச் சத்து ரத்தத்தில் கலப்பது நின்று போகிறது. எனவே, கொழுப்பு மட்டும் செமிபாடடையாமல் மலத்தோடு வெளியேறி விடுகிறது. இதனால் உடம்பில் கொழுப்பு சேர்வதில்லை.*

*"இதுவரை ஆயிரம் பேருக்கு மேல் இந்த மருந்தைக் கொடுத்துப் பார்த்ததில் பின் விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை. ஒரு சில மாதங்களிலேயே கொழுப்பு கரைந்து உடம்பு மெலிதாகி விடுகிறது. இதனால் தொந்தியும் தொல்லையுமாகக் காணப்படும் பலருக்கும் இந்த மருந்து நல்ல பலனைத்தரக்கூடியது" என்கிறார் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகளில் ஒருவரான பிராங்க் எல். கீரீன்வே.*

*தற்சமயம் இந்த மருந்து கடைகளில் கிடைக்காது. அமெரிக்காவின் 'FDA' அனுமதித்த பிறகு மருத்துவர்களின் பரிந்துரைச் சீட்டு (Prescription) இருந்தால் மட்டுமே இந்த மாத்திரை தரப்படும்.*

### விமான டிக்கற்...




ரெண்டு விமான ரிக்கட் பதிவு செய்யுங்கோ - சீனாவுக்கு என்ரமனிசி சைனீஸ் ஹோட்டல்ல சாப்பிடவிரும்புறா-

அடக் கடவுளே அதுக்கு வன்னிக்கு ரிக்கட் பதிவு செய்தாக் காணும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்





மண்ணின் மைந்தர்களின் கதை



# "மழைநீரில் கரைந்திடா இலட்சிய வைரம்"

மாரி மழை சோவென கொட்டிக் கொண்டிருக்கிறது. காலை விடிந்ததிலிருந்து பெய்யத்தொடங்கிய மழை, மதியத்தைக்கடந்தும், ஓயாது பெய்து கொண்டிருக்க, வயல்வெளிகளில் நீர்மட்டம். அங்குலத்தைக் கடந்து, அடி, யார் என உயர்ந்து கொண்டே இருந்தது. உயர்ந்த நீர்மட்டம் காட்டாறாய் ஓடிக்கொண்டிருக்க, அந்த ஓட்டத்துடன் சங்கமித்து சில இலட்சியம் நிறைந்த வைரப் பாறைகளும் உருண்டோடிக் கொண்டிருந்ததை எதிரி நிச்சயமாக அறிந்திருக்க முடியாது.

மழை நீரிலே உருண்டோடிக் கொண்டிருந்த வைரப் பாறைகள் ஏகாதிபத்தியவாதிகளான சிங்கள எதிரியை அழித்துவிடுவது நிச்சயமென்றே முன் நகர்ந்து கொண்டிருந்தனர். நிச்சயமாக எதிரி தோற்கடிக்கப்படுவான் என்ற நம்பிக்கையுடன் போராளிகள் பரந்தன் படைத்தளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு வழிகாட்டியாய் கப்டன் அருள் மொழியும் முன்னே நகர்ந்து கொண்டிருந்தான்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முற்றிலும் வித்தியாசமானதும் இதுவரை நடைபெறாததுமான ஒரு தாக்குதலுக்காக இப்போது நகர்ந்துகொண்டிருக்கிறோம். ஈழவிடுதலைப் போராட்டத்தில் எதிரியும் இது போன்றதொரு தாக்குதலை எதிர்பார்த்திருக்கவே மாட்டான். இன்னும் சொற்பநேரத்தில் ஆரம்பிக்கப்போகும் சண்டையின் பின்தான் புதிய சவால் ஒன்றிற்கு எதிரி முகம் கொடுக்கப் போகிறான். இது எதிரிக்கு சவால் மட்டுமல்ல, தாயக விடுதலைப் போராட்டத்திற்கான புலிகளின் புதிய உத்வேகமும் கூட. அதை விட அதிகார சக்திகளை அடக்கு வதற்கான புதிய தந்திரோபாயமும் கூட. என்பதை மிலேச்சவாதிகள் எல்லோரும் தெரிந்து கொள்ளவே பரந்தன் பகல்நேரத் தாக்குதலை தலைவர் தேர்ந்தெடுக்க போராளிகள் அதற்கு செயல்வடிவம் கொடுக்க நகர்ந்து கொண்டிருந்தனர்.

பட்டப்பகல் பரந்தன் வயல் வெளிகள் நீரால் நிரம்பி வழிந்தோட, போராளிகள் பசி, தாகம், களைப்பு, நித்திரையின்மை இப்படி எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும், நிதானமாக நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். தாகத்தை தீர்க்கலாம் என வழிந்தோடிக் கொண்டிருக்கின்ற மழை நீரைப் பார்த்தால் அதன் கஞ்சல், துர்நாற்றம் எம்மை இம்சிக்கவே செய்தது. போதிய அளவு நீர் இருந்தும், உயிரையே பறித்து விடுமாய்ப் போலிருக்கும் தாகத்தை தீர்த்திட முடியாதநிலையில், போராளிகள் துன்பத்துடன் நகர்ந்துகொண்டிருந்தனர். பெரும் தொகையான ஆண், பெண் போராளிகள் இயற்கையின் அவஸ்தையினால் பாதிக்கப்பட்டிருந்த போதும், தங்களது இலக்கை நோக்கித் தீரமுடன் முன்னேறிக் கொண்டிருந்தனர். இவற்றை நன்கு உணர்ந்துவிட்ட... கப்டன் அருள் மொழி தனது நகர்வின் வேகத்தை பலமடங்காக அதிகரித்தான்...

காலை உணவையும் சரிவர சாப்பிடாமலேயே போராளிகள், நகர்வினை மேற்கொண்டனர். இப்போது நேரம் பி.பகல் 03 மணியாகிவிட்டதனால், ஒவ்வொரு போராளியும் எவ்வளவு துன்பங்களை அனுபவிப்பார்களென்ற நினைவுடனேயே கப்டன் அருள்மொழி முன்னேறிக் கொண்டிருந்தான்.

பட்டப்பகல் எதிரி காவலரணில் எம்மை எதிர்பார்த்தவாறே இருப்பான் என்பது அருள்மொழிக்கு தெரியாமல் இல்லை. எனவே மிகவும் அவதானமாக தடை அணியை ஊர்ந்து ஊர்ந்து அவதானித்துக் கொண்டிருக்கிறான். அருள்மொழியின் அவதானத்திற்கு இன்னுமொரு காரணமும் இருக்கின்றது. பரந்தன் சண்டைக்கான பகல் நகர்வு நடப்பதற்கு முன், முதல் நாள் இரவே சண்டைக்கான உச்சக்கட்ட வேவு நடவடிக்கை செய்யப்பட்டது. அந்த இக்கட்டான பணியை அருள் மொழியே பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருந்தான். அதன்போதுதான் அந்தச்சம்பவம் நடக்கின்றது.

காரிருள் சூழ்ந்த அந்த மாரி கால மழைத்தூறல்கள் உடலை சிலிர்க்கவைக்க, மறுநாள் நடக்கவிருக்கும் சண்டைக்கான இறுதி வேவு நடவடிக்கைக்காக அருள் மொழி ஆயத்தமாகிவிட்டான். தளபதிகள் அவனுக்கான திட்டத்தை தெளிவுடனும், விரிவாகவும் விளங்கப் படுத்திவிட்டு அனுப்பிவைக்கின்றனர்.

எந்தநேரமும் துடிப்பான ஒருவித வேக நடைநடக்கும் அருள் மொழி, அப்போதும் சும்மா இருக்கவில்லை. ஒருகால் மாறி, அடுத்த காலை தூக்கியபடி, ஓட்டப் போட்டிக்குத் தயாராகிறவன் போல் நிற்பது மிகவும் நகைச்சுவைநிறைந்த உணர்வாசவே இருந்தது. தனது பொருட்களை மீண்டும் ஒருமுறை சரி பார்த்துக்கொண்ட அருள்மொழி நடக்கத் தொடங்கினான்.

காரிருள் நிறைந்த கரடிப் போக்குச் சந்தியை அண்டிய சிதைவுண்டுபோன கட்டடம் ஒன்றிற்குள்ளிருந்து அந்தக்கறுத்த கட்டையான உருவம், தனது வேவு அணியோடு நகரத்தொடங்கியது. அந்த இருளுக்குள் அடர்ந்து வளர்ந்திருந்த பற்றைக்காடுகளுக்குள் செல்வது சுலபமானது அல்ல. என்றாலும் அந்த உருவம் நகர்ந்து கொண்டே இருந்தது.

பெரும்பாலும் கப்டன் அருள்மொழி எதிரிக்குக் கிட்டவாக சென்றிருக்க வேண்டும் என்பதற்கான சமிக்ஞை கிடைத்துவிட்டது. என்ன நடக்குமோ என்ற தவிப்பு, காரணம் ஓயாத அலைகள் 03 தொடர்ந்து அடித்துக்கொண்டே இருந்தமையினால்,எதிரியும் பெரும்பாலும் விழிப்புடனே இருப்பான் என்பது நிச்சயமாக தெரிந்தது. அவற்றை நினைத்து சலனப்பட்டுக்கொண்டிருக்கும் போதே, எமக்கு ஏற்பட்ட பதற்றம் மேலடைவதாக அந்த வெடிச்சத்தம் கேட்டது.

டொம் எனக்கேட்ட பெரிய சத்தத்தின் பின் எதுவித அசைவும் இயற்கையில் தென்படவில்லை. மயான அமைதி எங்கும் நிலவிட நாமும் பதற்றமடைந்தோம்.

சிறிது நேரத்தின் பின் டட்.,டட்.,டட்.....டட் என எதிரியின் துப்பாக்கிகள் உயிர்பெற்று அனல் நாக்கை வெளித்தள்ளியது. பளிச், பளிச்சென மின்னிவிட்டு வெளியேறிய எதிரியின் சன்னங்களும், பாதையைச் சுற்றி எரி ரவைகளும் வானில் கீச்சலிட்டுக் கொட்டத்தொடங்கியதே தவிர எதுவித செய்தியையும் எமக்கு சொல்லமறுத்துவிட்டது.

**— க. மிரேசு —**

காரிருளை கிழித்துக் கொண்டு வானில் தனது டப்பென்ற ஒலியுடன் ஒளிக்கீற்றைப் பரப்பிய பல தேடொளிகளின் வெளிச்சம் பரந்தனை பகலாக்கிக் காட்டியது. ஒவ்வொரு தேடொளியும் பெரும் ஒளிச் சக்திகளாகவே இருந்திருக்க வேண்டும். எனவேதான் இரவை பகலாக்கிக் காட்டியது. எதுதான் நடந்தாலும் முன்னே அருள் மொழியுடன் சென்ற வேவு அணியின் எதுவித தொடர்பையும் காணவில்லை. இப்போது வேவு அணியை அனுப்பிவிட்டு காத்திருந்த எல்லோரும் ஒருவித அதிர்ச்சியில் பீடிக்கப் பட்டவர்களாய் காணப்பட்டனர்.

என்னதான் நடந்திருக்கும்...?

ஏன் தொடர்பெடுக்கவில்லை...?

வெடிச்சத்தம் என்னவாக இருக்கும்..?

போனவர்களுக் கேதும் நடந்துவிட்டதோ...?

இப்படியாக எத்தினையோ கேள்விகளுக்கு விடைகாணாது துடித்துக்கொண்டிருக்கும் போதே அந்தக்குரல் நடை பேசியில் ஒலித்தது.

கலோ...விக்ரர் லீமா, சின்ன சிக்கலொன்று நேரே வருகிறேன். என்று பதற்றமில்லாது பேசிய அருள்மொழி சுமார் 30 நிமிடத்திற்குள் குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்துவிட்டான்.

மாரிமழை சோவெனப் பெய்து கொண்டிருந்தபோதும் குளிர் கடுமையாக இருந்தபோதும் அருள் மொழி வியர்த்துக்கொட்ட வந்து சேர்ந்தான். பின்னே வந்த போராளிகள் ஒருவனைத் தூக்கிக்கொண்டு வந்தனர். போன நால்வரில் ஒருவனுக்கு எதிரியின் கண்ணிவெடி ஒன்று வெடித்திருந்தது. அந்தப் போராளியின் காயம் குருதித் தடுப்புப் பஞ்சணையினால் இரத்தம் கசியாமல் கட்டப்பட்டிருந்தது.

வெடிச்சத்தத்திற்கான காரணம் புரிந்துவிட்டது. காயமடைந்த அந்தப்போராளி எதுவித சத்தமும் போடாமல் இருந்ததனாலேயே தாங்கள் தப்பிவந்ததாக அருள்மொழி கூறினான். நடந்தவைகளை கேட்டறிந்து, காயமடைந்த போராளியை சிகிச்சைக்காக அனுப்பிவிட்டு திரும்பிப் பார்த்தபோதுதான் அருள்மொழியின் காலிலும் குருதித் தடுப்புப் பஞ்சணை கட்டப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

என்ன நடந்தது என்று தளபதி கேட்க நான் முன்னே சென்ற போது தனக்குப் பின்னால் வந்த போராளிக்கே கண்ணிவெடி வெடித்ததாகவும் அதன் சிதைவுகள் பட்டதாகக் கூறிவிட்டு.

அது சின்னக் காயம்தான் அண்ண என்று சொல்லி தளபதியை கதைக்கவிடாமலேயே தொடர்ந்தான்.

அண்ண இன்னும் கொஞ்ச வேலைகிடக்கு அந்தப் பாதையால போகாம வேறபாதையால போய்ப் பார்த்து விட்டு வாறன் என்றான். அவர் எவ்வளவு தடுத்தும் அவன் கேட்கவில்லை. ஏற்கனவே நனைந்திருந்த அவன் மீண்டும் நனைந்தவாறே சென்று அதிகாலை விடிவதற்கு ஒரு மணிநேரம் இருக்க, வெற்றிகரமாக தரவுகளையும் கொண்டு வந்துவிட்டான்.

தற்போதும் அவனது ஈர உடைகள் காயவில்லை. தனது காயத்திற்கு மருந்திடவில்லை. பசியும், தாகமும், குளிரும் தன்னை வருத்திட, வருத்திட..., தொடர்ந்து தடைஅணிகளை கொண்டுசென்று முதலாவது தடையில் விடுவதற்காக உறுதிநிறைந்த வீர உழைப்புடன் நகர்ந்து கொண்டே இருக்கிறான். தனது துப்பாக்கியை ஒரு கையிலும், நடைபேசியை மறுகையிலும் இறுக பிடித்தவாறு தடை அணிகளை எதிரிக்குக் கிட்டவாக நகர்த்தி விட்டான்.

கப்டன் அருள்மொழி இரவு கடைசியாகப் பார்த்துவிட்டுவந்த பாதை இதுவாக இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்கவில்லை.அவன் சொன்ன தரவுகள் சரியாகவே இருந்தது. அவனது பெறுமதிமிக்க இறுதி நேரத் தரவுகளே பரந்தன் வெற்றியை பெற்றுத்தரப் போகிறது.

எல்லாம் சரி என்றதற்கான சைகை பாதைகாட்டியும், வேவு வீரனுமான அருள்மொழியிடமிருந்து கிடைத்துவிட்டது. பிரதான தளபதியிடமிருந்து அனுமதியும் வந்துவிட்டதற்கு அறிகுறியாய் புலிகளின் கனரக கவசவாகனமும் தனது இலக்கை காவுகொண்டு திரும்பியது.

அருள்மொழியினால் கூட்டிச்செல்லப்பட்ட தடை அணி சண்டையை ஆரம்பித்து சில நிமிடங்களில் (15 நிமிடம்) உள்நுழைந்து விட்டது. ஏனைய அணிகளும் எதிரியின் கடுமையான எதிர்ப்புக்களையும் கடந்து உள்நுழைந்துவிட சண்டை உக்கிரமடைகிறது.

பரந்தன் பகல் சண்டையில் அருள்மொழி தனது ரி.56 -2 துப்பாக்கியை அனல்கக்க இயக்கியபடி சண்டைசெய்கிறான். அவனது துப்பாக்கி ரவைகள் பட்டு பல எதிரிகள் விழ...வீழ்ந்த எதிரிகளையும் கடந்து எஞ்சியவன் முன்னேறுகிறான்.

அப்போது கப்டன் அருள் மொழி உரத்துக் கத்துகிறான். விடாதேயுங்கோ.... விடாதேயுங்கோ.....


மூவ் பண்றான் விட வேண்டாம்....அடி.. அடி.. அடி... டேய் விடவேண்டாம் மூவ் பண்ணு.

தங்கச்சி விடவேண்டாம் மூவ் பண்ணு. என்று கத்தியவாறே ஆவேசத்துடன் கத்திக்கொண்டு முன்னேறுகிறான். எதிரி நிலைதடுமாற போராளிகள் விடாமல் தாக்கிக் கொண்டு முன்னேறுகிறார்கள்.

அப்போதுதான் எதிரியின் எறிகணை சிதறல்கள் சில, கப்டன் அருள்மொழியின் மார்பு, கால், கை, என எல்லா இடங்களிலும் பல காயங்களை ஏற்படுத்தியது.

ஐயோ.. அம்மா என அருள்மொழி கீழே விழுந்தான். எந்த மழைநீரில் தவழ்ந்து, தவழ்ந்து ஏ்திரியின் சேனைகளை அழித்திட வந்தானோ அதே நீரில் அவனது இரத்தம் கசிந்து மழைநீரின் நிறத்தை சிவப்பாக மாற்றியது.

(20 ஆம் பக்கம் பார்க்க...)




# ஓ கடவுளே...!

முடிந்துவிட்டது... எல்லாமே கனவு போல முடிந்துவிட்டது....

நேற்றுவரை ராஜகுமாரன் போல மாமா... மாமா என்று என்னைச் சுற்றியும், இந்தக் குடும் பத்துக்காகவும் ஓடி ,ஓடி உழைத்த வன்... என் தங்கை இராஜேஸ்வரி யின் மூத்த புதல்வன்... என் மூத்த மருமகன்... இந்த குடும் பத்தின் மூத்த வாரிசு.. இன்று எல்லாமே அடங்கிப்போய் துண்டு துண்டாக சிதறியமையால் பொறுக் கிப் பொறுக்கி எடுத்து... ஒன்றாகச் சேர்த்ததை உடலாக வெள்ளைத் துணியினால் போர்த்தியபடி... நடு விறாந்தையில் அழுது அழுது எரியும் குத்துவிளக்கின் முன்னால் பெட்டியில் அடைத்த பிணமாகக் கிடக்கிறான்.

ராஜகுமாரா... என் ராஜகு மாரா... உனக்கா இன்று இந்தக் கதி? பெயருக்கேற்றாற் போல ஒரு ராஜகுமாரனாகவே ஓடி ஆடித் திரிந்த நீயா இன்று எல்லாமே அடங்கிப் போய் என்முன்னால் இப்படிக் கிடக்கிறாய்? என்னால் நம்ப முடிய வில்லை... நம்பவே முடியவில்லை.

சோதனை மேல் சோதனையாக வந்து... இழப்பின் மேல் இழப்புக்கள் ஏற்பட்டு அல்லற் படுபவர்கள் எல்லோரும் கடவு ளைக் கேட்பார்கள் ‘கடவுளே உனக்குக் கண்களே இல்லையா?’ என்று... அதுபோல இப்போதும் நானும் கேட்கிறேன் கடவுளே உனக்குக் கண்கள் மட்டுமல்ல இதயமும் கூட இல்லையா?


எந்த இழப்பையும் என்னால் தாங்கிக்கொள்ள முடியும், எனக்குத் திருமணம் முடிந்து எட்டு வருடங்களாகியும் எமக்கென்று ஒரு வாரிசு இல் லையே என்று என் மனைவி ஏங்கியேங்கி கோவில் கோவி லாக ஏறி இறங்கிய போது கூட நான் கலங்கியது இல்லை. கடைசியாக தொண்டைப் புற்று போய் வந்து படுத்த படுக்கை யாகக் கிடந்த என் மனைவி இறந்தபோது கூட நான் கலங்கிய தில்லை. ஏன்? சலரோகத் தாலும், இரத்த அழுத்தத்தாலும் ஒரு பக்கத்து கையும், காலும் இயங்காமல் இப்படிப் படுக்கையில் விழுந்த போது கூட நான் கலங்கவில்லை.

ஆனால்... இப்போது என்ராஜகுமாரனே போய் விட் டானே! என்னால் நினைத்துப் பார்க்கமுடியவில்லை. நான் முதன் முதலாக படுக்கையில் விழுந்த நாளை ஒரு முறை நினைத்துப் பார்க்கிறேன்....

அப்போது இவனுக்கு பன்னிரண்டு வயது, என் மனைவி ராஜலட்சுமி இறந்த பின் என் தங்கை, இவனின் தாய் இராஜேஸ் வரியே எனக்குமாகச் சேர்த்து இந்த வீட்டிலிலே அரிசி போட் டாள். தினமும் வேலை முடிந்த பின் சாப்பாட்டிற்காக இராஜேஸ் வரியிடம் வருவேன். செய்தது மின்சார இணைப்பு வேலை. அதனால் சில வேளை சாப் பாட்டிற்கு வரும்போது இரவு பத்து மணிக்கு மேலாகி விடும். வீட்டில் இராஜேஸ்வரி, இராஜேஸ்வரியின் கணவன்... தேவமனோகரன், பிள்ளைகள் எல்லோருமே உறங்கிவிடுவார்கள். ஆனால் இவன் மட்டும் எனக்காக வீட்டு வாசலிலேயே காத்துக்கொண்டிருப் பான். நான் வந்து... மாமா இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கோ... இன்னும் கொஞ்சம் சாப் பிடுங்கோ... என்றபடியே இவன் எடுத்துப் போடப்போடச் சாப்பிட்ட பின் இவனும் என்னுடன் எனக்குப் பக்கத்திலேயே படுத்துவிடுவான்.

ஒருநாள் இப்படித்தான் இரவு பத்து மணிக்கு மேலிருக்கும்..... வேலை முடிந்து வந்துகால், கை கழுவி இவன் சாப்பாடு போடும் இடத்திற்குச் சென்றுகொண்டிருந்த போது திடீரென தலைகிறுகிறுத்து அப்படியே விழுந்து விட்டேன்.

கண் விழித்த போது



ஆஸ்பத்திரி மணத்திற்கும், கட்டில்களுக்கும் நடுவே என்னையே பார்த்தபடி இவன் நின்று கொண்டிருந்தான். நான் கண் விழித்ததைக் கண்டு மாமா என்று அழைத்தவனை இழுத்து கொஞ்ச முயன்ற போது என் வலது கையையும், காலையும் என்னால் அசைக்க முடிய வில்லை. அன்று படுக்கையில் விழுந்த நான் இன்றுவரை இப்படியே படுத்துக்கிடக்கிறேன்.

இப்படிக் கையாலும் காலாலும் ஆகாதவனாகிப் போய்விட்டதை எண்ணி நான் இன்று வரை கலங்கவில்லை. என் ராஜகுமாரன் என்னைக் கலங்க விடவில்லை. எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் அவனே... அவன் மட்டுமே மனம் கோணாமல் செய்து வந்தான். என்னைக் குளிப்பாட்டுவது, எனக்குச் சாப்பாடு ஊட்டி விடுவது, எனது மலசல காரியங்களை கவனிப்பது எல்லாம் அவனே! சில வேளைகளில் நான் இரவில் சாப்பிடாமலே உறங்கி விட்டாலும் என்னைத் தட்டி யெழுப்பி என் தூக்கத்தைக் கலைக்காமல் நான், நானாகவே எழும்பும்வரை என் கட்டிலுக் கருகில் காத்திருந்து நான் கண்விழித்ததும் ஓடிப்போய் சாப் பாடு கொண்டு வந்து எனக்குத் தன் கையாலேயே ஊட்டிவிட்ட பின்புதான் அவன் படுக்கப்போவான்.

கை, கால் இயங்காது விட்டாலும் இந்த வீட்டில் ஒரு மகாராஜா போல் என் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது, ஆனால் அதுவும் அந்தக் கடவுளுக்கு பொறுக்கவில்லையா? என்னைப் பிடித்த சனியன் என்னுடனேயே கூட வந்து இராஜேஸ்வரி வீட்டையும் பிடித்து அங்கேயே தங்கியும் விட்டது. என்மைத் துனன், இராஜேஸ்வரியின் கணவன் தேவமனோகரன் கூட்டாளிகளுடன் சேர்ந்து அப்படி இப்படி இடையிடையே அதிகமாக குடித்துவிட்டு வந்து வீட்டில் அட்டகாசம் புரிந்தாலும், லொறி ஓடி லொறியில் கப்பல் சாமான்கள் ஏற்றியிறக்கி இந்த வீட்டையும் இங்கே முடங்கிக் கிடக்கும் என்னையும் ஒரு குறையும் வைக்காமல் பார்த்து வந்தவன்... துர் அதிர்ஷ்டம், பிடித்தவனாகிய நான் இந்த வீட்டினுள் முடங்கியதாலோ என்னவோ நான் வந்து இரண்டு வருடங்கள் முடிவதற்குள் ஒருநாள் சாமான் ஏற்றிக்கொண்டு போகும். வழியில் பாலத்தில் லொறியுடன் தடம் புரண்டு இப்போது என் ராஜகுமாரன் வந்திருப்பதைப் போலவே கை கால் முறிந்து பெட்டியில் அடைத்த நிலையில் அவனும் வந்து சேர்ந்தான்.

இந்தக் குடும்பத்தின் முழுப்பாரத்தையும் சுமந்து கொண்டிருந்த அவனும் போய்ச் சேர்ந்துவிட்டபின் சில

**புதுக்கவி**

நாட்களுக்குள்ளேயே இந்தக் குடும்பம் திக்குமுக்காடத் தொடங்கிவிட்டது. சேமிப்பு எதுவும் வைக்காமல் அன்றாட உழைப் பிலேயே காலம் கடத்திக் கொண்டிருந்த இந்த வீட்டில் எத்தனை நாளைக்கு இருப்பதை வைத்து எல்லோருக்கும் அரிசி போட முடியும்? எப்படி எனக் கும் இந்த வீட்டின் கடைக்குட்டி மருமகள் இந்திரகுமாரிக்கும் பால்மாவும், மருந்துகளும் தொடர்ந்து வாங்க முடியும்?

என்ன செய்வது என்று புரியாமல் உலையில் போட ஒரு பிடி அரிசி கூட இல்லாமல் ஒரு நாள் இராஜேஸ்வரி கலங்கி நின்ற போதுதான்... இது வரை காலமும் கிழக்குப் பக்கத் தாழ்வாரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பழையகால “றலி” சைக்கிளை என் ராஜகுமாரன் ஏதோவொரு அர்த்தத்துடன் கீழே இறக்கி இழகிப் போயிருந்த அதன் நட்டுக்களைப் பூட்டிக் காற்றும் அடித்தான்.

‘அம்மா இனிமேல் நான் பள்ளிக்கூடம் போகமாட்டேன் பக் கத்து வீட்டு வேலாயுதம் மாமாவு டன் விறகு கட்டப் போகப் போகிறேன்.’

இழப்பினாலும் இல்லாமையினாலும் இறுகிப் போயிருந்த இந்த வீட்டில் இப்படித்தான் முதன்முதலாக அன்று என் ராஜகுமாரனின் பதினான்கு வயது பிஞ்சுக்குரல் முடிவாகவும், கம்பீரமாகவும் ஒலித்தது. பள்ளிக்கூடத்தில் படிப்பிலும் விளையாட்டிலும் எப்போதும் முதலிடத்திலேயே வந்து கொண்டிருக்கும் ராஜகுமாரனா இப்படிக் கூறு கிறான்? இவனுக்கா இந்த நிலை? இவ்வளவு சுமை?

இராஜேஸ்வரி மட்டுமல்ல நானும் கூட அன்று அவன் அப்படிக் கூறிய போது மனது பொறுக்க முடியாமல் விம்மி வெடித்து அழுது விட்டேன். யேசுநாதர் சிலுவையை சுமந்தது போல் அன்று தனது பதினான்கு வயதில் இந்தக் குடும்பத்தின் சுமையைச் சுமக்கத் தொடங் கியவன் இன்றுவரை, பாழாய்ப் போன துர் அதிர்ஷ்டம் பிடித்த இந்தப் பதினேழு வயது முடிவு வரை எந்தவித அலுப்புச் சலிப்போ, சீறல் சினப்போ இல்லா மல் வயதுக்கு மீறிய பக்குவத் துடன் இந்தச் சுமையை சுமந்துகொண்டேயிருந்தான்.

அவன் பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்று வரை இந்த வீட்டிற்கும், எனக்கும் எந்தக் குறையும் வைக்கவில்லை. தம்பி, தங்கைமாருக்கு கொப்பி, புத்தகம் வாங்க வேண்டுமா? உடுப்புத் தைக்க வேண்டுமா? பால்மா வேண்டுமா? எதற்கும் அவன் கலங்கவில்லை, சினக்கவும் இல்லை.

ஆரம்பத்தில் விறகு வெட்ட மட்டுமே போய்க்கொண்டி ருந்தவன் கொஞ்ச நாட்களில் எப்படியோ தனது தந்தை ஓடிய லொறியின் முதலாளியைக் கண்டு கதைத்து அவரின் லொறியில் சாமான் ஏற்றும் கூலியாகவும் போய்வரத் தொடங்கிவிட்டான். லொறியோட்டம் இருந்தால் லொறிக்குப் போவது, ஓட்டம் ஏதும் கிடைக்காவிட்டால் விறகு வெட்டப் போவது என்று எப்படியோ மாறி மாறி ஓடி உழைத்து எங்கள் எல்லோரையும் மிகவும் சிறப்பாகவே வைத்திருந்தான்.

இவ்வளவு சுமைகளுக் கிடையிலும் மாமா சாப்பிட்டீர்களா? மாமா மருந்து குடித்தீர்களா? என்று ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு முறையாவது வந்து கேட்டுவிடுவான். கொஞ்சம் ஓய்வு கிடைத்து வீட்டில் நின்றால் அந்த நேரத்தில் என் காரியங்கள் எல்லாவற்றையும் அவனே செய்து விடுவான். வேறு யாரையும் செய்ய விடமாட்டான்.


“மாமா! முதலாளியின் லொறி ட்ரைவரிடம் நான் லொறியோடவும் பழகிக் கொண்டிருக்கிறேன்.கொஞ்ச நாட்களில் நானும் அப்பாவைப் போல் லொறி ட்ரைவராகி விடுவேன்”- என்று என் காரியங்களைக் கவனிக்கும் போதெல்லாம் அடிக்கடி சொல்லி தனக்குள்ளேயே சந்தோசப்பட்டுக் கொண்டிருப்பான். வீட்டில் ஒவ்வொருவரின் பிறந்தநாள் வரும் போதெல்லாம் எப்படியாவது அவர்களுக்கென்று ஒரு புது உடுப்பு எடுத்து வந்து விடுவான். என்னையும் இராஜேஸ்வரியையும் கூட விடமாட்டான். உடுப்புக் கொண்டு வந்து போடச் செய்து விடுவான்.

பாதை தெரியாது தடுமாறிக் கொண்டிருந்த எங்களுக்கெல்லாம் பாதை காட்டி பராமரித்துக் கொண்டிருந்த என் ராஜகுமாரனுக்கு கொழும்பு பாதை திறப்பும், தடை செய்யப்பட்ட பகுதிகளுக்கான பாதை திறப்புமே எமனாகிவிட்டதா? கொழும்புப் பாதைத் திறப்பால் கப்பல், லொறி ஓட்டம் குறைந்தது. அதே வேளை தடை செய்யப்பட்ட பகுதிகளுக்கான பாதை திறப்பால் விறகு வெட்ட வர அதிக இடம் கிடைத்தது. லொறி ஓட்டம் குறைந்து விட்டதால் விறகு வெட்டவே அதிகம் போய் வ்ர வேண்டியிருந்தது.

நேற்றும் இப்படித்தான் வழக்கம் போல் எல்லோரையும் விட முதலில் அவன் எழுந்து எனது காலைக் கடன்களை முடிக்க உதவிவிட்டு, இராஜேஸ்வரியிடம் ‘அம்மா பழந்தண்ணீ இருக்கா?’

(23ஆம் பக்கம் பார்க்க..)

**இறங்குங்கோ**



**சாரதி:-** ஆரப்பா மணியடிச்சது இறங்குங்கோ...இறங்குங்கோ...
**ஆள்:-** அது நான் உறக்கத்தில பியூனக்கூப்பிட அடிச்சது




## பாம்பு பற்றிய தகவல்கள்

01. உலகிலே சுமார் 2500 வகையான பாம்புகள் உண்டு.
02. பாம்புகளில் 100 இனம் மட்டும் தான் விடம் உள்ளது.
03. உலகிலே அதி நீளமான பாம்பு அன கொண்டா.
04. அன கொண்டாவின் நீளம் 50 அடி ஆகும்.
05. பாம்புகள் பலமாதம் வரை உணவின்றி வாழும்.
06. பாம்புகள் வாசனையை நாவினால் உணரும்.
07. மலைப் பாம்புகள் 50 - 100 வரை முட்டை இடும்.
08. மலைப் பாம்புகள் விடம் அற்றது.
09. பாம்பின் ஆயுற்காலம் 15 ஆண்டுகள்.

செ. எழில்

## எங்கள் அணில்

எங்கட வீட்டுவளவுகளில - வீடுகளில விர்ரென்று அங்கையும் - இங்கையும் - மிதிவண்டி மணிச்சத்தம் மாதிரி கத்திக்கொண்டு - பழங்களை தேங்காயளை கொறிச்சுக் குதறிக் கொண்டு - திரியிற அணிலை உங்களுக்கு வடிவாத்தெரியும்.

சாம்பல்நிறத்தில குஞ்சம் போல வால் கூனல் மாதிரி முதுகில மூண்டு வெள்ளைக்கோடுகள் இருக்கிற அதே அணிலைத் தான் சொல்கிறன். சிலபேர் வீட்டில செல்லப்பிராணியாகவும் இதை வளர்ப்பீகள்.

இந்த அணிலைப்பற்றித் தான் இப்ப நான் சொல்லப் போறன். எங்களிட்ட நீங்க பார்க்கிற அணிலைத்தவிர காடுகளில நல்ல பெரிய 'மர அணில்' என்கிற அணிலும் இருக்கிறது.

முதல் வீட்டுப்பக்கங்களில இருக்கிற அணிலைப் பற்றிப் பாப்பம். இந்த அணிலுகள் தென்னைமரவட்டுகள், மரப் பொந்துகள், வீட்டுக்கூரைகளில தும்புகளை சேர்த்து கூடுகட்டி வாழும். குஞ்சம் மாதிரியான அதின்ர வால் அந்தரத்தில தாவேக்குள்ள



ஒரு பரசூட்மாதிரி கீழ விழாம பாதுகாக்குது.

நீங்க பார்க்கிறமாதிரி இந்த அணிலுகள் பழங்களைத்தான் சாப்பிடுறது. பூனை - பாம்பு எல்லாம் அணிலுகளுக்கு வில்லன்கள் அதால அணிலுகள் உயரமான இடத்தில தான் கூடுகட்டி இருக்கும்.

அணிலுக்கு பல் இருக்கும் - பெரிய கூர்ப்பல் தொடர்ந்து இப்பல் நீளமாக வளருகிறதால அது அடிக்கடி பல்லை தேச்சு- வளர்வதைக் குறைக்கும். உலகத்தில 267 வகையான அணிலுகள் இருக்குது. சில நாடுகளில கனதூரம் பறக்கிற வல்லமை கொண்ட அணிலுகளும் இருக்கு. ஆனால் எங்கட அணில்கள் அப்படிவல்லமை கொண்டவை அல்ல. இது எங்கடை வீட்டுப்பக்க அணில். அதேமாதிரி எங்கடை காட்டுக்குள்ள இருக்கிற மர அணிலைப்பார்ப்பம். இந்த அணிலுகளும் பழம், பூ, காயளைத்தான் சாப்பிடுகிறது. ஆனால் வீட்டுப்பக்க அணிலைவிட பல மடங்கு பெரிசானது மரக்கொப்புகளிலதான் இது கூடுகட்டி இருக்கும். இது கூடுதலாக கறுப்பு நிறமாகவும் வாய்ப்பகுதி வெள்ளையாகவும் இருக்கும். வால் பெரிய குஞ்சமாக வெள்ளையாக இருக்கும்.

எங்கட காட்டு மர அணிலின் உயிரியல் பெயர் -

ரடுபாமக்ரூரா டான்டோலெனா

(தி.த)

### தமிழ் பிள்ளை...




***கணவன்:***

(கோபமாக) என்னப்பா செய்யிறீர் பிள்ளை வாள் வாளெண்டுகத்துறான்.

***மனைவி:-***

அவன் தமிழ்ப்பிள்ளை. வாள் வாளெண்டுதான் கத்துவான். நாங்கள்தான் துப்பாக்கி எண்டு திருத்திச் சொல்லோணும்.

## கைவண்ணம்



**இ.மயூரன்,**
**தரம் -01**
**உடையார்கட்டு ,**
**தேராவில்.**

## சொற்சிலம்பம் - 47

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ா | ச | கா | ச | த் | வ | பெ |
| யி | க் | ப | கு | ழ | கே | பூ |
| ளி | ன் | து | ர | த | ரு | ங் |
| ங் | ள | யா | மா | உ | டி | ல் |
| மு | ம | ர் | ம் | ந் | தா | ன் |
| எ | ல | ரி | தா | ம் | தி | கி |
| க | வா | மு | ளி | ளீ | பி | த |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 45 இன் விடைகள்

01. சங்கிலியன்
02. எல்லாளன்.

01. நாய்.
02. பூனை.

### சொற்சிலம்பம் - 45 இன் பரிசுக்குரியவர்

**அ.குந்தவை,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**மல்லாவி.**

### சொற்சிலம்பம் - 45 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. த. நிர்மலன், கோவில் புதுக்குளம், வவுனியா.
02. ச. சுவேக்கா, மு/கைவேலி கணேசா வித்தியாலயம்.
03. செ. மலர்வேந்தன், ஐயன்குளம், அ.த.க.பாடசாலை.
04. இ.பார்த்தீபா, தரம்-04, கிளி/சிவநகர் அ.த.பா, உருத்திரபுரம்.
05. சா. நிலக்ஷன், நீர்ப்பாசன விடுதி, வவுனிக்குளம்.
06. வி. கிரிஷாயினி, ஆண்டு -05, அக்கராயன் மகாவித்தியாலயம்.

01. சிறந்த தமிழ்ப் புலவர்கள் இருவரின் பெயர்கள்?

01) ......................................

02) ......................................

*சொற்சிலம்பம் -47*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

02. தமிழர் தாயகத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிப் பயிர்கள் இரண்டு,?

01) ......................................

02) ......................................


பெயர் :- ......................................

முகவரி :-......................................

......................................

## எலியாரின் தொப்பி

### பகுதி-01





கவிதைகள்

# முனைப்புகள்

பிடில் மீண்டும்
சுருதிபார்க்கப்படுகின்றது
நீரோ மன்னனின்
கைவாசிப்பிற்காக மீண்டும்
மரணச் சடங்கின் மாளிகைகள்
இலங்கை எங்கும்
அலங்கரிக்கப்படுகின்றன
அரை இறத்தலின் பின்
துளிர்விட்ட வேர்களின்
பசுமைகள் அஞ்சுகின்றன
கொத்தளங்களின் ஓசைகள்
மின்னல்களாய் இடிகளாய்
நிலத்தில் இறங்க துடிக்கின்றன
ஒரு வேதம் ஓதி
யாகம் வளர்ப்பது போல்
வசை ஓதல்கள்
செஞ்சட்டை இனவாதிகள்
கோர உறுமல்களாக
போர் ஓதல்களாக
பிரித்தேரர்களின் பிரித்தோதப்
படுகின்றது
சமாதான சதங்கை கழற்றப்பட்டு
ரவை கோதுகளின்
சலசலப்பில் போர் சஞ்சரிக்க
அவர்கள் கால்ஏவுகின்றன
மாயைகள் பல
வர்ணஜாலங்களாக
தேசம் எங்கும்
தோற்றுவிக்க
பட்டுக்கொண்டு இருக்கின்றன
ஜாலங்களின் வர்ணங்கள்
உருகாணப்படுதலில்
அவை சூழ் வலை பின்னல்களாக
கூடிக் கட்டி கூண்டில்
தமிழ் இனத்தை அடைக்க
கூடும் உருபுகளாய்
ஆனால்
இவற்றுள்
இவை அனைத்தையும்
எதிர்பார்த்தும்
எதிர்நோக்கியும்
எதிர்க்கவும்
எத்தனை நிமிர்வுகள்
எம் திசைகளில்
நிமிர்ந்து புலிவீரன்
சொல்லுகின்றான்
இடைக்காலநிர்வாகம்
எம் இனத்திற்காகக் கேட்கின்றோம்
ஒரு பிராணவாயு வாகமட்டும்
எதிராளிகள்
சொல்லுகின்றார்கள் போலும்
இயற்கையாகவே சுவாசிக்க
முயலுங்கள் என்று
இயற்கை சுவாசிப்பின் வழி
காற்று தனி ஈழக்காற்றோ...

குளக்கோட்டன்

# முட்கள்

ஐம்புலன்கள் அடங்கலாக எனது
கைகள் நெஞ்சு முதுகு இங்கெல்லாம்
கட்புலனாகாதமுட்கள் தைத்து மரணவலி
ஏற்படும் பொழுதுகளே என் வாழ்வில் அதிகம்.

தொடர்பனி பொழியும் தேசமொன்றில்
உடலும் உணர்வும் விறைத்தபடி
ஆயுள் நாட்களால் அலைக்கழிக்கப்படுபவன் நான்.
என் பெயர் புலம்பெயர்ந்தவன்.

எனது இரவுகளை எனதுறவுகளுக்காகவும்
பகல்களை வெள்ளைத்தோல்களின் புன்னகைக்காகவும்
சமர்ப்பித்தமையினால் சயன அவஸ்தையில்
எனது விழிகளுக்குள் ஓராயிரம் முட்கள் குத்துகையில்
ஆத்மா இடும் மரணஓலம் யாருக்கும் கேட்பதில்லை.

நிலவைப்பிடித்து வருவோம் வாவென
என் மழலையை முதுகில் ஏற்றிய
நாட்களின் நினைவுமீட்டல்களினால்
முதுகைத் தைக்கும் முட்களின் துன்புறுத்தலில்
என்னுயிர் நாடியே அறுந்துபோய்விடுகிறது.


எனைப் பிரிய நேர்ந்த கடைசி நிமிடங்களில்
நெஞ்சில் முகம்புதைத்து கண்ணீர் பிலிற்றிய
எனதில்லாளின் இல்லாமையினால்
நெஞ்சுரோமங்கள் ஒவ்வொன்றும்
முட்களாய் சபித்துப் போகையில்
வேதனையின் விளிம்புகளைத் தொட்டிருக்கிறேன்.

பொன்னிறக்கேசமும் பூனைக்கண்ணும்
கொண்டோர் புரியாத வார்த்தைகளால்
எனைத் தூசிக்கும் பொழுதுகளில்
யாதொன்றும் வாய்பேசா என்னுதடுகளை
அறுக்கும் முட்களைப்பிடுங்க
வன்கரங்கள் எங்கேனுமுண்டோ.

சிதையேறிய என் தாய்க்கும் தந்தைக்கும்
கொள்ளியிட முடியாதுபோன என்கைகளை
நிந்திக்கும் முட்களின் ரணவலியில்
சிதைநெருப்பின் வெம்மைவேகத்தை
அளந்துபார்த்து அயர்ந்து போகிறேன்.

அடர்ந்த அக்கினிக்குள்ளும் ஒளியூட்டும்
சுவாலையுண்டென்பதைப்போல்
ரணகளமாகிப்போன எனது சரீரத்தில்
உள்ளங்காலை மட்டும் உலர்த்தி வைத்திருக்கிறேன்.
எந்த முட்களும் அதில் பாய்ந்துவிட முடியாது.
ஏனெனில்
என்னை நிட்டூரப்படுத்தும் முட்களைப் பொசுக்கவேணும்
எனது தாய்மண்ணில் நான் காலாற நடக்கவேண்டும்.

வேல்.லவன்



# இலக்கியப்பகிர்வு

# புதிய தரிசனம்

யாழ்ப்பாணம் வதிரி கரவெட்டியில் இருந்து புதுப்பிறவி எடுத்திருக்கிறது. புதிய தரிசனம் கலை இலக்கிய சமூக அறிவியல் ஏடு "புதுவிளைச்சல்கள் காண்போம்" என்ற எண்ணக்கருத்துடன் புறப்பட்டு இருக்கும் இவ் இதழின் சூத்திரதாரிகள் புதியவர்கள்தான்.

ஆடி2004இல் வெளியாகியுள்ள "புதிய தரிசனம்" அதன் நான்காவது இதழாகும். அதன் முதல் மூன்று இதழ்களையும் படிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணம் புத்தகசாலை ஒன்றில் அண்மையில் அதன் நான்காவது இதழ் மாத்திரம் கிடைத்தது.

"இலக்கிய உலகில் ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதல் எங்களை இன்னும் இயக்கும் " என்று கூறும் புதிய தரிசனம் ஆசிரியரும் அவர்தம் குழுவினரும், நிறைந்த நம்பிக்கைகளுடன் களம் இறங்கியுள்ளனர்.

தளராத மன உறுதியும், வீழ்ந்தாலும் எழுந்து நிற்கின்ற தன்மையும் இயல்பாகவே படைப்பாளிகளுக்கு இருக்கவேண்டிய பொது இயல்பாகும். படைப்பாளிகளுக்கு இருக்க வேண்டிய இந்த குணாம்சம் சஞ்சிகை வெளியீட்டாளர்கள்/ ஆசிரியர்களுக்கு அதிகமாகவே இருக்க வேண்டும். இல்லாவிடின் ஆடிக்காற்றில் அள்ளுண்டு போவது போல அள்ளுண்டுபோய் வி[illegible]ர்கள்.

"எங்க[illegible] பயணம் தொடரும்" விரைவில் அடுத்த இதழ் உங்கள் கரங்களில் தவழும். எனக்கூறும் புதிய தரிசனம் ஆசிரியர் அடுத்த இதழை ஆண்டு மலராக அறிவித்துள்ளார். எனவே கனதியான (பக்கங்களால் மட்டுமல்ல) ஒரு மலரினை நாங்கள் எதிர்பார்க்கலாம்.

சஞ்சிகையின் பிரதான அம்சங்களில் ஒன்று கலாநிதி செ. யோகராசா அவர்களது நேர்காணலாகும். படைப்பாளரின் பன்முக ஆற்றலையும் வெளிப்படுத்தும் விதமாகவும், வாசகர்களின் தேடலுக்குத்துணை போகக்கூடியதாகவும் இவ்வாறான நேர்காணல் அமைவது அவசியமானதாகும்.

எனினும் கலாநிதி அவர்களது நேர்காணலில் ஒரு போதாமை உள்ளமை கவனிக்கத்தக்கது. ஒரு இலக்கிய சஞ்சிகைக்கான நேர்காணல்போல அமையாது ஒரு பத்திரிகைக்கான நேர்காணல்போல, அதாவது இடத்தைமிச்சமாக்க மேம்போக்காகக் காணப்பட்ட நேர்காணல்போல உள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நேர்காணல்கள் சற்று ஆழமாக அமைய வேண்டியது அவசியமாகும்.

பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா அவர்களின் கிராமங்கள் தொடர்பான கட்டுரை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தகவல்களை உள்ளடக்கிய கட்டுரை. எனினும் இந்த விடயங்கள் தொடர்பாக மேலும் பல தகவல்கள் இருக்கும் ஒரு நூலாக வெளிவரக்கூடிய அளவுக்கு ஆய்வுக்குரிய விடயப்பரப்பு.

இலங்கையிலுள்ள திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் கிராமங்களான சதுர்வேதி மங்களம், பதவியாவன,ஸ்ரீபார்வதிபுரம், கோக்கண்ணவன,மச்சிய கேதீஸ்வரர்கிராமம் தம்பலகாமம் ஆகியன ஈழத்தமிழர் அறிவியல் பண்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்த மகா கிராமங்களாகும், எனக்கட்டுரை கூறுகின்றது.

சஞ்சிகையில் இரண்டு சிறுகதைகள் உள்ளன. "தாட்சாயணி" எழுதிய "ஒரு உறவின் வெட்டுமுகம்" என்னும் சிறுகதை பெண்களின் இயல்பான மனக்குமுறலை வெளிப்படுத்தும் கதை. வழக்கமான வாய்ப்பாட்டுத் தனமான கதை முறைமைகளில் இருந்து மாறி உள்ளகதை.

"வெளிலை போடாநாயே" என்று எத்தனை பெண்கள் சொல்வார்கள். சொல்ல முனைவார்கள். என்பதற்கெல்லாம் அப்பால் அவ்வாறான செயற்பாட்டில் பெண்கள் இறங்கினால் வாயும் வயிறுமாக அவலப்படும் பல பெண்களின் ஈனநிலை மாற்றம் அடையும் என்று உறுதியாகக் கூறலாம்.

பாரதியார் கூறுவது போல நிமிர்ந்த நெஞ்சும் நேர் கொண்ட பார்வையுமாக பெண்கள் மாற வேண்டும். அது இல்லாமல் நெழிந்து வளைந்து ஏனையவர்களின் செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்க முனைந்தால் பெண்களின் கதி அதோகதிதான்.

தாட்சாயணியின் கதையில் சில நெருடல்கள் இருந்தாலும் இவ்வாறான தன்மை கொண்டபெண்கள், பெண்கள் மத்தியில் இருந்து புறப்படவேண்டும். அந்தவகையில் தாட்சாயணி பாராட்டுக்குரியவர்.

"எதிர்ப்பிலக்கியம் ஒரு கலாசார ஆயுதம்" என்னும் நூலுக்கு விமர்சனம் எழுத முனைந்துள்ள இராகவன் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பாளனின் நேரடி அனுபவங்கள் எதிர்ப்பாளனின் நேரில் அனுபவங்கள், எதிர்ப்பிலக்கியப்போலிகள் தொடர்பில் கருத்துக்களை வெளிப்படுத்த முனையும் அவர் எதிர்ப்பிலக்கியப் போலிகள் என்று சிலரைக் குறிப்பிடுகின்றார்.




தன்னை ஓர் எதிர்ப்பாளனாகக் காட்டிக் கொள்ளவருகின்றவர் நேரடியான அனுபவமோ, மறைமுகமான அனுபவமோ எதுவுமின்றி எடுத்த எடுப்பிலேயே தன் முனைப்புடன் எதிர்ப்பிலக்கியத்தை ஒரு படைக்கலமாகக் கையாளுவதன் மூலம் நேரும் விபத்தினால் எதிர்ப்பிலக்கியப்போலிகள் தோன்றுகின்றன. சிலவேளைகளில் எதிர்ப்பாளனுக்கு நேரடியான அல்லது மறைமுகமான அனுபவங்கள் இருக்கும். அதைத் தன் முனைப்புடன் பதிவு செய்ய முயலுகையில் அது எதிர்ப்பிலக்கியப் போலியை உருவாக்கிவிடும். எனக்கூறும் ராகவன், ச.முருகானந்தன், வளவை வளவன், யோ.கர்ணன் போன்றோரின் சில சிறுகதைகள் எதிர்ப்பிலக்கியப்போலிகளுக்கான நல்ல எடுத்துக்காட்டுக்களாகும் எனவும் கூறுகின்றார்.

இராகவன் கூறுவது உண்மையாகவும் இருக்கலாம். அது வேறு விடயம். ஆனால் இவ்வாறு கூறப்படுபவர்களில் ஒருவரான கோ.கர்ணன் ஒரு போராளியாக நீண்ட காலம் பணியாற்றியவர். அவரது படைப்பாக்க முயற்சியில் உள்ள குறைபாட்டால் இவ்வாறான நிலைமை வரலாம். ஆனால் எடுத்த எடுப்பிலேயே இவ்வகையான குற்றச்சாட்டுக்களை ராகவன் போன்றவர்கள் சுமத்தலாமா?

இவ்வாறான முடிந்த முடிவுகளை மொட்டையாகத் தெரிவிக்கக்கூடாது. போற வண்டிலில் கோடாலிகளைப்போடுவதுபோல போடாமல் விளக்கமாக உதாரணங்களுடன் தமது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதுதான் யோ.கர்ணன் போன்ற படைப்பாளிகளுக்கு உதவியாக அமையும். அவர்களது மாற்றுக் கருத்துக்களை முன்வைக்க அவர்களுக்கு உதவி புரியும்.

காலங்காலமாக எங்கள் இலக்கிய உலகில் இவ்வாறான கருத்துக் கூறல்கள் கூறுவோர் உள்ளனர். எதையும் பூரணமாக விளக்காமல் கூறும் இவர்கள் தங்கள் நடைமுறையினை மாற்றமுனைய வேண்டும்.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்




திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. இரு உள்ளங்கள் இணைந்து இல்லறத்தை நல்லறமாகப் புரிந்துணர்வுடன் பகிர்ந்து கொண்டு வாழ்க்கையை உரிய முறையில் நடாத்தி இல்லற பரிசுகளான தமது பிள்ளைச் செல்வங்களை நாளைய சமுதாயத்தின் விற்பன்னர்களாக உருவாக்கப் பாடுபடுபவரே திருமண வாழ்வினை நிறைவுடன் வாழ்ந்து முடிக்கின்றார்கள்.

ஆனால் இந்த நிலை எந்த அளவில் இப்போது கடைப்பிடிக்கப் படுகிறது என்றால் எவராலும் கூறி விட முடியாது. இந்த நிலையை இப்போதைய பல குடும்பங்களிலேயே காண முடியாமல் உள்ளது. இவ்வாறு ஏன் இவர்கள் நடந்து கொள்கின்றார்கள், இவர்களின் இந்த விரக்தி நிலைக்குக் காரணம் என்ன? எமது சமுதாயத்தைப் பார்ப்போமானால் இதற்கான காரணங்களை நாம் உரிய முறையில் புரிந்து கொள்ள முடிகின்றது.பொதுவாக இன்றைய பெண்கள் அவர்கள் தங்களது சொந்த நலன்களிலேயே அக்கறை மிகுந்தவர்களாகக் காணப் படுகின்றார்கள் இவ்வாறான பெண்கள் திருமணத்தின் பின்னரும் அதனை மாற்றி அமைத்துக் கொள்ள நினைப்பதில்லை. அதுவே பின்னர் அவர்களின் எதிர்கால வாழ்வின் எதிர் மறையானவை என்பதை பின்னரே நினைத்து வருந்துகின்றார்கள்.

# இல்லறம் சிறக்க இணைந்து செயற்படுங்கள்



குடும்பப் பெண்ணை பொறுத்த மட்டில் இல்லறம், கணவன், பிள்ளை என்பவற்றோடு சேர்த்துத் தான் தனது ஏனைய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு நடந்து கொள்ளும் பெண்ணாலேயே இல்லறத்தை இனிமையான பாதையில் இட்டுச் செல்ல முடியும். இவ்வாறு அவளால் நடந்து கொள்ள முடியாத வேளையில் தான் கணவன்- மனைவிக் கிடையிலான இடைவெளி ஏற்பட்டுப் பின்னர் அவை பல பிரச்சினைகளிற்கு முகம் கொடுத்து விவாகரத்து வரை சென்று முடிகின்றது.

இன்னுமொருபுறத்தில் எடுத்துக் கொண்டால் அந்த குடும்பத்தில் இரண்டு மூன்று பிள்ளைகள் பெற்றவுடன் ஒரு சில பெண்கள் தங்களைத் தாங்களே மறந்துவிடுகின்றார்கள். தங்களது நேரம் முழுவதையும் வீட்டு வேலைகளுடனும் ஏனைய நேரங்கள் முழு வதும் தமது பிள்ளைகளின் மீது மட்டுமே செலுத்துகின்றார்கள். இவளின் பார்வையினில் கணவன் என்பவன் வெறும் உழைப்பு, இயந்திரமாகவும் அன்னியப்பட்ட ஒருவனாகவும் பார்க்கப்படுகின்றான். கணவனின் நலனில் அக்கறை இன்றி அவர் என்ன செய்கின்றார் எப்படி உழைக்கின்றார் அவனது உணர்வுகளை பகிர்ந்து கொள்வதாகவே இல்லை. இதனால் கணவனிற்கும் வாழ்க்கையின் மீது ஒரு விரக்தி நிலை ஏற்படுகின்றது. நாளடைவில் அந்த விரக்தி நிலை முதிர்வடைந்து இந்தக் குடும்பங்களிலும் ஒரு மகிழ்ச்சி அற்றுப் போய் பெரும் விரிசல் நிலை ஏற்படுகின்றது. அதே போல சில கணவன்மாரும் வெளியே வேலைத். தளங்களில் ஏற்பட்ட பிரச்சினை நெருக்குதல்களை கட்டிக் காவிக் கொண்டு வருகின்றார்கள் மனைவி ஏதாவது ஒரு பேச்சை எடுத்தால் போதும் அதை மனைவி மீது கொட்டி தமது ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மனைவி தனது பிரச்சினைகளை மனம் விட்டுக் கதைக்க முடியாமல் தனக்குள்ளேயே அடக்கி அடக்கி மூட்டை கட்டி காலப் போக்கில் அது உறுதிப் பிரச்சினையை பூதாகாரமாகக் கிளப்பி கணவன்- மனைவிக்கிடையே பிரிவினை ஏற்படுத்துகின்றது.

இதனால் இல்லறம் சிதைகின்றது. வாழ்க்கை இடை நடுவினில் கேள்விக்குறியாகின்றது. பிள்ளைகளின் எதிர்காலம் உத்தரவாதமின்றி ஊசலாடுகின்றது. இவற்றிற்கெல்லாம் தீர்வு எங்கே? எம்மிடமேதான் அதற்கான தீர்வுகளும் உள்ளன. கணவன்-மனைவி இவர்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு மேலோங்கி நிற்க வேண்டும். ஒருவரால் தீர்வு காண முடியாத பிரச்சினைகளை இருவரும் கலந்தாலோசித்து தீர்வினை எட்ட வேண்டும். குடும்ப வாழ்வினை பாதிக்கும் விடயத்திற்கு அப்பாற் பட்டவராக எடுத்துக்காட்டாக இருவரும் திகழ வேண்டும். கணவனினுடைய உணர்வுகளை மனைவி மதித்தும் மனைவியுடைய எதிர்பார்ப்புக்களை கணவன் புரிந்து கொண்டும் வேலைத் தளங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை வீட்டுக்குள் காவிச் செல்லாமல் அதனை ஒரு செருப்பைப் போல வெளியே கழற்றி வைத்து புதிய மனிதனாக உள்ளே செல்லுங்கள். வேலை வேலை என்று ஓடித்திரியாமல் நாள் ஒன்றில் குறிப்பிட்ட நேரத்தை பிள்ளைகளுடன் சந்தோசமாகப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

எப்போதும் எதையும் ஆக்க பூர்வமாகச் சிந்தித்து நடவுங்கள் இல்லறத்தை ஒரு நல்லறமாக்க உங்களின் நடத்தைகளை மாற்றி அமைத்து சிறப்பாக வாழ்வினை முன்னெடுத்துச் செல்லுங்கள்.

மு.வ.சுதா

# சவ்வரிசி வடாம்




## தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| சவ்வரிசி | 400 கிராம் |
| பச்சை மிளகாய் | 10 |
| பச்சரிசி மா | 100 கிராம் |
| பெருங்காயம் | ஒரு சிறிய துண்டு |
| உப்பு | தேவையான அளவு |

## செய்முறை:-

முதல் நாள் இரவு சவ்வரிசியை சுத்தப்படுத்தி அளவான தண்ணீரில் ஊற வைக்கவும்.

பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம் ஆகியவற்றை விழுதாக அரைத்துக் கொள்ளவும்.

ஒரு அகலமான பாத்திரத்தில் ஒரு லீட்டர் தண்ணீரை அடுப்பில் வைத்து கொதித்தவுடன் ஊற வைத்த சவ்வரிசியை அப்படியே விட்டுக் கட்டியில்லாமல் கிளறவும். சவ்வரிசி பாதியளவு வெந்தவுடன் தட்டைப் போட்டு மூடி அடுப்பை அணைத்து விடவும்.

சிறிது நேரம் கழித்துச் சிறிதளவு தண்ணீர் விட்டு பச்சரிசி மாவைக் கட்டியில்லாமல் கரைத்துக் கொண்டு சவ்வரிசி மாவோடு கலக்கவும்.

பின்னர் பச்சை மிளகாய் விழுதையும் கலந்து நன்றாகக் கிளறி தட்டுப் போட்டு மூடி விடவும்.

கலவை ஆறிய பிறகு புளிப்பு தேவையானால் சிறிதளவு தயிர் சேர்த்துக் கொள்ளலாம். அல்லது எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து கலந்து கொள்ளலாம்.

ஸ்பூனில் எடுத்து ஊற்றும் அளவிற்குத் திரவமாக உள்ள சவ்வரிசிக் கரைசலை பிளாஸ்டிக் காகிதத்தின் மேல் அளவான வட்டங்களாக இட்டு வெயிலில் நன்றாகக் காய வைத்துக் கொள்ளவும்.

வடாம் நன்கு காய்ந்தவுடன் ஈரமில்லாத போத்தல்களில் நிரப்பிக் கொள்ளவும் தேவையான பொழுது எண்ணெய்யில் பொரித்து கரகர வென்று ருசியாகச் சாப்பிடலாம்.

# வேறு பல வேலைகள்

பிரம்பு, தோல், இறப்பர் மற்றும் வெள்ளிப் பொருட்களை அதிக நாட்கள் கழுவாவிட்டால் இவற்றின்மீது திட்டுத் திட்டாக அழுக்குப் படியும், பிரம்பு, தோல், இறப்பர் பொருட்கள் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக வெடிப்படையும். இவற்றை சுத்தம் செய்வதற்கு, சிறிய வெள்ளைச் சவர்க்காரத் துண்டைத் தண்ணீரில் நன்கு கரைத்துக் கொண்டு, ஒரு கோப்பை அற்ககோலையும், இரண்டு கோப்பை எண்ணெயையும் கலந்து கழுவலாம். நீளமான முனைகளை உடைய தூரிகையில் இடைச் சந்துகளைத் தேய்த்து அடர்த்தியான அழுக்குகளைப் போக்கலாம். வண்ணப்பூச்சுள்ள இந்தப் பொருட்களுக்கு வெந்நீர் நன்கு உதவும், பளபளப்பைக் கூட்டும்.

வெள்ளிப் பொருட்களைத் தூய்மையான, சூடான சவர்க்காரத் தண்ணீரால் முதலில் கழுவி, பின்பு இளஞ்சூடான தண்ணீரில் ஊற வைத்து எடுத்து, ஈரமில்லாத சுத்தமான துணிகளால் துடையுங்கள். அமிலங்கள் கூடவே கூடாது.

அடுப்பு, அலுமாரி மற்றும் குளிர்ச் சாதன பெட்டிகளையும் கழுவ வேண்டும், அடுப்பின் மேல் சிந்தி ஒட்டியுள்ள உணவுகளை அப்புறப்படுத்திப் பின் கழுவ வேண்டும். இவற்றை ஈரத்துணியாலும் துடைத்துச் சுத்தம் செய்யலாம்.

எப்பொழுதும் சுத்தமாகவும், பார்வையைப் பற்றி இழுக்கும் பளபளப்புடனும் இருக்க வேண்டியவை உணவு மேசை, உணவு அலுமாரி மற்றும் நாற்காலிகள், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் ஈரத்துணியால் அழுத்தித் துடைக்க வேண்டும். வாரந் தவறாமல் கழுவுவதும் அவசியம். பளபளப்பான மேல்பரப்பு எப்பொழுதும் மின்னுகிற மாதிரி இருப்பதே அருமைதான்.

சமைத்த உணவுகளை வைக்கும் அலுமாரியை உள்ளும் புறமும் அடிக்கடி துணியால் தட்டித் தூசுகளை அகற்ற வேண்டும். பின்பு ஈரத் துணியால் துடைக்கலாம். அல்லது தண்ணீர் விட்டும் கழுவலாம். கீழே சுத்தமான தாளையோ இறப்பர் துணியோ பரப்பி வையுங்கள். எதுவும் எப்பொழுதும் சிந்தி இருக்கக் கூடாது. கொசு, ஈ, எறும்பு எதுவும் உள்ளே அண்டக் கூடாது. எக்காரணத்தைக் கொண்டும் இதனுள் மருந்துகளை அடிக்காதீர்கள்.

* * *

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர் பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

வீடு,
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# இப்படிச் செய்யலாம்...

அயன் பொக்சை உபயோகித்த பிறகு, அது கொஞ்சம் சூடாக இருக்கும். அப்போது அயன் பொக்சின் அடியில் இலேசாக ஒலிவ் எண்ணெய்யைத் தடவி வைத்து விட்டால், அது எப்போதும் பளபள வென்று இருக்கும். அயன் பண்ணும் போது மிருதுவாக இருக்கும்!

* * *

வெண்டிக்காயை நறுக்கும் போது அதன் காம்புகளை விட்டெறிந்து விடக்கூடாது. தோசைக்கு அரைக்கும்போது உழுத்தம் பருப்பைக் குறைத்து விட்டு, இந்த வெண்டிக்காய்க் காம்புகளை அதனுடன் சேர்த்து அரையுங்கள் தோசை மென்மையாக இருக்கும். சுவையாக இருக்கும்.

* * *

ஊசியில் நூலைக் கோர்க்கக் கஷ்டமாக இருக்கிறதா? இருந்தால் நூலின் நுனியில் சவர்க்காரம் தடவி விரல்களால் இழுத்துவிட்டுக் கோர்க்க வேண்டும். கோர்த்தால் சுலபமாகக் கோர்க்கமுடியும். இனிமேல் ஊசியும் நூலும் இருக்கும் பெட்டியில் ஒரு சவர்க்கார துண்டையும் போட்டு வையுங்கள்.

* * *

சமையலை ஆரம்பிப்பதற்கு முன். சமையல் பாத்திரங்களின் அடிப் பகுதியில் கொஞ்சம் சவர்க்காரத்தை தடவி வையுங்கள். பாத்திரங்களில் கரி பிடிக்காது.

* * *




குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளீநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்கானும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—08

பெயர்:.............................................

முகவரி:...........................................

.............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# சந்தர்ப்பம் வழங்கப்படுமா...?

தமிழர் தாயகத்தின் மெய்வல்லுனர் வரலாற்றில் மீண்டும் ஒரு திருப்பு முனையாக அமைந்த நிகழ்வொன்று. கடந்த வாரம் தென்கொரிய மண்ணில் நிகழ்ந்தேறியுள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற மேற்குலகும், சீனா, யப்பான், கொரியா போன்ற ஆசிய விளையாட்டுத்துறை முன்னணி நாடுகளும், கானா போன்ற ஆபிரிக்க நாடுகளுமாக 52 நாடுகள் பங்கு பற்றிய இளையோர் சமாதான விளையாட்டு விழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிவகுமார் கமல மோகன், மரிய நாயகம் சஞ்ஜீவ் ஆகியோர் வெள்ளிப்பதக்கங்களைப் பெற்று தமிழர் அடையாளங்களை சர்வதேச அரங்குக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இவர்களோடு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி தயாழினி செல்வராஜாவும் போட்டியாளராகக் கலந்து கொண்டார். இவர்களின் பயிற்றுனர் செல்வராஜா ரமணனும் தென்கொரிய பயணத்தில் இணைந்திருந்தார்.




மரியநாயகம் சஞ்ஜீவ்



சிவகுமார் கமலமோகன்

சர்வதேச சமாதான இளையோர் விளையாட்டு விழாவினை மதங்களுக்கிடையேயான சமாதான சர்வதேச அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இவ் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி திரு ஆர்.தில்லைராஜனும், தமிழீழ விளையாட்டுத் துறையும் இவர்களுக்கான பயண ஒழுங்குகளைச் செய்திருந்தது. 22 வயதுக்குட்பட்ட இளையோருக்கான இப் போட்டிகளில் சிறிலங்காவில் ஒரு தங்கம் உட்பட 22பேர் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர். டெனிஸ், டேபிள் டெனிஸ் போன்ற ஆட்டங்களிலேயே அதிகளவிலானோர் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

உயரம் பாய்தலில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்ட மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சிவகுமார் கமலமோகன் கடந்த அகில இலங்கை இளையோர் தடகளப் போட்டியிலும் வெற்றி பெற்றவர் ஆவர். தற்போது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் உடற் கல்விக்கான ஆசிரிய பயிலுனராக பயிற்சி பெறும் இவர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழையமாணவராவர்.



ஆண்களுக்கான 110 மீட்டர் தடை தாண்டல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தினை பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம் பாஷைஊரைச் சேர்ந்த மரியநாயகம் சஞ்ஜீவ் யாழ்ப்பாணம் புனித சம்பத்தரிசியார் கல்லூரியின் பழைய மாணவராவர். இவரும் கடந்த அகில இலங்கை இளையோர் தடகளப் போட்டியில் வெற்றி பெற்றவராவர்.

இவர்களின் வெற்றி என்பது எமக்கு ஒளிமயமான எதிர்காலம் மெய்வல்லுனர் துறையில் இருப்பதான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து பங்கு பற்றிய மூவரில் இருவர் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பது ஒரு சிறப்பான விடயமாகும் என்கிறார் யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றொகான் இராஜசிங்கம். அவர் மேலும் குறிப்பிடுகையில் சிவகுமார் கமல மோகன் 2.04 மீட்டர் அடைவு மட்டத்தை பெற்றுள்ளார். இந்த அடைவு மட்டத்தைப் பெற்றுக் கொண்ட நிலையிலேயே இலங்கையின் உயரம் பாய்தல் வீரர் மஞ்சுள குமார ஆறுமாதங்கள் அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறப்புப் பயிற்சிகள் மூலம் தற்போது எதன்ஸ் ஒலிம்பிக்குக்குத் தெரிவு செய்யப்படும் நிலையை அடைந்துள்ளார். இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் வழங்கப் படுமாயின் கமலமோகனும் அடுத்த ஒலிம்பிக்குக்கு தகைமை பெறுவார் என எதிர்பார்க்கப் படுகிறது என யாழ் மாவட்ட விளையாட் டுத்துறை அதிகாரி குறிப்பிட்டார்.

இவ்வாறான மெய்வல்லுனர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் வர்த்தகர் திரு. சோமசுந்தரம் மேலும் பலர் முன்வருவார்களாயின் எமது விளையாட்டுத்தரம் மேம்பாடடையும் என மேலும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான சந்தர்ப்பம் வழங்கப்படுமாயின் 50 ஆண்டுகளின் பின் திரு. எதிர்வீரசிங்கத்தின் பின் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் இரண்டாவது தமிழராக கமலமோகன் இடம் பெறுவார் என எதிர் பார்க்கப்படுகிறது. (1986 இல் பர்சிலோன் ஒலிம்பிக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி கௌரி என்பவர் 100 மீட்டர் தடை தாண்டலில் இறுதிச் சுற்றில் கலந்து கொண்டார்.(இவர் பிரித்தானியப் பிரஜையா கவே இப் போட்டியில் கலந்து கொண்டார்).

தென் கொரிய போட்டிகள் தொடர்பாக மூன்று வீரர்களின் பயிற்றுனரான திரு.செல்வராஜா ரமணன் கருத்து தெரிவிக்கையில், எனது வீரர்களுக்கு நம்பிக்கையளிக்கும் ஒரு நிகழ்வாக இந்த போட்டியும் பயண மும் அமைந்திருந்தது. அது மட்டுமல்ல வளர்ச்சியடைந்த நாடுகளின் இளைஞர்களின் அறிவும் முதிர்ச்சியும் எனக்கு பெரும் ஆச்சரியத்தை அளித்தது. அவர்கள் மிகச்சரியாக தீர்மானம் எடுக்கும் இயல்பைப் பெற்றிருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்தப் போட்டியின் ஒழுங்கமைப்பில் இளைஞர்களின் பங்களிப்பே முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதுமட்டுமல்ல, அவர்கள் மிகப் பொறுமையாகவும், பண்பாகவும் மனித உறவுகளைப் பேணுவதையும் அவதானிக்க முடிந்தது. மனித உறவுகளைப் பேணும் கலையில் (Inter Personal Skills) இன்று உலகம் மிகவும். முன்னேறியுள்ளது என்பதையும் உணர முடிந்தது.


அ.அ.அ




# ஒலிம்பிக் போட்டிகள்

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள் இம் முறை அதன் பிறப்பிடமாகக் கருதப்படும் கிரேக்க நாட்டில் நடைபெறவுள்ளது. நவீன ஒலிம்பிக்கின் 28 ஆவது போட்டிகள் ஆகஸ்ட் மாதம் 13-29 வரை இடம் பெறவுள்ளது.

முதலில் ஒலிம்பியன் எனப்படுகின்ற கிரேக்க தெய்வத்தின் பெயரால் விளையாட்டுப் போட்டிகள் கி.மு.776ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வந்தன.



கி.பி 393 ஆம் ஆண்டளவில் இப் போட்டிகள் உரோமப் பேரரசன் தியோடோசியல் என்பவரின் ஆணையின் கீழ் முற்றாகத் தடைசெய்யப்பட்டன.

வரலாற்றுப் பின்னணியில் இவ்வாறான போட்டிகளின் முக்கியத்துவத்தையும் அறிந்த பாரென்பெய்றிடி கௌ பேட்டின் மற்றும் பலரின் கடின உழைப்பின் பயனாக 1896 இல் மீண்டும் இப்போட்டிகள் கிரேக்கத்தில் (கிரீஸ்) நடத்தப்பட்டன இதுவே நவீன ஒலிம்பிக் போட்டியின் ஆரம்பமாகும்.

இந்த பிரெஞ்சு அறிஞரான பாரென் பெய்றிடி கௌபேட்டின் என்பவரே நவீன ஒலிம்பிக்கின் தந்தை எனப்படுகிறார். முதலாவது ஒலிம்பிக் போட்டியில் சுமார் 300 வீரர்கள் 13 நாடுகளிலிருந்து பங்கு பற்றினர். இந்த ஒலிம்பிக் போட்டிகள் லீப் வருடத்தில் நடாத்தப்படுகின்றன. இரண்டாவது ஒலிம்பிக் போட்டி 1900 ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெற்றது. முதன் முதலாக பெண்களும் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் போட்டிகள் கோடைகால ஒலிம்பிக் குளிர்கால ஒலிம்பிக் என வேறுவேறாக நடத்தப் படுகிறது. முதலாவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி 1924 இல் பிரான்சில் நடைபெற்றது. ஒலிம்பிக் போட்டிகளை நெறிப்படுத்துவதற்காக சர்வதேச ஒலிம்பிக் சபை (IOC) அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலிம்பிக் சபையின் தற்போதைய தலைவர் பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த ஜாக்குயிஸ்றோகி ஆவார். ஒலிம்பிக் கீதத்தை இயற்றியவர் கிரேக்க அறிஞர் கொஸ்டிஸ் பலாமாஸ் ஆவார். இதற்கு இசையமைத்தவர் பிரோஸ் சமாராஸ் ஆவார் முதன் முதலில் 1896 இல் முதல் போட்டியின் போது பாடப் பட்டாலும் உத்தியோக பூர்வமாக 1958 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒலிம்பிக் கொடி முதன் முதலில் 1920 இல் உபயோகிக்கப்பட்டது. நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு, நிறங்களில் இணைந்த வளையங்கள் வெண்ணிற பின்னணியில் அமைந்துள்ளன.

இவ் ஐந்து வளையங்களும் உலகின் ஐந்து கண்டங்களையும் வெண்ணிற பின்னணி சமாதானத்தையும் குறிக்கின்றன.

ஒலிம்பிக் உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு 1920 இல் அறிமுகப்படுத்தப்பட்டது ஒலிம்பிக் தீபம் ஏற்றும் நிகழ்வு 1928 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒலிம்பிக் தீபப்பவனி 1936 இல் ஜேர்மனி பேர்லினில் இடம் பெற்ற போட்டியில் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் போட்டிக்கான தீபப்பவனி மார்ச் 25 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது.

ஒலிம்பிக் போட்டிகளின் 6ஆம் 10 ஆம், மற்றும் 11ஆம் போட்டிகள் முறையே முதலாம், இரண்டாம் உலகப் போர்கள் காரணமாக இடம் பெறவில்லை. இலங்கை முதன் முதலில் 1948 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் இணைந்து கொண்டது.

இப் போட்டிகள் எதிர்கொள்ளும் சவால்களில் மோசமானவை போட்டிகள் நடைபெறும் இடங்களில் இடம் பெறும் தாக்குதல்களாகும். 1972 இல் ஜேர்மனின் மூனிச் நகரில் நடைபெற்ற போட்டிகளின் போது 110 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் பலஸ்தீனப் போராளிகளின் தாக்குதலில் பலியாகினர். 1992 இல் ஸ்பெயினின் பர்சிலோனாவில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் சிலர் உயிரிழந்தனர். 1996 இல் அட்லாண்டாவில் நடை பெற்ற போட்டியின் போது குண்டு வெடிப்பில் ஒருவர் பலியாகியதுடன் 110 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இறுதியாக நடைபெற்ற 27 ஆவது கோடை கால ஒலிம்பிக் போட்டியில் சிட்னியில் 10,000 ற்கும் மேற்பட்ட வீரர்கள் 199 நாடுகளில் இருந்து பங்கு பற்றினர்.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகள் அதன் தாயக மண்ணில் இடம் பெறுவது சிறப்பான அம்சமாகும். அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் அதாவது 29 ஆவது போட்டி 2008 இல் ஆசிய நாடான சீனாவின் தலைநகர் பீஜிங் நகரில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தி.இ.பிருதுவி

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மழைநீரில்...**

எஞ்சியபோராளிகள் சண்டை செய்ய, அருள்மொழிசிகிச்சைக்காக அனுப்பப்பட்டான். சண்டை ஓய்ந்து பரந்தன் எதிரி படைத்தளத்தை வெற்றிகொண்டு, வெற்றியின் செய்தியை கொண்டு அவனிடம் செல்லும் போது அவன் அங்கில்லை.

எல்லோருக்கும் அதிர்ச்சி காயமடைந்தவன் மருத்துவ முகாமில் இல்லாது எங்கே சென்றான். தேடுதல்கள் தொடர்ந்தன, பரந்தன் வயல் வெளியில் அவனது உடல் கண்டெடுக்கப்பட்டது.

கப்டன் அருள்மொழியை காயத்துடன் போராளிகள் தூக்கிக் கொண்டுவரும்போது எதிரியின் எறி கணைபட்டு தூக்கிவந்த போராளி களும் வீரச்சாவடைந்துவிட காட்டாறாய் ஓடிய மழைநீ ...அவனது உடலையும் தன்னுடனே எடுத்துச் சென்று அந்த வைரம் நிறைந்த நெஞ்சினை கொண்டு செல்லமுடியா மல் பரந்தன் வயல் வெளியில் விட்டுச் சென்றிருந்தது. பரந்தன் பகல் சண்டைக்கென வெளிக்கிட்ட நாளி லிருந்து மழையிலும் குளிரிலும் தன்னை வாட்டி வாட்டியே இலட்சிய வைரம் நிறைந்த அதே மழைநீரில் எதிரியின் அரணேறி இறுதியில் அதி லேயே தன்னை சங்கமமாக்கிவிட் டான். இவன் போன்ற இலட்சியவாதி களின் சாவினிலேயே தமிழரின் வரலாறு சரித்திரத்தின் சாட்சியாக இருக்கிறது.

# அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்

இலங்கை அரசாங்க அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்


- சிகை அலங்காரம்:10 (Hair styles)-07.08.2004 சனிக்கிழமை. (Latest)
- மணப்பெண் அலங்காரம்:08.08.2004 ஞாயிற்றுக்கிழமை.

Dance Make- Up- நடன ஆசிரியர்களும், மாணவர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

- Facials, பொடுகு தொல்லை, முடி உதிர்தல் Permikng } 9ஆம், 10ஆம் திகதிகள் திங்கள், செவ்வாய்க்கிழமைகள்.
- மங்கு, மரு, கழுத்துக் கறுப்பு, கண்ணின் கீழ் கருவளையம், முகத்தில் பள்ளம், கரும்புள்ளிகள் போன்றவற்றுக்கு சிகிச்சைகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

**திருமதி-நளினி சிவகுமாரன்**
(Nalines Beauty Parlour)
(Herbal & Aroma Therapy)



காலம்: – ஒகஸ்ட் 7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம், திகதிகளில்
காலை 10.00–4.00 PM (புதியநேரம்)
இடம்:– 393/48, கோயில் வீதி நல்லூர்.

உங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிந்து கொள்ளவும்.

திருமதி நளினி சிவகுமாரன்–0777–383846
2595390
2503138

செல்வி மீரா 222–2472
0777–722056

(சி-10123)

# 02ஆம் ஆண்டின் நினைவுகளில்

தோற்றம் 19 – 02 – 1946



மறைவு 08 – 08 – 2002

**பாக்கியநாதன் றெஜினோல்ட்சிறில்**
**கொய்யாத்தோட்டம் - யாழ்**

*காலம் உமை அணைத்து*
*ஈராண்டு சென்றாலும்*
*ஆழமாய் எம் மனங்களிலே*
*ஆழ்ந்து விட்டீர் ஐயா.*

இளந்தென்றல் பணியாளர்கள்,
வன்னி கிழக்கு.

(சி-9171)

# 1 ஆம் ஆண்டு நினைவுநாள்



11-08-2004

**தோற்றம்** 23-06-1956
**மறைவு** 25-07-2003

பிறந்த இடம்
அச்சுவேலி - பத்தமேனி

மறைந்த இடம்
2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

அமரர்
## வேலுப்பிள்ளை நவரத்தினம்

**மனைவி**

வாழ்வின் பாதியிலே வழிதவறிவிட்டீர்கள்
ஆளும் அரசின்றி அழுதழுது வாழ்கின்றேன்
தாழ்வை உயர்வாக்கி வாழவழி தந்தவரே
வீழும் வரை யான் விளக்கேற்றி வழிபடுவேன்.

**பிள்ளைகள்**

தமயந்தி, சஜீவன், சஜிந்தன், சஜீகன்,
பாசமுடைய அப்பாவே ஆசை வற்றாப் பிதாவே
தேசமோ எங்களுக்கு வாசனை இழந்து நிற்க
வீசிய தென்றல் காற்று விண்ணேகி விட்டதால்
பூசித்து வணங்குகிறோம் ஆசித்து அருள் வேண்டி.

அமரரின் முதலாம் ஆண்டு நினைவு 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் 11.08.2004 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அக்கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் வேண்டுகின்றோம்.

நன்றி

மனைவி, பிள்ளைகள்,
2 ஆம் வட்டாரம்,
மு/புதுக்குடியிருப்பு.

(4870)

## சிந்திக்கவைத்த சந்திப்பு

# ஒரு பேருந்தும் சில பதிவுகளும்

பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. நிறையச் சனங்கள் கூடுதலாகப் பெண்கள் தான் கம்பிகளில் தூங்கிக் கொண்டுநின்றார்கள். ஒரு தாய் மட்டும் கொஞ்சம்'சோட்'சீற்றைப் பிடித்தபடி நின்றாள். தாய்க்குப் பக்கத்தில், ஒரு 'கர்ப்பிணி'ப் பெண்ணும் நின்றாள். பத்து வயதிருக்கும்ஒருசிறுமியும் நின்றாள். சிறுமி தாயின் மகளாய் இருக்க வேணும். தாயை ஆயிரம் கேள்விகள் கேட்டுக்கொண்டு நின்றாள்.

எல்லோரும் சிறுமியையே பார்த்தபடி நின்றார்கள். தாய் மனம் சுழிக்காது எல்லாக்கேள்விகளுக்கும் விடையளித்தபடியிருந்தாள். எதைக்கண்டாலும் கேள்விகள் கேட்கும் பிள்ளைகள் தான் நல்ல அறிவாளர்களாய் வருவார்களாம்.

சிறுமிக்குப் பக்கத்துச்சீற்றில் தலை நரை விழுந்த ஒரு ஐயா இருந்தார். நஷனல் சேட். 'கோல்ட்' கலர் 'வோச்'மைனர் 'செயின்' அவர் அந்த மகளையே ப்ார்த்தபடியிருந்தார். 'ஐயா' என்று சொல்லிவிட்டேன் வயது ஐம்பது தான் இருக்கும் 'சேர்' என்றால் கோபிக்கமாட்டார்.

ஐயாவுக்கு முன் சீற்றில் இரண்டு யுவதிகள் இருந்தார்கள் வயது இருபதுக்குள் வரும். அவர்களின் 'சீற்'றுக்களுக்கு மேல் ஜன்னலோரப்பக்கங்களில் 'கர்ப்பிணித்தாய்மாருக்கு'' ''மதகுருமாருக்கு'' ''ஊனமுற்றோருக்கு'' என சிவத்த நிறங்களில் எழுதப்பட்டிருந்தன. அதை மகள் வாசித்தாள்.

''ஏன் மம்மி இப்படி எழுதியிருக்கு...?''

"அவர்களுக்குத்தான் இந்த சீற்றுக்கள்- அவர்களைக்கண்டால் இருப்பவர்கள் எழும்பி இடம் கொடுக்கவேணும்" மகள் உடனே அந்த யுவதிகளைப் பார்த்துக் கேட்டாள்.

''மம்மி.... இவர்களும் ''கர்ப்பிணி''களோ..?''

தாய்க்குப்பக்கத்தில் நின்ற அந்தக்கர்ப்பிணித்தாய்தான் முதலில் பெரிய சத்தமாய்ச் சிரித்தாள். "கர்ப்பிணிகள் அளவுக்கதிகமாகச் சிரித்தால் வயிற்றில் நோகுமாம். அந்த இரண்டு யுவதிகளும் தலைகளை முன் 'சீற்றில் குற்றிவிட்டார்கள். வெட்கப்படவேண்டியவர்கள். லேஞ்சிகளால் வாய்களைப் பொத்திச்சிரிக்கின்றார்கள்...

□ □ □

இது பெரிய பஸ். 'ட்றைவர்' பாட்டை மட்டும் குறைச்சு விடுகிறார். ''இடுப்பிலை கொஞ்சம் இடம்கொடு எனக்கு சடுகுடு ஆட்டம் ஆடிக்காட்டுறேன்.'' இது நல்ல பாட்டாம். ஒரு 'பொடிச்சி' தான் சொல்லுது.

□ □ □

இது புதுக்குடியிருப்புக்குப் போகிறது.. நிறையச் சனங்கள். பெண்கள் தான் பாவம். ஆண்கள் வேளைக்கே "சீற்றுக்களைப் பிடித்துவிட்டார்கள். சிலர் எழும்புவார்கள் பெண்களின் பரிதாபம் பார்த்து.



பஸ் பரந்தனுக்கு வந்ததும், இருந்தவர்களில் சிலர் நின்ற பெண்களுக்குச் சீற்றுக்களைக் கொடுத்தார்கள். ஒரு 'தாங்ஸ்' எவரும் சொல்லவில்லை. அட உதவிக்குத்தானே 'தாங்ஸ்' இல்லை நன்றி.

ஒரு அம்மா மட்டும் பாவம் ''சொறி'' ''லேடிஸ்'' 'சீற்' கிடைக்கவில்லை. ஒரு நாற்பது வயது மனிதன் பேசாமல் பக்கத்தில் இருக்கின்றான். லேடிஸ்சுக்குப் பக்கத்தில் தான். 'சீற்' கொடுக்கவேணும் என்பதற்காக முகத்தை ஜன்னல் பக்கமாக திருப்பி வைத்திருக்கின்றான்.

அந்த மனிதன் சும்மா முகத்தை திருப்பி வைத்திருக்கவில்லை. 'பிஸ்கட்' சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சிறிய,பதினைந்து ரூபா மலிபன் "பக்கற்" அதை இருபது ரூபாவுக்குத்தான் முகமாலையில் வாங்கினான். அங்கு ஒன்றரை லீற்றர் சோடா நூற்றிஇருபத்தைந்துரூபா ''பிறிஜ்''சில் வைத்தாலும் பரவாயில்லை. 'ரீ' என்னவிலை தெரியுமே...

அந்த ''லேடிஸ்''சுக்கு முகம் வியர்த்துக் கொட்டியது. லேஞ்சியால் முகத்தைத் துடைத்தாள். குங்குமத்துக்கு லேஞ்சிபோகவில்லை. மற்றைய பெண்களுக்கு 'சீற்'றுக்களைக் கொடுத்த ஆண்கள் அந்த லேடிஸ் மீது பரிதாபப்பட்டார்கள் அந்த நாற்பதுவயது மனிதன் மேல் கோபப் பட்டார்கள்.

'அண்ணை.... இந்த அக்காவுக்கு சீற்றைக் குடுக்கிறியளே..? ஒரு "ப்ளீஸ்" என்ன மனிதர்?

அந்த மனிதனுக்கு கோபம் வந்து விட்டது. பரிந்து பேசுபவர்களை அந்த மனிதனுக்குப் பிடிக்காது. பரிந்து பேசுதல் என்பது அவருடன் 'நட்பு'வைப்பதற்காகவுமிருக்கலாம். அல்லது சலுகைகளுக்காகவும் இருக்கலாம். அப்படி ஒரு முன்னேற்பாடுகளுக்குத்தான் இப்படி வார்த்தைகள் என்பதனை நினைத்துக் கொண்டுஅந்த மனிதன் பேசாமல் இருந்தான்.

"சீற் கொடுக்கும்படி மீண்டும் சொன்னார்கள் அந்த மனிதனைப்பார்த்து, அந்த 'லேடிஸ்' தனக்காகப் பரிதாபப்பட்ட அவர்களைப் பார்த்து சொண்டுக்குள் சிரித்தாள். சிரிப்புக்களிலும் ''கள்ளச்சிரிப்பு'' இருக்குதாம்.

அந்த மனிதனுக்கு கோபம் முத்தியது. தின்ற "பிஸ்கற்'றை ஜன்னலால் எறிந்து விட்டு எழுந்தான். எல்லோரும் நினைத்தபடி அந்த மனிதனின் வார்த்தைகளில் 'சீற்றம்' எதுவுமில்லை.

"தம்பிகள் நல்ல கேள்விகளைத்தான் எனக்குத் தந்திருக்கிறீர்கள்... ஆண் பெண் என்று ஏன் பிரித்துப் பார்க்கிறீர்கள்?'' முன்பு தான் பஸ்களின் வலது பக்கங்களில் மஞ்சள் எழுத்துக்களில் "மகளிர் மாத்திரம்'' என்று எழுதியி ருந்தார்கள்.

தம்பிகள்... இப்ப ஆணும் பெண்ணும் சமம். ஆண்கள் செய்கிற வேலைகளை பெண்களும் தான் செய்கிறார்கள்.

பெண் 'ஜீன்ஸ்' போடுகிறாள்... வாகனம் ஓடுகிறாள்.. நெஞ்சில் வாகனங்கள் ஏற்றுகிறாள். துவக்குத் தூக்குகிறாள்... கடலில் நீந்துகிறாள்.. சுழி ஓடுகிறாள்.. படகு ஓட்டுகிறாள்...

இன்னும் விமானியாய் விண்வெளி ஆய்வுதியாய்...

இப்படிப்பலமான பெண் குலங்களை நாங்களும் தாங்களும் "பெண்கள் பலவீனமானவர்கள்" என்று நினைப்பதனால் தான் இப்பவும் பெண்கள் "பூ" வாகவே இருக்கின்றார்கள். "பெண்'' என்று பஸ்களுக்குள் 'சீற்' கொடுப்பதும் அவளை நாங்கள் பலவீனப்படுத்தும் செயல்கள் தான் "தம்பிகள்'' சொல்லி விட்டுஇருந்தான்.அந்த மனிதனை எல்லோரும் பார்த்தார்கள்.

பிரஞ்ஞன்

---

# சமகாலத்தில் துரிதமடையுமா?

வன்னி விவசாயிகளை பொறுத்தளவில் விவசாய ஊக்குவிப்புக்கென இயங்கிய விவசாய ஆராய்ச்சி நிலையம், சேவைக்கால பயிற்சி நிலையம், நெல் ஆராய்ச்சி நிலையம், விவசாய விரிவாக்க விதைகள் செயலகம் என்பனவற்றின் செயற்பாடுகள் தற்போது குறிப்பிடும் அளவுக்கு இல்லை என்பதே உண்மை.

இதில் குறிப்பாக விவசாய ஆராய்ச்சி நிலையம் தற்போது இயங்குகின்ற போதிலும் ஆரம்ப கால செயற்பாடுகள் எதுவும் தற்போது நடைபெறுவதாக தெரியவில்லை. இதற்கான உதவி ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் கூட (DDR) இல்லாத நிலையில் இந்த நிலையம் இயங்கி வருகிறது. தற்போதைய போரற்ற சூழலில் இதனுடைய செயற்பாடுகளை சற்று விரிவாக்கம் செய்யலாம் என்றே தெரிகிறது. அவ்வாறாயின் இந்த விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் மந்த நிலைக்குக் காரணம் தான் என்ன என்பதை ஆராய்ச்சி செய்தல் அவசியமாகின்றது.

குறிப்பாக சேவைக்கால பயிற்சி நிலையம் (ISTI) இதனுடைய செயற்பாடுகளும் 1992 க்கு பின்பு இல்லை. பெரும்பாலான விவசாயிகளுக்கும் விவசாய ஊக்குவிப்பாளர்களுக்கும் அவ்வப்போது பயிற்சிகளும் விளக்கங்களும் இந்த ISTI ஊடாக வழங்கப்பட்டு வந்தது. இதனுடைய செயற்பாடுகள் இல்லாது போனாலும் கூட இது போன்ற செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கான நிலையம் ஒன்று வன்னி மண்ணில் நிறுவப்படுதல் அவசியமாகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் ஆழமாக செயலிலிறங்க வேண்டும். விவசாய விரிவாக்கப்பணிப்பாளர் (விதைகள்)செயலகம் பரந்தனில் இயங்கியது.நெல் உட்பட விதைகள் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டன. அதனுடைய செயற்பாடுகளும் தற்போது இல்லை. எனவே விவசாய ஊக்குவிப்பு செயற்பாடுகளின் முன்னெடுப்புக்களுக்கு கடந்த கால விவசாய அசைவுகளை மீள்பார்வை செய்வது மிக அவசியம். சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் பின்னான இடப் பெயர்வு காலத்திலும் கூட அக்கரா யன் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் புதிய நெல்லினங்களை அறிமுகப்படுத தியிருந்தது. இடப்பெயர்வு காலத்திலும் கூட விவசாய முயற்சிகளின் ஒரு குறிப்பிடக்கூடிய அம்சமாக இது இருந்தது. இவ்வாறாக அறிமுகப்படுத்தப்பட்ட நெல்லினங்களும் விதைகளும் தொடர்ந்தும் விவசாயிகளின் பாவனைகளுக்கு ஊக்குவிக்கப்படவேண்டும். இது மட்டுமல்லாது இவ்வாறான பொருத்தமான விவசாய ஆராய்ச்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கென ஆராய்ச்சி அமைப்பொன்று வன்னியில் நிறுவுவது மிக அவசியமானதென்பது உணரப்படுகிறது.

யாழ்.பல்கலைக் கழகத்தின் விவசாயபீடம் வன்னியில் இயங்கிய போது பல்வேறு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டன. தாயகத்திற்கு பொருத்தமான விவசாய துண்டங்கள் உருவாக்கப்பட்டுஅது விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.போரியல் காரணங்களால் இதன் செயற்பாடுகள் வன்னியில் செயலற்றுப்போனது தவிர்க்க முடியாத காரணம் என கருதப்பட்டாலும் மீண்டும் இந்த விவசாயபீடம் வன்னியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. எனவே இதுவும் துரிதப்படுத்தப்படல் அவசியம். பெருமளவான விவசாயத்துறை மாணவர்களையும் உருவாக்குவதோடு விவசாயிகளுக்கு பொருத்தமான திட்டங்களையும் இந்த விவசாய பீடத்தின் மூலம் ஏற்படுத்தமுடியும். இந்த விவசாயபீடம் வன்னியில் இயங்கிய போது விலங்கு வேளாண் துறையும் கணிசமாக முன்னெடுக்கப்பட்டது. நல்லின வளர்ப்பு விலங்கினங்கள் வளர்க்கப்பட்டன 'கீர'எனப் படுகின்ற மாடு இனம் எமது பிரதேசத்திற்கு பொருத்தமானது என இனங் காணப்பட்டு அது தென்னிலங்கை பண்ணைகளில் இருந்து கொண்டு வரப்பட்டு இதன் உற்பத்தி மேம்படுத்தப்பட்டது. ஜமுனா பாரி உள்ளிட்ட ஆடு இனங்கள் மேம்படுத்தப்பட்டன. எனவே போரியற் காலத்தில் இதன் பின்னடைவுகள் ஏற்பட்டிருப்பினும் சமகாலத்தில் இவைதுரிதமாக ஊக்குவிக்கப்படவேண்டும்.



(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இறுதி நேரத்தில்....**

வெடிமருந்து கான்கள் புதைக்கப்பட்டிருக்கும் தகவல்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் புலிகளின் புலனாய்வுப் பிரிவிலிருந்த சந்திரன் என்பவருடன் ப்கிர்ந்து கொண்டார். அத்த கவல்களை அடுத்து புதைக்கப்பட்டிருந்த வெடிமருந்துக் கான்கள் மீட்டெடுக்கப்பட்டதனால் ஆபத்தை உண்டு பண்ண இருந்த, இக்கட்டான நிலையிலிருந்த, தமிழர்களை காப்பாற்றியது.

ஒவ்வொருவரது வாழ்க்கையும் சுயநல தளத்தில் இருந்தே தொடர்கிறது. இச் சுய நலத்திலே முதன்மைப் படுத்தும் மனப்போக்குள்ள தமிழர்களை சிங்களப் புலனாய்வாளர்கள் தம் புலனாய்வு வேலைகளுக்கு பயன்படுத்தி வெற்றி கள் சிலதும் பெற்றுள் ளார்கள். ஆனால் இம்முறை மோகன் இறுதி நேரத்தில் விழித்துக் கொண்டதனால் இறுதி நேரத்தில் தோல்வியைச் சந்தித்தார்கள் சிங்களப் புலனாய்வாளர்கள். மோகனின் தமிழின உணர்வு ஒன்றே அவரை ஒரு தமிழனாக்கி சிங்களத்தின் நாச வேலையை தோற்கடித்தது.

இதுவரையிலும் அலசிப் பார்க்கப்பட்ட நிகழ்வுகளில் பல்வேறு விடயங்ளைச் சொல்லி நின்றாலும் தமிழர்கள் விழிப்புணர்வோடும் தமிழினஉணர்வோடும் புலிகளின் முறியடிப்புபுலனாய்வுபிரிவினருக்கு உதவும் கடமையில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். அப்போது தான் சிங்களப்புலனாய்வுப் பிரிவினரின் இரகசிய அச்சுறுத்தல்களையோ நாச வேலைகளையோ முறியடிக்கத்தக்க ஆற்றல்களை புலிகளின்புலனாய்வு அமைப்புப் பெறும் என்பதே முதன்மைப்படுத்தப்படுகிற செய்தியாகும்.

இச்செய்தியைப் பெறும் ஒவ்வொரு தமிழரும், தம் ஆழ் மனதில் பதிவு செய்து, தம்மைச்சுற்றி இருக்கும் உறவுவலையமைபின் மீதும், தாம் நடமாடித்திரியும் பகுதிகள் மீதும் ஒரு விழிப்புணர்வை வைத்திருக்கும் போதே சிங்களப்புலனாய்வாளர்களின் மறைமுகப் போரைத் தோற்கடிக்க முடியும். அத்தகைய கடமையுணர்வு கொண்ட தமிழர்களின் புலனாய்வுப்பங்களிபபானது, தமிழீழ தேசத்தை எந்தவொரு சக்தியாலும் தோற்கடிக்கப்படமுடியாமல் செய்யும்.


STUDY IN UK

For better overseas education prospects contact:

YARL CONSULTANCY (UK) LTD.

Visit our Web site for further details
www.Yarlconsultancy.com

We are the authorized representative for the under - mentioned university;

UEL - University of East London
Web:http://www.ul.ac.uk

Free Counsclins & Visa Guidanecc

Admission Open for various Post Graduate / Under Graduate Programmes:

1. Accounting & Finance
2. Architecture
3. Art & Designing
4. Business Adminitration
5. Civil Engineering
6. Computer Science
7. Economics
8. Electrical & Electronic Engineering
9. English
10. Hotel Management
11. Information Technology
12. Journalism
13. Law
14. Media & Communication
15. Psychology
16. Sports Science

YARL CONSULTANCY (UK) LTD.

UK Address:
YARL Consultancy (UK) ltd.
104, Grange Road,
Ilford, Essex
Ig1 IEX,UK.

Y CL

Local Representative Office:
YARL CONSULTANCY (UK) LTD.
302, Park Road, Colombo -05
Sri Lanka. T.P: 2580622, 2500348.



தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன்

அவர்களின் 50ஆவது அகவையை முன்னிட்டு

ஈழநாடு - தாய்நாடு பத்திரிகைகள் இணைந்து நடாத்தும்

கவிதைப் போட்டியும் கவிதைநூல் தொகுப்பும்

ஈழநாடு - தாய்நாடு

ஈழத் தமிழினத்தின் தன்னிகரில்லாத் தலைவரும் தமிழீழ நாட்டின் தேசியத் தலைவருமான மேதகு வே. பிரபாகரன் அவர்களது 50 ஆவது அகவை (26-11-2004 ) நாளையொட்டி ஈழநாடு,தாய்நாடு பத்திரிகைகள் இணைந்து மாபெரும் கவிதைப் போட்டியொன்றை நடாத்தி, வெற்றிபெறும் முதல் 10 கவிஞர்களுக்குப் பரிசும் பாராட்டுப் பத்திரமும், அடுத்த 25 கவிஞர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்களும் வழங்குவதோடு சுமார் 50 கவிஞர்களது கவிதைகளைத் தொகுத்து முழுவர்ண நூலாகவும் வெளியிடவுள்ளன.

கவிதைகள் பின்வரும் நிபந்தனைகளுக்குள் அடங்க வேண்டும்:

கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக் கவிதைகளாகவோ இருக்க வேண்டும்.
கவிதை 40 வரிகளுக்குள் இருக்க வேண்டும்.
ஒருவர் ஒரு கவிதை மட்டுமே எழுத முடியும்.
கவிஞர்கள் புனைபெயரில் எழுதுவதானால் எமது அலுவலகத் தேவைக்காக உண்மைப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிட வேண்டும். தகவல்கள் அந்தரங்கமாகப் பேணப்படும்.
50 கவிஞர்களின் கவிதைகள் நூல் வடிவம் பெறுவதால் கவிதை எழுதுவோர் தம்மைப் பற்றிய சிறுகுறிப்பு மற்றும் தமது புகைப்படம் ஒன்றையும் விரும்பினால் அனுப்பி வைக்கலாம்.

போட்டி முடிவுத் திகதி - செப்டெம்பர் 30,2004



கவிதைகள் அனுப்ப வேண்டிய முகவரி:
EEZHANADU (CANADA) - P.O BOX 878 - STATION “Q”
TORONTO, ON M4T 2N7 CANADA.

(சி-4862)




காலவாய் நோய் எமது பிரதேசத்து கால்நடைகளைப் பாதிக்கும் நோயாக விஸ்வரூபம் எடுத்துள்ளது. பிளவு பட்ட குளம்புகள் உடைய கால் நடைகளை இந்த நோய் அதிகம் பாதிப்பதாக கால்நடை வைத்தியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

எமது பிரதேசத்தில் அநேகமாக இக் காலப் பகுதியில் இந்த நோய் பெருமளவில் காணப் படுவது வழக்கமாக உள்ளது.

# எங்கள் பொருண்மிய வளம்

## சிதம்பரதிரு

நோயின் உச்ச நிலை காரணமாகவே எமது பகுதிகளில் கால்நடைகளின் இறைச்சிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கால் நடைகள் நோயினால் பாதிக்கப்படுவது ஒருவகை பிரச்சினை எனில் அதன் மறுபக்க விளைவுகள் பற்றி நாங்கள் யோசிக்க வேண்டும்.

இந்த நோயினால் கால்நடைகள் அதிகம் இறக்க வாய்ப்பில்லை என்று சொல்லப்பட்டாலும் கால்நடைகளில் உழைக்கும் தன்மையும் உற்பத்தித் திறனும் அதிகம் பாதிக்கப்படுகின்றது.

எங்கள் பிரதேசங்களில் கால் நடை என்பது ஒரு மாபெரும் வளமாகத் கொள்ளப்படுகின்றது. விவசாயம், கடற்றொழில் போன்றவற்றுக்கு நிகராக கால் நடைவளமும் கணிக்கப்படுகின்றது.

என்றாலும் அந்த வளத்தின் பெறுமதியை நாங்கள் யாரும் பெரிதாக மதிப்பதில்லை. கால்வாய் நோய் போன்ற பெரும் பாதிப்புக்களை உண்டாக்க பெரிய நோய்கள் வருமுன்னரே தடுப்பதற்கான நடவடிக்கையோ வந்த பின்னர் உரிய நோய் தடுப்பு முயற்சிகளையோ உகந்த முறையில் மேற்கொள்வதில்லை.

எனவே உங்கள் கால் நடைகளை கால்வாய் நோய் போன்ற நோய்களிலிருந்து பாதுகாத்து உங்கள் கால் நடைகளில் இருந்து உச்ச பயன் பெற நடவடிக்கையை தயங்காது எடுங்கள்.

(சீ-9609)

# கால்வாய் நோய்

குதிரையைப் போல் ஒற்றைக் குளம்பாக இல்லாமல் இரட்டைக் குளம்புகள் (பிளவுபட்ட குளம்புகள்) உள்ள கால் நடைகளை இந்நோய் பாதிக்கின்றது. இது வைரஸ் நோய்க்கும் காரணமாகும். வெப்ப மண்டல நாடுகளில் மாடுகளை அதிகம் பாதிக்கின்றது. இந் நோயுற்ற மாடுகள் அதிகம் இறப்பதில்லை. ஆனால் உழைக்கும் ஆற்றலும் உற்பத்திதிறனும் குறைந்து விடுகிறது. இந் நோய் கால் நோய், வாய் நோய், மற்றும் கானை என்றும் அழைக்கப்படுகின்றது. இளங்கன்றுகளையும் உற்பத்தித் திறன் மிக்க உயர்ரக மாடுகளையும் இந்நோய் அதிகம் பாதிக்கின்றது.

**நோய் பரவும் விதம்:-**

நோயுற்ற மாட்டுடன் ஒட்டுதல் மூலமும், குடிநீர், தீவனம், உரோமம், தோல் உடைகள் மூலமும் இந் நோய்க் கிருமிகள் பரவுகின்றன. ஒரு தேசத்தில் இருந்து மற்றொரு தேசத்துக்குப் பறவைகள் மூலமாகவும் பரவ வாய்ப்புண்டு. பொதுவாக மாடுகளை உணவுப்பாதை வழியாகவும் சுவாச உறுப்புகள் வழியாகவும் இந்நோய் தொற்றுகின்றது.

**நோயின் அறிகுறிகள்:-**

தொடக்கத்தில் கடுமையான காய்ச்சல் கண்டு மாடுகள் சோர்ந்து தீவனம் உண்ணாமல் இருக்கும். வாயிலுள்ள சீதமென் தோல் வீக்கமுற்று காணப்படும். பிறகு ஈறுகள் மேல்தாடையிலும், நாக்கிலும், உதடுகளின் உட்புறத்திலும் கொப்புளங்கள் தோன்ற ஆரம்பிக்கும் பின்பு கொப்பளங்கள் உடைந்து விரணங்கள் சிவந்து காணப்படும். வாயிலிருந்து உமிழ் நீர் வழிந்து கொண்டிருக்கும். சில சமயங்களில் கொப்புளங்கள் நாசித் துவாரங்களுக்கு இடைப்பட்ட பகுதியிலும் கொம்புகளின் அடிப்பாகத்திலும் கூடத் தோன்றுகின்றன. காலில் குளம்புகளைச் சுற்றி வீக்கம் அதிகரித்து மாடுகள் நொண்டும். குளம்புகளுக்கு இடையேயும் குளம்பிற்கு மேலுள்ள தோலிலும் கொப்புளங்கள் தோன்றுகின்றன. வீக்கம் குறைவதற்கு இரண்டு வாரங்கள் ஆகும். சில நேரங்களில் பல கொப்புளங்கள் ஒன்று சேர்ந்து பெரிய புண்ணாகி குளம்புகளன்று விடுவதுண்டு. கறவை மாடுகளின் மடியிலும் காம்புகளிலும் கொப்புளங்கள் தோன்றுவதால் பால் உற்பத்தி குறைவதுடன் மடி வீக்கமும் ஏற்படலாம். சில சமயங்களில் வீரிய வகைக் கிருமிகள் தாக்கும் போது இதயத்தசையில் அலர்ச்சி ஏற்பட்டு இதய இயக்கம் நின்று விடுவதால் மாடுகள் இறக்க நேரிடும். சில சமயங்களில் மிகுந்த கழிச்சலும் வலிப்பும் கூட ஏற்படுவதுண்டு வாயில் மட்டுமன்றி தொண்டை, உணவுக் குழல், வயிறு, குடல், மூச்சுக்குழல் ஆகிய வற்றிலும் கொப்புளங்கள் காணப்படும்.

**சிகிச்சை:-**

கால் நடை வைத்தியர் அலுவலகத்தை அணுகி உரிய மருத்துவம் செய்தும் கிருமி நாசினி மூலம் புண்களைக் கழுவி சுத்தம் செய்து மருத்துவர் கொடுக்கும் மருந்துகளைப் பூசுவதன் மூலம் நோயின் பாதிப்பு நாட்கள் குறைந்து விரைந்து நோய்த் தீர்வு பெறலாம். வாயை 2%பொட்டாசியம் பெர்மாங்கனேட் அல்லது படிகாரம் கலந்த தண்ணீரில் கழுவலாம் 1% மயில் துத்தக் கரைசலா அல்லது "பினைல்" கலந்த தண்ணீரிலோ குளம்புகளை நனைக்கலாம் மயில் துத்தம் தார் கலந்த கலவையை குளம்புப் புண்களுக்கும் போடலாம்.

**தடுப்பு முறை:-**

ஆண்டு தோறும் தடுப்பூசி போடுவதன் மூலம் நோயைத் தடுக்கலாம். மேலும் நோயுற்ற மாடுகளைத் தனித்து வைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மாடுகளின் நடமாட்டத்தையும் இடம் பெயர்தலையும் தவிர்க்க வேண்டும். ஈரமற்ற சுத்தமான இடத்தில் மாட்டைக் கட்ட வேண்டும். நோய் கண்ட மாட்டிற்கு அருகேயுள்ள இடங்களை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். இளகிய தீவனங்களைக் கொடுக்க வேண்டும். இறந்த மாடுகளை எரித்து விட வேண்டும். அல்லது ஆழக்குழி தோண்டி சுண்ணாம்பு போட்டுப் புதைக்க வேண்டும்.

கறவை மாடுகளுக்கு கால் வாய் நோய் வந்தால் கன்றுகளைத் தனியே பிரித்து விட வேண்டும். கன்றுகளை நோயுற்ற மாடுகளிடம் பால் குடிக்கச் செய்தால் பால் வழியாக நச்சுயிரிகள் கன்றுகளைக் கொன்று விடும். எனவே கன்றுகளுக்கு காய்ச்சிய பாலையோ, அல்லது நலமாக வேறு மாட்டின் பாலையோ நோய் தீரும்வரை கொடுக்க வேண்டும்.

**நோய் மனிதர்களுக்குபரவும் விதம்.**

01. கால்நடைகள் அல்லது பறவைகளுடன் நேரடித் தொடர்பு கொள்வதால்.
02. நோயுற்ற அல்லது நோய்க்கிருமிகளை உடலில் தங்கவைத்துள்ள விலங்குகள் கடிப்பதால், பறவைகள் கொத்துவதன் மூலம், ஈ, கொசு, மற்றும் உண்ணிகள் கடிப்பதால்.
03. நோயுற்ற கால்நடைகளின் இறைச்சி, பால், முட்டை முதலியவற்றை உண்பதால்.
04. அசுத்தத்தின் மூலம், காற்றின் மூலமும் இந்நோய் பரவுகிறது.

**க.சூரியகுமாரன்**

(15 ஆம் பக்கத்தொடர்ச்சி)

என்று கேட்டு வாங்கிக் குடித்துவிட்டு, "பெரியண்ணா நாளைக்கு எனக்கு பிறந்த நாள் சட்டை வாங்கி வர மறந்து விடாதே" என்று கூறியபடி படுக்கையை விட்டு எழுந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு வழிந்த கடைவாயுடன் வந்த தங்கை- என் மூன்றாவது மருமகள் தேவகு மாரியைப் பார்த்து அவள் கன்னத்தைக் கிள்ளி, தேவாக்குட்டி நான் மறப்பேனா? நீ சொல்ல முன்னரே உனக்கென்று ஒரு துணி எடுத்து மேரி ரீச்சர் வீட்டில் தைக்க கொடுத்து விட்டேன். இன்றைக்கு வரும் போது ரீச்சர் வீட்டில் காவல் நின்றாவது அதை தைப்பித்து எடுத்துக்கொண்டு தான் வருவேன் என்று கூறிக்கொண்டு எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்றவனை இப்போது இப்படித் துண்டு துண்டாகப் பொறுக்கித் தைத்து பெட்டியில் அடைத்துக் கொண்டு வந்து கிடத்தியிருக்கிறார்கள். விறகு வெட்டும் போது கண்டல் காட்டுக்குள் என்னவோ பொறி வெடிப் பகுதிக்குள் நுழைந்துவிட்டானாம் பக்கத்து வீட்டு வேலாயுதம் தப்பியது அருந்தப்பாம்.

மரண விதைகள்... எங்கே திரும்பினாலும் மரணப் பொறிகள்... முன்னர் வானத்தில் இருந்து விதைத்தார்கள் இப்பொழுது பூமியிலேயே எமது மண் முழுவதும் புதைத்திருக்கிறார்கள். இதனால் எத்தனை அநாதைகள், எத்தனை அபலைகள் எத்தனை விதவைகள் எத்தனை ஊனங்கள் விதைப்பவர் களுக்கு இவையெல்லாம் புரியுமா? புரிந்தாலும் அவர்கள் மனச்சாட்சி இதற்கெல்லாம் வருத்தப்படப் போகிறதா?

சரி... நேரமாச்சு... எடுக்கப் போறம் வீட்டிலை இருந்து வாய்க்கரிசி போடுறவை எல்லாம் வந்து வாய்க்கரிசி போடுங்கோ!

ஐயோ...என்ரை ராசா...! இதுவரை நேரமும் ஊர்வம்பு பேசிக் கொண்டிருந்த பெண்களுக்கெல்லாம் திடீரென்று எங்கிருந்தோ ஒட்டுமொத்தமாக ஒரே தடவையில் சோகம் பொத்துக்கொண்டு வந்து ஒரே குரலில் கோரசாக ஒப்பாரி ஒலிக்கிறது. அந்த ஒப்பாரிக்கூடாகவும் அரை மயக்கத்தில் ஈனஸ்தாயியில் ராசா...ராசா... என்று முனகும் ராஜேஸ்வரியின் குரலும் கேட்கிறது. நடுக்கூடத்தில் முகட்டு வளையில் தொங்கும் ஏணைத்துணிக்குள் கிடந்து பாலுக்காக வீரிட்டு கத்தும் என் கடைக்குட்டி மருமகள் இந்திரகுமாரியின் அலறலும் காதைப் பிளக்கிறது "பெரியண்ணாவைக் கொண்டு போகாதேங்கோ... பெரியண்ணாவைக்கொண்டு போகாதேங்கோ..." என்று அலறும் என் மூன்றாவது மருமகள் தேவகுமாரியின் அலறல் என்நெஞ்சையே பிளக்கிறது.

என் ராஜகுமாரன் போகிறான். ராஜகுமாரா... மாமா இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கோ இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கோ என்று பார்த்து பார்த்து பக்குவமாக எனக்கு சோறு ஊட்டி விட்ட உனக்கு ஒரு பிடி வாய்க்கரிசி போடக்கூட என்னால் எழுந்து வரமுடியவில்லையே... என்னைத் தூக்கிக்கொண்டு போய் வாய்க்கரிசி பேரடப்பண்ண வேண்டும் என்ற எண்ணம் கூட இங்கு யாருக்கும் தோன்றவில்லையே. ஒரேயொரு முறை எழுந்து வந்து உனக்கு வாய்க்கரிசி போட்டு அனுப்புவதற்காகவாவது அந்தக் கடவுள் எனக்குக் ஒரு தடவை எழுந்து நடக்கும் வரத்தை தரக்கூடாதா?

என் ராஜகுமாரன் போய்விட்டான் முடிந்து விட்டது... எல்லாமே முடிந்து விட்டது.

"மாமா...மாமா எழும்புங்கோ இரண்டு நாளாக நீங்கள் ஒன்றும் சாப்பிடவில்லை. சாப்பாடு கொண்டு வாறன் சாப்பிடுங்கோ"

என்னடா இது? ராஜகுமாரன் கூப்பிடுகிறான். என்ன ராஜகுமாரா நீ திரும்பி வந்துவிட்டாயா? போகவே இல்லையா?

பசி மயக்கத்திலும் ராஜகுமாரனின் நினைப்பிலும் கிடந்து முணுமுணுப்பதை நிறுத்தி திடுக்கிட்டு கண்விழிக்கிறேன். யார் இது? எதிரே கட்டிலுக்கருகே ஆதரவுடன் குனிந்து என்னைத் தட்டி எழுப்பிக் கொண்டிருப்பது... ராஜகுமாரனா?

இல்லை. நந்தகுமாரன் என் இரண்டாவது மருமகன் நந்தகுமாரன். இதுவரை காலமும் இந்தக் குடும்பத்தைக் கட்டி ஆண்ட ராஜகுமாரனின் இடத்தில் இப்போது இனிமேல் ஆள வந்தவனாக அவன் தம்பி நந்தகுமாரன்.

நந்தகுமாரா! இப்போதைக்கு மட்டும் எனக்கு ஒருவேளை சோறு ஊட்டி விடுவதற்கு மட்டும் இப்படி வந்து நின்றுவிட்டுப் போய் விடமுடியாது. இனிமேல் எனக்கும் இந்தக் குடும்பத்திற்கும் சோறு போடுவதற்காக நீ எப்போதுமே இப்படி இந்த இடத்தில் நின்றேயாக வேண்டும்.

நான் கண்விழித்ததைக் கண்டதும் நந்தகுமாரன் எனக்கு சாப்பாடு எடுத்து வருவதற்காக உள்ளே ஓடுகிறான். இனிமேல் இவன் இப்படி ஓடியேயாகவேண்டும். இந்த வீட்டிற்காக, இங்குள்ள ஜீவன்களுக்காக இனி இன்றிலிருந்து இவன் இப்படி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். லொறிக்கு போகவேண்டும். விறகு வெட்டவேண்டும்.


கடவுளே! உன் திருகுதாளங்களை இனிமேலாவது தயவு செய்து நிறுத்திக்கொள். உன் கபட விளையாட்டை இவனிடமும் காட்டி விடாதே.

என்ன இது? திடீரென்று எனக்கு கண்கள் இருட்டி தொண்டை அடைக்கிறது. நாக்கு உலர்கிறது தண்ணீர் விடாய்க்கிறது. உள்ளே போன நந்தகுமாரனை இன்னும் காணவில்லையே. அவனை ஒரு முறை கூப்பிட்டு பார்க்கலாமா?

நந்தகுமாரா... நந்தகுமாரா... கொஞ்சம் இங்கே வருவாயா? குடிக்க எனக்கு தண்ணீர் வேண்டும். கொண்டு வந்து தருவாயா?

வன்னி நெட் கபே
Vanni Net Cafe
உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வருகின்றது
- நினைத்த நேரத்தில் இன்டநெட் ஈ-மெயில் பாவிக்கும் வசதி.
- 24மணி நேர இணைப்பு.
- சிறந்த பராமரிப்பு, திருத்த சேவை.
- வேகம் 64 Kbps, 128Kbps, 256 Kbps, 1MB, 2 MB.
- வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய விஷேட அன்ரனாக்கள் மூலம் பயணங்களின் போது இன்ரநெட் பாவனை.
- நகரைச் சுற்றி 5K.M சுற்றளவிற்கு நடமாடும் இன்ரநெட் வசதி.

அரச அலுவலகங்கள், அரச சார்பற்ற, சர்வதேச(NGO,INGO), தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்




கணினி மையம்
TCC
யாழ் சாலை, கிளிநொச்சி (கந்தசாமி கோயிலுக்கு அருகில்)

# ஏ9-ஏரம்பு

எல்லாருக்கும் வணக்கம்! நான் உங்கட சுகத்தை விசாரிக்க முதல், என்ர 'ஏ9 குந்தடி' எப்படி இருக்குதெண்டு விசாரிக்கோணும். என்ர குந்தை விட்டிட்டு வந்து ஒரு கிழமை ஆகிவிட்டுது. நீங்கள் ஆராவது அந்தப் பக்கத்தால போகேக்கிள்ளை ஒருக்கா குந்து எப்பிடி இருக்கிதெண்டு பார்த்திட்டுப் போங்கோ! மற்றது நீங்களும் உள்ளுக்குள்ளை நினைச்சிருப்பியள், ஏனிந்த மனிசன் திடீரெண்டு யாழ்ப்பாணத்துக்கு உலாத்திலை வெளிக்கிட்டிருக்கெண்டு. நானும் பூர்வீகம் இங்கைதான். 1995 இடப்பெயர்வோட வன்னிக்குப் போனனான். என்ர ஊர்க்கோவில் நிர்வாகத்திலை நானும் இருந்தனான் முந்தி. அவையளின்ர ஒழுங்கில ஒரு சமூக சேவை மன்றம் ஒண்டு இயங்கிது. அது ஒழுங்கு செய்திருக்கிற விளையாட்டுப் போட்டியிலையும், கலை நிகழ்வுகளிலையும் கட்டாயம் நானும் கலந்து கொள்ள வேணுமெண்டு வரச்சொல்லி கடிதம் போட்டினம். ஒரு காலத்திலை எப்பிடியோ கிடந்த நிர்வாகத்தை, இப்படி மாற்றி அமைக்கோணும் எண்டு ஐடியா கொடுத்து, கூட மாட செயற்பட்டதை அவையள் இன்னும் ஞாபகம் வைச்சிருக்கினம். சரி அப்பிடியே ஒருக்கா ஊரையும் உறவுகளையும் பார்த்த மாதிரியும் இருக்கும் எண்டிட்டுத்தான் வெளிக்கிட்டனான்.

உங்களுக்கு நானொரு



விசயம் சொல்லோணும். இஞ்ச நான் என்ரை சகோதரியின்ர மகள் வீட்டை தான் தங்கியிருக்கிறன். என்னை முதல் கண்டதும் அவையளுக்குச் சரியான சந்தோசம். வெளிநாட்டில இருந்து வேற ஒரு மருமகள் குடும்பமும் வந்து நிண்டிச்சு. நல்ல கலகலப்பு. அண்டைக்கு இரவாகிற நேரம் திடீரெண்டு எல்லோரும் அமைதியாகிச்சினம். ஏதோ ஒரு இந்திய ரீ.வி.யில ஒரு தொடர்நாடகம் "மனைவி" எண்டு போயிச்சு "இஞ்சேருங்கோ! நூடில்ஸ் இருக்கு அவியப்போட்டிட்டு அந்த மரக்கறியளையும் வெட்டிப் போட்டுப் பொரிக்கிறீங்களே!" மருமகள் மனுசனைக் கெஞ்சல் பார்வையோட கேட்டாள். "ஓமோம் நான் செய்யிறன்" எண்டிட்டு அவர் குசினிக்குள்ள போனார். எனக்கு வலு சந்தோசம் அதைப் பார்த்து. எங்கட சமுதாயத்திலை எவ்வளவு காலமா இந்த ஆணாதிக்கக் கருத்து வலுவாய் இருந்திச்சு. வேலை செய்ய ஆம்பிளையள், சமைக்க பொம்பிளையள் எண்ட பிற்போக்குத் தனமான எவ்வளவு காலமாய் எங்களுக்கிள்ள இருந் தது. அதையெல்லாம் மாத்தி மனிசி யின்ரை விருப்பத்தைக் கேட்டு, கூட மாட இப்படி ஒத்துழைக்கிறது எவ்வளவு சந்தோசப்படக்கூடிய விசயம். இதுகளை நாங்கள் ஊக்குவிக்கோணும். நான் குசினிக்குள்ள போய் மருமகன்காரனிட்டை சொன்னன் "தம்பி! நாள் முழுக்க வீட்டு வேலையளோட கஷ்ரப்படுற பொம்பிளையள் இப்பிடிக் கொஞ்சநேரம் ஓய்வா இருக்கோணும் எண்டிறதைப் புரிஞ்சு கொள்ளிற பக்குவம் எல்லா ஆம்பிளையளுக்கும் வராது. உம்மை நினைக்க உண்மையிலேயே எனக்குப் பெருமையா இருக்கிது" சின்னதாக ஒரு சிரிப்பைப் பதிலாக்கிப் போட்டு தன்ரை சமையல் வேலையில அவர் மூழ்கினார்.

போகப் போகத்தான் எனக்கு விளங்கிச்சு. அது ஒண்டும் நான் பெருமைப்பட்ட மாதிரியான பரஸ்பர புரிந்துணர்வு இல்லை. காலையில "ராசிபலன்", "அழகுக் குறிப்பு", மதியத்திலை "லஞ்ச் டைம்", இரவிலை "மனைவி", "மெட்டிஒலி", பட்டுச்சேலை, குங்குமப்பொட்டு எண்டு ஏதேதோ பெயரிலை தொடர்ந்து ஏதாவது வந்து கொண்டு இருக்கும். வேலை நாட்களில மதியம் தவிர்ந்த ஏனைய நேரங்களில குசினிப் பொறுப்பு பெரும்பாலும் மருமகனிட்டைத்தான் பிள்ளையளின்ர படிப்பையும் ரியூசன்கள் கவனிக்குமெண்ட ஒரு போக்கால, வீட்டில கவனிக்கிறதில்லை. எங்கே நேரமும் இருந்தாத் தானே! துச்சாதனன் இழுத்த திரௌபதையின்ர சீலை மாதிரி முடிவில்லாம தொடர்ந்து கொண்டே போகிற நாடகங்களோட மினைக்கெட்டால், என்னண்டு நேரம் மிஞ்சும்! நல்லகாலம் வன்னியில ஒழுங்கான கறண்ட் இல்லை, இருந்திருந்தால் அங்கையும் எல்லாம் தலை கீழா மாறியிருக்கும். எட! இலங்கை முழுக்க முதலாவதா இருந்த யாழ்ப்பாணம் இப்ப கல்வியிலே 14 ஆவது இடத்துக்கு வந்திருக்குதெண்டா, நாங்களெல்லாம் காரணங்களைப் பற்றி அலசிப்பார்க்க வேண்டாமே!

உப்பிடியே வர்ற சனத்தோட கதைக்கிறதிலையும், வீடுகளுக்குப் போறதிலையும் எண்டு என்ர பொழுதும் போய்க்கொண்டிருக்கு. சனம் எல்லாம் யாழ்ப்பாண நிலையைச் சொல்லி கவலைப்பட்டிச்சு "அப்பு! முந்தியெல்லாம் இயக்கம் இருந்த நேரம் எவ்வளவு நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்தனாங்கள்! ஆமியின்ர ஷெல்லடி விமானக் குண்டு வீச்சுக்கள் இருந்தாலும் தெருவில பயமில்லாமத் திரியக்கூடியதா இருந்திச்சு. இப்ப என்னடா எண்டால் சட்டம், ஒழுங்கு, காவல் எல்லாம் சமுதாயத்தை சீர் கெடுக்கவே இருக்கிற மாதிரிக்கிடக்கு. வெளிநாட்டில இருந்து வாற எங்கட ஆக்களும் சொல்லினம், அங்கேயே இல்லாத அளவுக்கு அன்பாகவும், கண்ணியமாகவும், நல்ல கட்டுப்பாட்டோட தமிழீழக் காவல்துறை விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலை செயற்படுதெண்டு பாருங்கோ! எங்கட காவல்துறையின்ரை பாதுகாப்பில, நிம்மதியா நாங்கள் திரியிறதுக்கு எங்களுக்குக் குடுத்து வைக்கேல்லை உந்தக் கவிழ்வாங்கள் போய் இயக்கம் திரும்ப இஞ்சை எங்களுக்கு வேணும். எங்களுக்கு இயக்கத்தை நல்ல விருப்பம், அவையின்ர செயற்பாடுகளெல்லாம் நல்லாயிருக்கு. ஆனா உந்த வரி வாங்கிறதை மட்டும் அவையள் விடலாம். சொந்தச் சனத்திட்டையே வரி எண்டு வாங்கிறது அவ்வளவு நல்லாயில்லை" எண்டார் எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர்.

"தம்பி! கவலைப் படாதையும். எப்ப இயக்கம் வரோணும் இங்கை எண்டு விரும்பிறீரோ, அப்பையே உம்மட விருப்பம் கைகூடத் தொடங்கீட்டிது எண்டு தான் அர்த்தம். உரிமையளோட சுதந்திரமா வாழோணும் எண்டு விரும்பிற ஒவ்வொருத்தரிலையும் இயக்கம் வாழ்ந்து கொண்டிருக்குது. அப்பிடியான இயக்கத்தை ஏற்றுக் கொள்ளாதவன், சமூகத்தில ஒரு பிணம் போலத்தான், வள்ளுவர் சொன்ன 'என்பு தோல் போர்த்த உடம்பாக' இருப்பான். எங்கள் எல்லாருக்கும் இருக்கிற அந்தப் பொதுவான விருப்பத்தை தேவையை இலட்சியத்தை நிறைவேற்ற, எல்லாரும் சேர்ந்து முயற்சி செய்தால் கட்டாயம் கை கூடும். இப்படியான ரீணுவ கெடுபிடிகளுக்கு மத்தியிலையும், உவ்வளவு லட்சம் சனம் சேர்ந்து "பொங்குதமிழ்" நடத்தினமெண்டால், அது என்னத்தைக் குறிக்கிது! முடியுமெண்டு நம்பி முழுசா முயற்சிசெய்தால், வெற்றி எப்பையும் எங்கட பக்கம் தான்"

"மற்றது உம்மட வரிப் பிரச்சினைக்கு வாறன். சொந்தச் சனத்திட்டை வரி வாங்காமல், பக்கத்து நாட்டுக்காரரிட்டப் போய் வரி கேட்டால் அவன் அடிச்சுப் போடுவான். ஒரு நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டு நடத்திறதுக்கு எவ்வளவோ செலவு ஏற்படும். நீங்கள் குறிப்பிட்ட காவல்துறையையே எடுத்துக் கொள்ளுவம் அப்பிடி ஒரு கட்டமைப்பை திறமையாய்ச் செயற்படுத்திறதுக்கு கொல்லாம் கனக்கச் செலவாகும். எங்கட பாதுகாப்புக்குத் தேவையான பங்களிப்புக்குப் பின்னடிக்கிறீங்கள். ஆனா சிங்களவன்ரை பாதுகாப்பு வண்டி தமிழற்ற செலவிலைதானே ஓடுது"

"இல்லையப்பு! அவன் ஆமிக்காரன், எதிரி நாட்டுக்காரன் இது எங்கட பொடியள், பிள்ளையள் எல்லே! அவங்கள் வேண்டாட்டிப் பரவாயில்லை, இவையளுக்குக் குடுக்கலாம். ஆனால், அவங்கள் வேண்டிறதால, இவையள் கொஞ்சம் நிற்பாட்டி வைக்கலாம்தானே! இரண்டு பக்கமும் என்னண்டு குடுக்கிறது?"

"தம்பி! உம்மட விசயம் விளங்கிது. ஆனாப் பாரும்! இவையளின்ரை தேவையளைப் பூர்த்தி செய்தால் தான், அவர்களுக்குக் குடுக்கத் தேவையில்லாத காலகட்டம் ஒண்டு வரும் அதுக்காக எல்லாரும் சேர்ந்து ஒற்றுமையா உழைக்க வேணும். அது மட்டு மில்லாமல் வலுவான ஆக்கள் கொஞ்சம் கூடின பாரத்தைத் தூக்கினால், வலுக்குறைஞ்ச ஆக்களின்ரை சுமை குறையும்" அவர் தலையாட்டி நான் சொன்னதை ஆமோதித்தார். இரண்டு பேரும் அமைதியானோம். தூரத்திலிருந்த ஒரு மரக்கிளையில காகம் ஒண்டு கூடு கட்டிக் கொண்டு இருந்திச்சு. ஒரு சின்னச் சுள்ளியைப் பொறுக்கிறதுக்கே கனதூரம் பறந்து பறந்து தேடவேண்டியிருந்திச்சு. ஆனா தன்ர முயற்சியில மட்டும் அது உறுதியா இருந்திச்சு; எங்கேயோ ஒரு மூலையில கூவிக்கொண்டு கும்மாளமடிக்கிற குயிலைப் பற்றிஅது பெரிசா அலட்டிக்கொள்ளவேயில்லை. தான் முட்டையிட்டு, அடைகாத்து தன்ர குஞ்சுகள் பொரிச்சு வளர்ந்து சிறகடிக்கிற வரைக்கும் கூட்டின்ர அவசியத்தை காகம் உணர்ந்திருந்திச்சு; அதுக்காகவே அது உழைச்சிது. குயிலின்ரை குரல் ஏதோ இனிமையா இருக்கலாம். ஆனாஅதின்ரை போக்கு ஆக்களுக்குப் பிடிக்கிறேல்லை!

# விழித்தெழுந்தோம் வழிகாட்டிடவே



மனிதர்களின் எண்ணங்கள் செயலாக மாறும் போது உலகம் தானாகவே முன்னேறும் என்று ஒரு விஞ்ஞானி கூறியிருக்கின்றார். எண்ணங்கள் செயலாக மாறுவதற்கு கல்வி அவசியமாகின்றது. ஒன்றை அறிந்து கொள்ளவும், புரிந்து செயற்படவும் கல்விதான் வழிகாட்டுகின்றது. உலகத்திலே பலர் புதுப்புது கண்டுபிடிப்புக்களை கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் மனிதன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புக்களில் எல்லாம் மிக உயர்வானது. எது என்றால் எல்லோருக்கும் கல்வி போதிக்கக்கூடிய பள்ளிகளை ஏற்படுத்தியதுதான்.

எமது நாட்டில் பல பல வடிவங்களில் கல்விக்கொள்கைகள் திட்மிட்டு செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக சிறுவர்களுக்கான கல்வித் திட்டங்களில் மாணவர், ஆசிரியர், பெற்றார் என்னும் முக்கோண வடிவிலான தொடர்புடைய தொடர்பாடற் கல்வி நாடுமுழுதும் பரம்பிக்காணப் படுகின்ற போதிலும் அதன் பலாபலன்கள் முன்னேற்றகரமானதாக இருக்கின்றதென்று சொல்வதற்கில்லையெனப் பலர் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் வேளையில்தான் வடக்கு கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டுக் குழுவினரின் ஆலோசனையுடனும். வழிநடத்தலுடனும் மல்லாவி மத்திய கல்லூரியில் துணுக்காய் வலய பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும், ஆசிரிய ஆலோசகர்களையும், அதிபர்களையும் இணைத்து மாபெரும் செயற்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

பெற்றோர்களுக்கும், சிறுவர்களுக்குமான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமாக இது அமைந்தது. வடக்கு கிழக்கு மாகாண ஆரம்பக்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் அவர்களும் அவர்களுடன் உதவிக்கல்விப் பணிப்பாளர்களான திரு.இ. இராஜேஸ்வரன், திரு.க. விக்கினராஜா, செல்வி.சி. உதயா ஆகியோரின் அசுர முயற்சியினால் சமூக ஆற்றுப்படுத்தலின் விழிப்புணர்வுச் செயற்பாடு என்றுமில்லாதவாறு மல்லாவி மத்திய கல்லூரியில் 1160 இற்கு மேற்பட்ட பெற்றோர்களும் அவர்களின் பிள்ளைகளும் அச்செயற்பாட்டில் முந்தியடித்து செயற்பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

தரம் - 01தொடக்கம் 05 வரையான மாணவர்களும் அவர்களின் பெற்றோரும்·சுயசெயற்பாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர். தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் காட்டும் பெற்றார்கள் கற்பிப்பதற்காக கற்றலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். தமது பிள்ளைகளின் செயற்பாடுகளை அறிந்து அவர்களின் குறை நிறைகளை தாமே திருத்தியமைப்பதற்கான செயலில் ஈடுபட்டதை நினைக்கும்போது மெய்சிலிர்த்தது. இதிலிருந்து ஒன்று மட்டும் புரிந்தது வன்னியில் வாழ்கின்ற பெற்றார்கள் கல்விஅறிவிலும், தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் சோடைபோகவில்லையென்பதை. அச்செயற்பாட்டில் ஒவ்வொரு தரத்திற்கும் 05 செயற்பாடுகள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. பெற்றாரும் பிள்ளையும் உள்நுழையும்போது மதிப்பீட்டுத்தாள் கொடுக்கப்பட்டு அவர்களின் செயற்பாட்டின் மதிப்பீடுகள் நிகழ்வை நடாத்திக் கொண்டிருந்த ஆசிரியர்களினால் வழங்கப்பட்டு வாசலின் முன்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த மதிப்பீடுகள் ஆவணப்படுத்தும் நிலையத்தில் சமர்ப்பித்து பெற்றார்கள் அந்நிகழ்வு பற்றியதான அபிப்பிராயங்களையும் எழுத்துமூலம் சமர்ப்பித்ததையும். அவர்கள் இன் முகத்துடன் உலா வந்ததையும் பார்க்கும்போது கல்வியின் சிறப்பு கண்ணில் தெரிந்தது.

பெரும் சிரமங்களுக்கு மத்தியிலும் குறிப்பாக நீண்ட தூர போக்குவரத்து, அத்துடன் எதிர்பாராத பெற்றார் வருகையினால் குடிநீர் பிரச்சினை, வெயிலின் கொடூரம் என்பவற்றையும் பொருட்படுத்தாது தமது பிள்ளைகளின் கல்வியை முன்னெடுத்துச்செல்லவேண்டும் என்ற உத்வேகத்துடன் அச்செயற்பாட்டில் கலந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது என்றும் எதிர்நோக்கப்படாத புலமைச் சவாலை எதிர்நோக்கியிருப்பார்கள் நிகழ்வை நடாத்திக்கொண்டிருப்பவர்கள்.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பெற்றார்களை ஒன்றிணைப்பதென்பது கல்லில் நார் உரிப்பது மாதிரி என்ற எண்ணத்தை விரட்டிவிட்டு நாங்கள் எங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஊன்றுகோல் என்னும் எண்ணக்கரு தாங்கி செயற்பட்டதை கண்ணுற்ற துணுக்காய் பிரதேச செயலரும், நிகழ்வில் கூடியிருந்த கல்விமான்களும் பிரமித்தே போய்விட்டார்கள்.

குழந்தைகளுக்கு நல்ல பழக்கத்தைப் பழக்குபவர்கள் பெற்றோர்களும், ஆசிரியர்களுமே அந்தப் பெற்றோரும் ஆசிரியர்களும் ஒன்று கூடி ஒருமித்து பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்ட வைத்த இந்நிகழ்வை நடாத்த முன்னின்றுழைத்த மாகாண கல்வித் திணைக்களத்தினருக்கு பயன்பெற்ற பிரதேச வாழ்மக்கள் தத்தம் அபிப்பிராயங்களில் இனியும் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபட்டு எம் குழந்தைகளின் அறிவுப் பசி போக்குவீர்கள் என வேண்டுதலைத் தெரிவித்தனர். இவ்வேண்டுதலை அவர்களும் ஏற்றுக்கொண்டு செயற்பட்டால் கல்வியில் அடையும் வெற்றியை எமது பிரதேசம் அடையும் என்பதில் ஐயமில்லை.

**பா.றுஜினா**

**பஸ்தரிப்பு நிலையத்தில**



வவுனியா... வவுனியா வெளிக்கிட்டுப் போகுது ஏறுங்கோ.

'சீற்' இருக்கோ..?

இருக்கு, ஆக்கள் இருக்கினம்.

(9ஆம் பக்கத்தொடர்ச்சி.)
அப்படியான அமைப்புக்கள் யாழ்ப்பாணத்திலும் சில வேறுபட்ட பணிகளை ஆற்றிவருவது தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் உலகப் பொருளாதாரக்கொள்கையிலும் உலக இராணுவக்கொள்கையிலும் இலங்கை முக்கியம் வகிப்பது போல் தமிழ்தேசிய விடுதலைப் போராட்டமும் ஆபத்துமிக்கதொன்றாக உள்ளது.

உலகப்பொருளாதாரத்தில் இலங்கை பெரிதாக சாதிக்கமுடியாத சிறிய நாடாக இருந்தாலும் அதன் பிராந்திய மட்டத்திலான பொருளாதார இயங்குவிசைக்குரிய நாடாக உள்ளது. முழு உலகத்திலும் காணப்படும் சுரண்டல் பொருளாதார தத்துவத்திற்கு தேசியவாதம், தேசியப்பற்று, சுதேச உணர்வு என்பன ஆபத்தான பொறிமுறையாகும். இப்பொறிமுறை உலக நாடுகளில் அமெரிக்க பொருளாதாரத்திற்கு எதிரான கொள்கையுடைய சக்திகளுக்கு அனுபவமாக மாறிவிடும் என்பதே அமெரிக்காவின் அச்சமாகும்.

அவ்வாறே உலக இராணுவக்கொள்கைக்குள்ளும் விடுதலைப் புலிகளின் உபாயமும் போரியல் அணுகுமுறையும் அடக்கப்பட்ட மக்களின் போராட்டத்திற்கான அனுபமாகிவிடும் என்ற அச்சம் அமெரிக்காவுக்கு உண்டு. விடுதலைப் புலிகளைப் பின்பற்றி வேறு விடுதலை உணர்வுகொண்ட மக்கள் எழுச்சியடைந்தால் இராணுவரீதியான அணுகுமுறைக்கு எதிராக அமெரிக்கா செயற்படுவது கடினம். இதுவே அமெரிக்காவின் அடிப்படையான பிரச்சினையாகும். இவற்றோடு பிராந்திய மட்டத்திலும் இந்து சமுத்திரமும் திட்டமிட்டுள்ள இராணுவ நகர்வுகளுக்கு தடையான நடவடிக்கையாக அமைந்துவிடுமென அமெரிக்கா எண்ணுகின்றது.

எனவே அமெரிக்கா கிழக்கிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தை பயன்படுத்தி தேசிய விடுதலைப்போராட்டத்தை பலவீனப் படுத்துவதே தற்போதைய நோக்கமாகும். வடக்கை தனியான அலகாக ஆக்கி இடைக்கால நிர்வாகத்தையோ சமஷ்டித்திட்டத்தையோ சாத்தியப் படுத்துவது அமெரிக்க ஆட்சியாளரின் நோக்கமாகும். இதனால் இந்தியாவுக்கு ஒப்பான கொள்கையை அமெரிக்கா கொண்டிருந்தாலும் இதனூடாக அமெரிக்கா நிரந்தரமான நட்பை சிறிலங்காவுடன் பேணிக் கொள்ளலாம் என கருதுகிறது. ஆனால் இக்கொள்கை நிரந்தரமானதல்ல காலப்போக்கில் வேறுபட்ட கொள்கையொன்றுக்கு அமெரிக்கா பின்பற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வாறான போக்கு மத்தியில் நோர்வே எத்தகைய பணியாற்றுகிறதென்பதே அடுத்த கேள்வியாகும். நோர்வே அமெரிக்க நலனை பிரயோகப்படுத்தும் ஒரு ஸ்கன்ரிநேவிய நாடு டென்மார்க்கும் நோர்வேயுடன் ஒத்துழைத்து வருகிறது. இவையிரண்டும் அமெரிக்க நலன்களை முதன்மைப்படுத்தும் நாடுகள் என்பதில் அதிகமான சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. ஆனால் இந்த நாடுகள் சமாதானத்தை அமுல் படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகின்றன. விடுதலைப்புலிகள் கண்டனத்துடன் அல்லது எச்சரிக்கையுடனான அறிக்கையை வெளியிட்டால் நோர்வே தூதுவர் அல்லது விசேட தூதுவர் கிளிநொச்சிக்கு வருகை தருவார். விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளருடன் பல மணித்தியாலமாக பேச்சுக்களை நடாத்துவார். இது கடந்த மூன்று மாதங்களாக நிகழ்ந்து வருகின்ற தந்திரமான அரசியல். இது காலங்காலமாக சிங்கள அரசியல் தலைவர்கள் மேற்கொண்டதை இப்போது அனுசரணையாளர்களும் இணைந்து செயல்படுத்துகின்றனர். நோர்வேயின் தீவிர சமாதான முயற்சியும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சமாதான அவாவும், இந்தியாவின் சமாதானத்துக்கான பங்கும் பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்ட பின்பு எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதோடு புரிந்துணர்வு உடன்பாட்டில் எட்டப்பட்ட எந்த விடயத்தையும் சிறிலங்கா அரசு அமுல்படுத்தவில்லை என்பதே கவனத்திற்குரியது. இது சிறிலங்கா அரசுடன் உலகம் வகுத்துள்ள புதிய உபாயமாகும். இதன் மூலம் விடுதலைப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதுடன் விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துவதே உலகத்தினது திட்டமிடலாகும். பலவீனமான சூழலில் எத்தகைய தீர்வையும் திணிக்கலாம் என்பதையே இலக்காகக் கொண்டு உலகம் செயல்படுகின்றது. ஜப்பானை அதிகம் கவனிக்காத நிலையிலும் அமெரிக்க-இந்திய உறவை அதிகம் பாதிக்கும் விதத்தில் ஜப்பான் நடந்து கொண்டாலும் ஜப்பான் நேரடி சமாதான முயற்சிகளிலிருந்து சற்று தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே கிழக்கு அரசியல் குழப்பத்தை உலக நாடுகள் ஒன்றாகவே பார்க்கின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றும் அடையும் நலன்கள் மட்டுமே வேறுபட்டவை.

மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் கலைக்கப்பட்ட பின்பு உருவாகியிருக்கும் புதிய அரசின் கீழ் எழுந்துள்ள சர்ச்சைகள் தனித்துவமானவையாக உள்ளன. குறிப்பாக இந்தியாவில் ஏற்பட்டுள்ள புதிய அரசாங்கம் தமிழர்களின் தேசிய உணர்வுக்கு மதிப்பளிக்காத அதிகாரிகளைக்கொண்டிருக்கின்றது. ராஜீவ் காந்தி அரசாங்கத்தை இலங்கை இனப்பிரச்சினையில் தவறாக கையாள உதவிய சக்திகள் மீண்டும் இந்திய மத்திய அரசில் இடம் பிடித்துள்ளனர். இவர்களது நடவடிக்கை மிக ஆபத்தானவையாக அமையும். அரசியலில் அனுபவமற்ற இந்தியப்பிரதமர் தமிழர்களுக்கு எதிரான இராஜதந்திர சக்திகளால் பிழையாக வழிநடத்தப்படலாம். அப்படியான நிலையில் ஒரு இராஜதந்திர போரை இந்தியத்தலைமையோடு விடுதலைப் புலிகளோ அல்லது தமிழ் அரசியல் தலைமைகளோ மேற்கொள்ள வேண்டிவரும்.

இத்தகைய சூழலிலேயே இலங்கையின் புதிய பிரதமர் இந்தியாவுக்கு சென்றதுவும் இலங்கையின் சமாதான முயற்சியில் முழுமையான ஈடுபாட்டை கொள்ளுமாறு இந்தியாவிடம் ராஜபக்ச கோரியிருப்பதும் கவனத்திற்குரியது. இந்தியா நிதி மற்றும் ஆயுத தளபாடம் என்பனவற்றை வழங்க முன்வந்திருப்பதுடன் அமெரிக்க பாகிஸ்தான் தலையீட்டை பற்றி அதிகமான அதிருப்தியை புதுடில்லி கொண்டிருப்பதாக புதுடில்லி அதிகாரிகள் பிரஸ்தாபித்தன் வெளிப்பாடாகும். அவ்விடயத்திற்கு எதிராக இந்தியா சகல விதமான ராஜதந்திர நடவடிக்கையிலும் இறங்கியுள்ளதாக அவர்கள் தெளிவுபடுத்தினர். குறிப்பாக இலங்கை அரசாங்கத்திற்கு நிதி உதவி வழங்குவதுடன் இலங்கைப் பிரதமர் கேட்டதற்கு ஏற்ப 10 கோடியாக அதிகரிக்க இந்தியா முயற்சிப்பது, வடக்கு கிழக்கு அபிவிருத்தியில் அதிக பங்கை இந்தியா வகிக்க வேண்டுமென விரும்புவது மற்றும் வன்னிப் பிரதேசத்தில் தமது நிவாரணப்பணியை முதன்மைப்படுத்தும் இந்தியத் தூதுவரின் முயற்சி என்பவற்றை குறிப்பிடலாம்.

இந்தியா மீண்டும் ஆரம்பித்துள்ள அமெரிக்க - பாகிஸ்தானிய அச்சம் என்பது ஏற்கனவே புதுடில்லி கொண்டிருந்த அச்ச உணர்வுதான். இலங்கை மீது தனது தலையீட்டை சாத்தியப்படுத்திக்கொள்ள பிரயோகிக்கும் ராஜதந்திர உரையாடலாகவே உள்ளது. இந்தியா கூறுவது போல் இன்று நேற்று அமெரிக்கத்தலையீடு ஏற்பட்டதல்ல. சுதந்திர கால இலங்கையின் பிரித்தானியா கொண்டிருந்த செல்வாக்கு படிப்படியாக அமெரிக்காவிடம் கைமாறியது. இது 1978 களுக்கு பின்பு தீவிரமடைந்தது. அமெரிக்காவின் செல்வாக்கு 1989 களுக்கு பின்பு உலகத்தில் பரவலாகியது போன்று இலங்கையிலும் விரிவாக்கம் பெற்றது. இந்தியாவில் அமெரிக்க செல்வாக்கும் தலையீடும் இல்லை என்று இந்தியாவால் கூறமுடியுமா? எனவே புதுடில்லி போடும் புதிய உபாயத்தில் ஒன்றாகவே அமெரிக்க, பாாகிஸ்தான் தலையீடு பற்றிய பிரஸ்தாபிப்பு காணப்படுகின்றது.

அமெரிக்காவின் தலையீடு திருகோணமலையோடு மட்டும் சுருங்கிய விடயமாக கொள்ள முடியாது. ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் ஆரம்பித்த யாழ்ப்பாணத்துடனான நெருக்கம் மேலும் தொடர்கின்றது. கிறிஸ்ரினாரொக்காவின்பலாலி விமானத் நிலையத்தில் ஆரம்பித்த உறவு அமெரிக்க இராணுவத்தளபதிகளதும் உளவு நிபுணர்களதும் விருந்தினர் மையமாக மாறிவருகின்றது. அந்தளவுக்கு மிக நெருக்கமான பரிச்சயமான இராணுவத்தளமாக விருத்தியடைந்து வருகின்றது. இதிலும் இந்தியா தனது பங்கை ஆற்ற தவறவில்லை. ஒரு பக்கம் சேது சமுத்திரத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு செயல்படும். இந்தியா மறுபக்கத்தில் பலாலி விமான நிலையத்தை புனரமைப்பது என்ற நோக்கில் அப்பிரதேசத்தை இந்திய புலனாய்வுத் துறையால் துடைக்க விரும்புகிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் சிறிலங்கா என்ற தீவு தனது இராணுவ நலனுக்கான மையமாகவும் பொருளாதார இயங்கு விசைக்கான தொடர்பு நிலையமாகவும் காணப்படுவது போதுமானதாக உள்ளது. அதனால் அமெரிக்க நலனை சாத்தியப்படுத்தக்கூடிய சூழலை பேணுவதே அதன் நோக்கமாக உள்ளது. அதுவே அமெரிக்கச் சூழலாகும். இச்சந்தர்ப்பத்தில் ஊடுருவலை அதிகப்படுத்தி மக்களை போராட்டத்திலிருந்து திசைதிருப்பி ஒட்டுமொத்தமான சமூக சீரழிவுகளை சாத்தியப்படுத்தி போராட்ட உணர்வை இல்லாதுசெய்வதன் மூலம் அமைதிச் சூழலை தக்க வைத்துக் கொண்டு தனது தலையீட்டை பாதுகாக்க விரும்புகிறது.

அமைதிக்காலத்தை பிராந்திய சர்வதேச சக்திகள் பயன்படுத்திக்கொண்டு கிழக்குப் பகுதியிலும் வடக்கில் யாழ் குடாநாட்டுப் பகுதியிலும் உள்ள புத்திஜீவிகளையும் ஏனைய அரசாங்க உயர் அதிகாரிகளையும் தமது செல்வாக்குக்குள் கொண்டு வந்து இயல்புச் சூழலை தமக்குரியதாக மாற்ற முயலுகின்றது. பணத்திற்காகவும் மற்றும் தவறான நடத்தைக்காகவும் பயன்படுத்தப்படும் தமிழ் புத்திஜீவிகளும் அதிகாரிகளும் சர்வதேச புலனாய்வுத்துறைகளுக்கு அதிகமான தகவல்களை பரிமாற்றிக் கொண்டிருக்கின்றனர். சிலர் விடயமே தெரியாது நடந்து கொள்கின்றனர். பலர் திட்டமிட்டு பணியாற்றுகின்றனர். இது மட்டுமன்றி யாழ் குடாவிலும் வடக்கு கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் குவிந்திருக்கின்ற அரசாங்கம் சாராத பல நிறுவனங்கள் தமிழர்களின் பண்பாடுகளில் அதிகமான கவனத்தை செலுத்திவருகின்றன. அதனூடாக பண்பாட்டு ஒழுங்குகளை சிதைக்கவும் பிரிவினைகளை தூண்டிவிட்டு சமூக பிறழ்வுகளையும், முரண்பாடுகளை வளர்க்க ஆதிக்க அரசுகள் முயன்று வருகின்றன. இதற்கு பல ஊடகங்களும் உதவி வருகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எனவே இலங்கையின் சமாதான முயற்சிக்கான தடைகள் என்பது இறுதியான தெளிவான தீர்வற்ற சூழலையே காட்டுகின்றது. அத்தகைய தடைகள் இலங்கை அரசுக்கு மட்டுமுரித்தாக அன்றி இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இசைந்து போகின்ற போக்கினை குறிப்பதாகவே கொள்ளுதல் வேண்டும். இலங்கை -இந்தியா- அமெரிக்கா ஆகிய மூன்று சக்திகளும் கூட்டாக சமாதானத்தை விரும்புகின்ற போதும் கூட்டான போராட்ட முறியடிப்பு சக்திகளாக உள்ளனர். வெளிப்படையாக சமாதானத்தை ஆதரித்த நாடுகளாக காணப்பட்டாலும் சமாதான காலத்தை பிரயோகித்து ஊடுருவலையும் ஆக்கிரமிப்பையும் ஏற்படுத்தி வருகின்றன. இந்த நாடுகள் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள அவை தயாராக இல்லை. இலங்கை அரசும் எந்தத் தீர்வையும் முன்வைக்காது இனப்பிரச்சினையை இழுத்தடித்து விடுதலைப் புலிகளை தோற்கடித்து விடுவதுடன் பிரச்சினையை தீர்க்கலாமென கருகின்றது. மொத்தத்தில் இலங்கையும் உலகமும் தீர்வற்ற தீர்க்கமுடியாத போரை நோக்கி நகருகிறது. போரே தமிழர்களுக்கு விடிவைத்தரும் என்ற நோக்கு யதார்த்தமான அரசியலாக மாறுகின்றது.


## நூல் தொகுப்பு

"அமைதிப்படை" என்ற பெயரில் ஈழத்தில் இந்திய இராணுவம் இருந்த காலகட்டத்தைப்பற்றி எழுந்த சிறுகதைகள் கட்டுரைகளுக்கான தொகுப்பு.
இந்திய இராணுவத்தால் ஏற்பட்ட பாதிப்பின் (கவிதை நீங்கிய) பிறவெளிப்பாட்டு வடிவங்களையும் தேடுகின்றோம்.
இந்திய இராணுவத்திடம் பெற்ற அனுபவங்களையோ நீங்கள் பார்த்தவற்றையோ கேட்டவற்றையோ கதைகளாகக் கட்டுரைகளாக எழுதியிருந்தால் அனுப்பலாம்.
இனி எழுத நினைப்பவர்களும் எழுதி அனுப்பலாம்.
அல்லது இந்திய இராணுவம் பற்றிய உங்கள் அனுபவங்களைப் பதிவு செய்ய விரும்பியும் உங்களால் எழுத முடியவில்லையாயின் தொடர்பு கொள்ளுங்கள்.
நாங்கள் அதைப் பதிவுகளாக்குவோம்.

**ஒல்கார்** எல்லைகள் கடந்தும் விரியும் சிறகுகள்

pobox#63617:
1571.sandhurst circle
toronto-On
Canada
M1V 1VO
Tel;416-841-5172;Email;tamilvoice@hotmail.com

## ஈழத்தில் இந்திய இராணுவக்காலம்.

# 1987-1990

நாட்களின் நகர்வில்
ஞாபகங்களின் உடைவில்
காயங்கள் ஆறுவதும்
ஆற்றப்படுவதும் இயல்பு

தேசத்தின் வேர்களில்
நெருப்பள்ளிக் கொட்டியவரை
வானத்தின் மீது
இருளள்ளிப் பூசியவரை
மறக்கவும் முடியவில்லை
மன்னிக்கவும் முடியவில்லை
இன்னும்.



(சி-4863)



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 02**




# மூடுபனிக்குள் ஒரு தேடல்

**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

**பகுதி -08**

அந்த மேசையின் மீது சில கற்கள், சங்குகள், நிலக்கரித்துண்டுகள், வேறு சில கனிப்பொருட்கள் என்று பல பொருட்கள் இருந்தன. மேசைக்கு அருகில் டிப்ஸ் தரித்துக் கொண்டான். மிகமிக மெதுவாக ஒவ்வொரு பொருளாக எடுத்துப் பார்த்தான். அவற்றை சுற்றி தன் விரல்களால் தடவினான். அவற்றை தன் கன்னத்தில் ஒற்றிப்பார்த்தான். மணந்து பார்த்தான். நாக்கால் சுவைத்துப் பார்த்தான். பின் அவற்றை மிக அவதானமாக மேசைமீது மீண்டும் வைத்து விட்டான். நான் நின்ற திசை நோக்கி பார்த்தான். சடாரென என்னை நோக்கிப் பார்த்துவிட்டு பார்வையைத் திருப்பிக் கொண்டு விட்டான். மெதுவாக மேசைக்கு கீழே ஊர்ந்து சென்று அமர்ந்து கொண்டான். கிட்டதட்ட பார்வைக்குத் தென்படாமல் இருந்தான்.

அந்த வேளையிலே ஏனைய பிள்ளைகள் தங்கள் ஆசிரியை ஒருவரைச் சூழ தங்கள் கதிரைகளை கொண்டு வந்து வைத்து அமர்ந்து கொள்வது எனக்குத் தெரிந்தது. வீட்டில் இருந்து தாங்கள் கொண்டு வந்த பொருட்களை மற்றவர்களுக்குக் காட்டி தங்களுக்கு முக்கியமான சிறு சிறு செய்திகளை அவர்களுக்குக் கூறுவதற்கான நேரம் அது. ஆசிரியை அவர்களுக்கு ஒரு உபகதை சொன்னார். பின்னர் சில பாடல்களைப் பாடினார்கள்.



மேசைக்குக் கீழிருந்த டிப்ஸ் அவர்களிலிருந்து வெகுதூரத்தில் இருக்கவில்லை. அவன் விரும்பினால் அவன் இருக்கும் இடத்திலிருந்தே அவர்கள் கூறியதைக் கேட்கவும் அவர்கள் காட்டியவற்றைப் பார்க்கவும் முடிந்திருக்கும். இந்தப் பிள்ளைகள் இவ்வாறான செயற்பாட்டைச் செய்வார்கள் என்று எதிர் பார்த்துத்தான் அவன் மேசையின் கீழ் புகுந்து கொண்டானோ? அப்படித்தான் என்று நிச்சயமாகக் கூற முடியாதிருந்தது. முன் காலைச் செயற்பாடுகள் முடிந்து பிள்ளைகள் வேறு செயற்பாட்டுக்குப் போகும் வரை அவன் அப்படியே இருந்தான். அதன் பின்பு அவனும் வேறு செயற்பாட்டுக்குச் சென்றான்.

சுவருக்கு அருகாகவே அந்த அறையை ஊர்ந்து கொண்டே சுற்றி வந்தான். அப்போது எதிர்ப்பட்ட பல பொருட்களின் அருகில் தரித்துக் கொண்டு அவற்றை ஆராய்ந்தான். தரைப்பிராணிகள் வைக்கப்பட்டிருந்த தொட்டியும் வளர்ப்பு மீன்களின் தொட்டியும் வைக்கப் பட்டிருந்த அகன்ற பலகணியின் அருகில் வந்ததும் எழுந்து அவற்றின் அருகே அமர்ந்து கொண்டு அந்தப் பெரிய சதுரக் கண்ணாடித் தொட்டிகளினுள் தொடர்ந்துபார்த்துக் கொண்டேயிருந்தான். இருந்தாற்போல், தரைப் பிராணிகளின் தொட்டியில் இருந்த பிராணிகளில் ஏதாவதொன்றை தொட்டுப் பார்த்தான். அந்த வேளைகளில் மிகநுணுக்கமாகவும் மென்மையாகவும் அவன் அவற்றைத் தொடுவதாகத் தோன்றியது. கிட்டத்தட்ட அரைமணித்தியாலம் அங்கே இருந்தான். தனது அவதானிப்பில் மூழ்கிப் போய் விட்டவனாக அவன் தென்பட்டான். மீண்டும் ஊரத் தொடங்கி அறையைச் சுற்றி வரும் வட்டத்தை முடித்துக் கொண்டான். சில பொருட்களை விரைவாகவும் அவதானமாகவும் தொட்டுப் பார்த்தான். பின் வேறு ஏதாவது பொருளை நோக்கி நகர்ந்தான்.

பொத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த மூலைக்கு வந்ததும் அங்கு மேசை மீது வைக்கப்பட்டிருந்த பொத்தகங்களைத் தொட்டுப் பார்த்தான். அதில் ஒன்றை தெரிந்து கொண்டு, கதிரை ஒன்றை எடுத்து, அறைக்குக் குறுக்காக அதை ஒரு மூலைக்கு இழுத்துச் சென்று, சுவரைப் பார்த்தபடி அதன் மீது அமர்ந்து கொண்டான். பொத்தகத்தை முதல் பக்கத்திலேயே திறந்த அவன், மிக மிக மெதுவாக ஒவ்வொரு பக்கமாக ஆராய்ந்து கொண்டே போனான். பக்கங்களை மிக அவதானமாகப் புரட்டினான். அவன் வாசிக்கிறானா? ஆகக் குறைந்தது படங்களையாவது பார்க்கிறானா? ஆசிரியைகளில் ஒருவர் அவனுக்கு அருகே சென்றார்.

"ஓ! நீங்கள் பறவைகள் இருக்கின்ற பொத்தகத்தை பார்க்கிறீங்கள் இந்தப் பறவைகளைப்பற்றி உங்களுக்கு சொல்லட்டா டிப்ஸ்?" மிகவும் மென்மையான" செல்லமான குரலில் கேட்டார்.

உடனடியாகவே அந்தப் புத்தகத்தை டிப்ஸ் தூக்கி எறிந்துவிட்டான். சடாரென நிலத்தில் விழுந்து குப்புறப் படுத்துக் கொண்டு மரக்கடை போல் கிடந்தான். "சொறி டிப்ஸ்! உன்னை குழப்ப வேண்டும் என்று நான் நினைக்கவில்லை [illegible]ஸ்" என்ற அவர் பொத்தகத்தை எடுத்து மேசை மீது வைத்து விட்டு என்னருகே நடந்து வந்தார். "வழமையாக இப்படித்தான் நடக்கும். நாங்கள் அவனைக் குழப்புவதில்லை. நீங்கள் இதைப் பார்க்க வேண்டும் என்று தான் அப்படிச் செய்தேன்" என்றார் என்னிடம். குப்புறப் படுத்துக் கிடந்த டிப்ஸ் ஆசிரியையை அவதானிக்கக்கூடிய விதத்தில் மு[illegible]தத் திருப்பி வைத்துக் செ[illegible]ான். நாங்கள் அவனைப் பார்[illegible]தது போல் நடித்துக் கொண்டிருந்தோம். இறுதியாக அவன் எழுந்து அறையின் விளிம்புகளோடு நடந்தான். சித்திரம் கீறும் வர்ணங்கள், கிறேயோன் துண்டுகள், களிமண், ஆணிகள், சுத்தியல், மரத்துண்டுகள் மேளம்,சிம்பல்களை தொட்டுத் தொட்டுப் பார்த்தான். அவற்றை எடுத்து விட்டு மீண்டும் கீழே வைத்துவிட்டான். டிப்ஸ்சைப் பற்றி அதிகம் அக்கறைப்படாமல் மற்றப்பிள்ளைகள் தங்கள் தங்கள் உலகங்களில் மூழ்கிப் போயிருந்தார்கள். (தொடரும்....)

## மாட்டுக்கடன்



**மனைவி:-**மாடு வேண்ட கடன் எடுத்தனியளே என்னண்டு கட்டப் போறியள்

**கணவன்:-** கயிறு போட்டுத் தான்

# மறக்கப்பட்ட ஒரு வீரனும், மறைக்கப்பட்ட அதன் பின்னணியும்

வரலாறு அதனைப் படைப்பவர்களால் பதியப் பெற்ற சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. உலகக் கருத்தியல் உருவாக்கத்தில்



இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜி.சுபாஸ் சந்திரபோஸ்

ஆளுமை செலுத்துபவர்களால், இவ்வரலாறு அவரவர் தேவைகளுக்கு ஏற்ற வகையில் திரிபுபடுத்தப்பட்டு மீளளிக்கப்படுகின்றன. இந்த வகையில் இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறும், அர்ப்பணிப்பும், பங்களிப்பும் வரலாற்றுப் பதிவுகளில் மறுக்கப்பட்டு, மறக்கப்பட்டதன் பின்னணி இங்கு அலசப்படுகின்றது.

1947இல் விடுதலையடைந்த இந்தியாவிற்கு, மகாத்மாகாந்தி தலைமையிலான அகிம்சைப் போராட்டமே சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்ததாக, வரலாற்றின் பக்கங்களில் இன்றெல்லாம் படிக்கப்படுகின்றது உறுதியான அகிம்சை வழியைப் பின்பற்றிப் போராடும் மக்கள் திரளுக்கு முன்னே "சூரியன் அஸ்தமிக்காத நாடு" என்று ஏற்றிப் பேசப்படும். பிரிட்டன், மதிப்பளித்து தன்னை விலக்கிக் கொண்டது. இவ்வாறுதான் இந்தியாவின் விடுதலை பற்றி இன்று பெரும்பாலும் நம்பப்படுகின்றது. இலங்கைத் தீவிலே ஆக்கிரமிப்பு ஆட்சியாளர்களுக்கு எதிரான விழிப்புணர்ச்சி தமிழரையும், சிங்களவரையும் இணைத்து நின்றபோது, அந்தப் போக்கை தொடர்ந்தும் அனுமதிக்கலாகாதென 1921இல் மன்னிங்,1931 இல் டொனமூர் மற்றும் இறுதியாக 1944இல் சோல்பரி, திருத்தச் சட்டத்தின் மூலம், ஓரவஞ்சகமாக தமது பிரித்தாளும் தந்திரத்தால் இனப்பிரச்சினைக்கு இங்கே நீரூற்றியவர்கள், அகிம்சைக்கு மதிப்பளித்து ஒரு பெரிய 'பொன் முட்டை இடும் வாத்தாகிய' இந்தியாவைக் கைவிடுவார்களா? பலஸ்தீனியர்களோடு பேரம் பேசி அவர்களின் நியாயமான கோரிககைகளை ஏற்றுக்கொள்வதாக ஒப்பந்தம் செய்ததன் மூலம் அவர்கள் உட்பட அனைத்து அரேபியரையும் முதலாம் உலக யுத்தத்தில் தமது எதிரிநாடாகிய துருக்கிக்கு எதிராகப் போர்செய்வதற்குத் தூண்டிவிட்டு, காரியம் முடிந்ததும் அந்த டமாஸ்கஸ் ஒப்பந்தத்தை மீறிய பிரிட்டன், மக்கள் போராட்டத்திற்கு மதிப்பளித்திருக்குமா? இவை மட்டுமா...? இல்லையே...! அமெரிக்காவையும் தனக்கு சார்பாக யுத்தத்தில் இறக்குவதற்காக, பலஸ்தீனியர்களின் உரிமைகளை யூதர்களிடம் பேரம்பேசி விற்றும் இருந்தனர். அமெரிக்காவில் மிகுந்த செல்வாக்குள்ள யூதர்களுக்கு நல்ல பிள்ளையாகுவதன் மூலம் அமரிக்காவின் ஆதரவைப் பெறக்கூடியதாக இருந்தது. அவர்களுக்கு இவ்வளவு நரித்தனமானவர்கள் வெறும் மானுட நேயத்தினால் துணைக் கண்டத்தைக் கைகழுவி விட்டிருப்பார்கள் என எதிர்பார்க்கலாமா?

'விழுந்தாலும் மீசையில் மண்பட வில்லை' என்று சமாளித்துக் கொள்ளும் தனிமனிதர்கள் பலரும் உளர். இந்தப் போக்கானது நாடுகளிற்கும் அதிலும் குறிப்பாக வல்லரசுகளுக்கு மிக மிகப் பொருந்தும். முதற்கோணல் முற்றும் கோணலாகி மூக்குடைபட்டு நொந்திருக்கும் புஷ் அரசு, ஈராக்கில் படும் பாடு மிகவும் சிக்கலானது. எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்க பாலைவனப்புழுதிக்குள விழுந்தவர் எப்படி கௌரவமாக எழும்புவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். பிரிட்டனின் நிலையும் ஏறத்தாழ அன்று இப்படியே அமெரிக்காவின் - ஸ்தானத்தில் தானிருந்தது. அவ்வளவு விட்டுக் கொடுப்புச் செய்வதற்கு பிரிட்டனிற்கு அப்படி என்னதான் நெருக்குவாரங்கள் வந்து விட்டன என்று நீங்கள் கேட்கலாம்!

மகாத்மா காந்தியின் அமைதி வழி எதிர்ப்புப் போராட்டங்கள், ஆங்காங்கே பிரிட்டிஷ் படைகளைக் குறிவைக்கும் விரல் விட்டு எண்ணக்கூடிய விடுதலை வீரர்கள் என்பவற்றைத் தவிர வேறென்ன கௌரவமாக சுதந்திரம் வழங்குவதென்ற பிரிட்டனின் முடிவிற்கு பல காரணிகள் இருந்தன.

01. முதலாம் மற்றும் இரண்டாம் உலகயுத்தத்தில் தனது 'அகலக்கால்பதிக்கும் கொள்கை' காரணமாக பிரிட்டன் பல சிக்கல்களை எதிர்நோக்கியது: சொந்த நாட்டினை யேர்மனிய, இத்தாலி, ஒஸ்திரியப்படைகளிடமிருந்து பாதுகாக்க மிகவும் திண்டாடியது. காரணம் தேசியப்படையில் கால்வாசிப் பகுதியினரே பிரிட்டனின் எல்லைகளில் இருந்தனர். மிகுதி 3/4 பகுதியினரும் ஆக்கிரமித்துக்கொண்ட ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பாதுகாப்பினில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். "அரசனை நம்பி சொந்தப்புருஷனை இழக்கலாமோ?" அவர்கள் சிந்தித்தார்கள்.

02. ரஷ்யப்புரட்சிக்குப்பின்னர் சோசலிச சிந்தனைகள் உலகெங்கிலும் பரவி வந்தன. சமத்துவம், சொத்துடமை உரிமைகள் குறித்து மார்க்சீய, லெனினியக் கருத்துக்கள் வளர்முகநாடுகளில் மட்டுமல்லாமல், பிரிட்டன் உட்பட மேலைத்தேய இளைய சமூகத்தினரிடமும் முளைவிட்டிருந்தன. அடக்கப்படும் மக்கள் தங்களுக்குச் சார்பான கருத்தியல் பக்கமே சாய்வார்கள் என்ற யதார்த்தப் போக்கின் அடிப்படையில், ரஷ்ஷியாவோடு முழு இந்திய மற்றும் சீனமக்களும் சேர்ந்துவிட்டால், நிலைமை படு விபரீதமாக மாறி விடும். இந்தியாவைப் போன்றதோர் சனத்தொகை கூடியநாடு சோசலிஷக் கூட்டினுள் அணி சேர்ந்து விட்டால்... என்றெல்லாம் சூழ்நிலைகள் பிரிட்டனை அச்சுறுத்தத் தொங்கின.

03. மேற்கூறியவைகளுக்கும் மேலாக இந்தியாவில் நேதாஜி வீரசுபாஸ் சந்திரபோஸ் தலைமையிலான இந்தியதேசிய இராணுவம்.


மேற்கூறப்பட்ட மூன்று முக்கிய காரணங்களினாலும் ஒரு கௌரவமான வெளியேற்றத்திற்கு பிரிட்டன் நிர்ப்பந்திக்கப்பட்டது: சண்டைக்காரனிடம் தோற்றுப் போவதை விட, சமரசக்காரர்களை வைத்துப்பலதும் சாதிக்கலாமே என்று நினைத்தது. ஆயுதபாணிகளாகக் கிளர்ந்தெழுந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு சிக்கல்கள் கொடுக்காமல், இந்திய மக்களை அமைதிப்பூனைகளாக அடக்கிவைத்திருக்கும் அகிம்சாதத்துவத்திடம் சரண்தேடுவதே உசிதமானது என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் எண்ணினார்கள். காந்தி, நேரு உட்பட காங்கிரஸ்காரர்களின் மிதவாதச்சமரசப்போக்கு அவர்களுக்கு ஒப்பீட்டளவில் மிகவும் பிடித்துப் போய்விட்டது. ஏனென்றால், மறுபக்கத்தில் பாரதமாதாவின் விடுதலைக்காய் இன்னுயிரை அர்ப்பணிக்கவென ஆயிரம் ஆயிரம் வீரர்களும், வீராங்கனைகளும் நேதாஜி சுபாஸ் சந்திர போசின் கீழ் இந்திய தேசிய இராணுவமாகப் பலம் பெற்று வந்தனர். இவர் களின் மறைக்கப்பட்ட பின்னணி பற்றியும், மறக்கப்பட்ட வரலாறு பற்றியும் விபரமாகப் பார்ப்போம்!

(தொடரும்)

**சு.ஞாலவன்**

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*வணக்கம் பாவலர் அவர்களே! ஒரு அறிவாளி எப்போது முட்டாளாகிறான்.?*

*சுகி, பளை.*

தேர்தலில் வாக்களிக்கும் போது!

*பாவலரே திடீர் என்று நீர் இலங்கை சனாதிபதி ஆனால் தமிழர்களுக்கு நீர் என்ன செய்வீர்?*

*சுதன். வவுனியா.*

தமிழர்களுக்கு எதிரான சமாதானத்திற்கான யுத்தத்தை உடனடியாக தீவிரமாக ஆரம்பிப்பேன்... அதன் மூலம் சிங்கள இனத்துக்கு வரலாற்றுத் தோல்விகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் இலங்கையை பேரழிவு நிலைக்கு இட்டுச் சென்று கொண்டே வயலின் வாசித்து மகிழ்வேன்.

ஏனெனில் அப்போது பௌத்த சிங்கள பேரினவாதியாக அல்லவா இருப்பேன்!

*அன்பின் பாவலரே! தமிழீழத் தேசியத் தலைவருக்கு உறுதுணையாக நின்ற சிலர் துரோகம் புரிந்துள்ளனர். அவர்கள் எப்படி தண்டிக்கப்படுவார்கள்.*

*த.மூர்த்தி சோரன்பற்று.*

பல்லாயிரவரின் தியாகங்களுக்கு முன்னே ஒரு சிலரின் துரோகம் தூசாகிப் போய்விடும்.

ஆனாலும் துரோகிகளை வரலாறு தண்டித்தே தீரும். எட்டப்பன் காக்கைவன்னியன் வரிசையில் அவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதன் மூலம்....

*பாவலரே! வணக்கம்! எனது அப்பா எதைச் செய்தாலும் கோவிலில் கேட்டுத்தான் செய்ய வேண்டும் என்று சொல்வார். காரணம் என்னவாக இருக்கும்.(வாக்குச் சொல்லும் கோவிலில்)*

*த.மூர்த்தி சோரன்பற்று.*

உங்களன் வீட்டுக்காரர்களின் சொல்வாக்குக்கு உங்கள் அப்பாவின் மனதில் செல்வாக்கு இல்லை என்பது தான் காரணம்...!

*ஐயா பாவலன் உமது வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஒன்று கூறுவீரா?*

*இ.பாலசுப்பிரமணியம். நட்டாங்கண்டல்.*

ஓயாத அலைகள் '2' நடவடிக்கையின் போது இலங்கைப் படை துண்டைக் காணோம் துணியைக் காணோம் என ஓடிய ஓட்டம்..!

*பாவலரே உமக்கு இப் பெயர் ஏற்படக் காரணம் என்ன?*

*இ.பேபிநிஷாந்தினி ஆனைவிழுந்தான்.*

'பா'க்களைச் சுற்றி வலம் வருவதில் விருப்பமுள்ளவன் ஆதலினால் பாவலன் ஆனேன்...

*கனம் பாவலர் அவர்கட்கு வணக்கம். சமாதான காலத்தில் தமிழ்த்தேசியம்; தமிழீழம்; தன்னாட்சி உரிமை, தமிழர் தரப்பு என்று எல்லாம் முழங்கும் எங்கள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சண்டை நடந்தால் அதைப் பற்றிக் கதைப்பார்கள் என்று பாவலரே உம்மால் கூறமுடியுமா?*

*யோ.றீகன் பரந்தன்.*

சண்டை நடக்கும் போது 'வாய்ச்சவடால்' அடிப்பது பரிகாசத்திற்குரியது... களத்தில் எல்லைப்படையினருடன் துணைக்காவது நிற்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்ப்பு.... நிற்பார்கள் என நம்புவோமாக...!

*பாவலனே! உன்னோடு தான் என்று ஒருவர் கூறிவிட்டு சில சமயங்களில் திசைமாறிச் செல்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.?*

*S.குமுதினி உதயநகர்.*

திசைமானியில்லாத படகுகள் என்று நினைக்கிறேன்.

*உயர் பாதுகாப்பு வலயமான எம் எழுதுமட்டுவாள் சமாதான காலமதில் கூட உட்செல்ல அனுமதி கிடைக்கவில்லை! எப்போது இது சாத்தியமாகும்.*

*S.குமுதினி. எழுதுமட்டுவாள்.*

உயர் பாதுகாப்பு வலயம், படைத்தரப்பினரின் உயிருக்குப் பாதுகாப்பற்ற வலயமாக மாற்றப்படும் போது....

*தேசத்துரோகம் எப்போது விலகும்?*

*சி.பத்மநாதன் புலுமச்சிநாதகுளம்.*

தேசத் துரோகிகள் ஒழிக்கப்படும் போதும், தேசபக்தர்கள் விழித்துக் கொள்ளும் போதும்...

*சமாதானத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன சிறுபதில் தருவீர்களா?*

*இ.ஜனனேஸ்வரி நெடுங்கேணி.*

உரிமைகள் சமாதானமாக பங்கீடு செய்யப்படாத வரை சமாதானம் சாத்தியமேயில்லை!.




"எடி பொடியன் எங்க போட்டான்"

"கொழும்புக்குப் போறனெண்டு போறான், என்னேயிற இளந்தாரிப் பொடியள் எங்கட சொல்லக் கேக்கப் போகுதுகளே.... ஏதோ கிறிக்கேட்டாமெண்டு விளையாடப் போட்டான்.

"எடி விசரி இவன் விளையாடப் போகேல்ல. விளையாட்டுப் பாக்கப் போறான் இலங்கையும் இந்தியாவும் விளையாடுதாம்."

"என்ன கறுமமோ அவன் தமையன் பிரான்சிலயிருந்து லண்டனுக்குப் போறான் கிறிக்கெட்டுப் பார்க்க, இவன் உதில கொழும்புக்குத்தானே போறான். போகட்டும்."

"அவன் பிரான்சில உழைச் சதக்கொண்டு லண்டனுக்குப் போறானெண்டு இது என்னண்டு போகும்- அவனறிஞ்சா...."

"அ...விடு இவனும் அவன் பிரான்சில உழைச்சதத்தான் கொண்டு போறான் கொழும்புக்கு... பிறகென்ன?"

* * *

"இருந்தாப் போல பெற்றோல் விலை எட்டுரூபா கூடிப்போச்சு நல்ல காலம் பெற்றோலோட போச்சு"

ஓம் பெற்றோலோட போறதெண்டா மண்ணெய்யில ஓடுற இயந்திரமும் கூலி ஏறும், ஏனென்டா, பெற்றோலோடதான் போக்குவரவு ஏற்றுமதி இறக்குமதி விநியோகம் எல்லாம் மரத்தில ஏறினவனை இறக்க மரத் தத்தறிச்ச மாதிரி இது.

* * *

"அப்ப அம்மாவும் இதோட சரி அம்மா எப்படியும் வாற வரியத்தோட சரிதான். அங்கால சாமத்தில போய்ச் சத்தியப் பிரமாணஞ் செய்யேலா"

"அவவின்ர 'வீட்டோ'ப் "பவர"ப் பாவிச்சு ஏதும் ஓட்டுமாட்டுச் செய்தா..."

"அடிமடிக்க நெருப்பக் கட்டிவச்சுக் கொண்டு என்ன செய்யிறது நான் ஜே.வி.பி யச் சொல்லுறன்.

* * *

'மச்சான் தெருக்கூத்தாம் வாறியே பாக்க'

'என்ன பழையபடி சண்டை வரப் போகுதோ ஓடித்திரியுறாங்கள்'

ச் சா சண்டை வாறண்டா சும்மா கிடக்கே, அயல்நாடுகளெல்லாம் ஒடுப்பட்டுத் திரியுது. விடமாட்டாங்கள்.


"எண்டாலும் இந்தியா ஒண்டுக்கும் சரிவாறானில்லத்தானே."

என்னண்டு சரிவாற இஞ்ச தமிழர் மட்டுந்தான் பிரச்சனை, அங்க பஞ்சாப், அஸ்ஸாம், ஒரிசா, காஷ்மீர், கர்நாடகா, தமிழ் நாடு எண்டு எல்லா இடமும் பிரச்சினை தானே.

பேன் புழுத்தலைக்கு கடிக்காது. ஒண்டிரண்டு பேன்தான் ஓடியோடிக் கடிக்கும்.

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -80



...ன்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வ... கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளு... திலை... பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் -80**

..........................................................

..........................................................

..........................................................

..........................................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -79



சு.சிவாஜினி,
8ஆம் வட்டாரம்மந்துவில்,
புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரிய வரிகள்

*கடவுள் எல்லாம் ஒன்றே அவன்*
*கருணை கொண்டு படைக்கப்பட்ட மனிதர்களே*
*கல்நெஞ்சக்காரராகி மத வேற்றுமையை வகுத்து*
*கடமைதவறி நீ பெரிது நான் பெரிது என வாதிடுகின்றனர்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*இந்து கிறிஸ்தவம் என்கின்ற பேதம் இங்கில்லை*
*தமிழ் ஈழம் என்கின்ற வேதம் தான் நம் போதம்*
*இங்கு சிந்திய குருதி மதசார்பற்றது உறுதி*
*புலிவீரர் துயிலும் இல்லம் புனிதர்களின் ஆலயம்.*

மு.சந்திரசேகரம்,
அளவெட்டி.

*மயிலே நீ ஆச்சரியம் கொள்ளாதே*
*இது உனக்கும் புதுக்கட்டளை*
*இன்னும் எத்தனையோ சீமான்களை*
*ஏற்றிச் செல்லக் காத்திருக்கிறாய்.*

த.மூர்த்தி,
பளை.

*வனத்திலே உனக்கு இடமில்லையோ*
*தலத்துக்கு வந்து சரணடைந்தாயோ*
*காலத்தின் கட்டளையோ இது*
*தலைவன் காலமல்லவோ தயங்காதே.*

ந.ஜெகதீஸ்வரி,
உருத்திரபுரம்.


*தோகை மயிலே இடம்பெயர்ந்த உறவுகள் எப்போது*
*வருவார்கள் என்று காத்திருக்கிறாயா ஆம்*
*காத்திரு புலி அணி மிக விரைவில் வருவார்கள்*
*அதன் பின் உன் உறவுகள் வருவார்கள்.*

வி.தேவன்,
புதுக்குடியிருப்பு.

*கடவுளே! உன்னிடம் கேட்பது ஒன்றுதான்*
*ஈழமென்பது மலர்ந்தபின் எல்லா மாவீரர்களையும்*
*ஒரு நிமிடம் உயிர்க்க விடு! அவர்களை கூட்டி வந்து*
*எம் தாயகத்தைக் காட்டவேண்டும் செய்வாயா?*

கா.ஓவியன்,
கிளிநொச்சி.


இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.





சீறியெழுந்த தீயிற்கு பராகுவேயில் பலியானவர்கள் போக எஞ்சியவர்களை மீட்கும் தீயணைப்புப் படை வீரர்களைப் படத்தில் காணலாம்.
இந்தத்தீ விபத்தில் 280 இற்கு மேற்பட்டோர் உடல் கருகி பலியாகியமை தெரிந்ததே.





ஆசியக்கிண்ணக்கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பலம்பொருந்திய இந்தியஅணியை இருபத்தைந்து ஓட்டங்களால் வெற்றி கொண்டு ஆசியக்கிண்ணத்தைத்தனதாக்கிக்கொண்ட இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தப்பத்து இலங்கைப்பிரதமர் மகிந்தராஜபக்சவிடம் இருந்து வெற்றிக்கிண்ணத்லதப் பெற்றுக்கொள்வதையும், இந்தப்போட்டியில் தொடர் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரியா வெற்றிக்கிண்ணத்தை தனது ரசிகர்களுக்குக்காட்டுவதையும் மேலே உள்ள இரு படங்களிலும் காணலாம்.










Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–22 | 06 –08–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –170

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்,
R.V
பந்தல் சேவை, தர்மபுரம்.
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

# புதிய தலைவரை நியமனம் செய்வதிலும்

# ஐ.ம.சு முன்னணிக்குள் முரண்பாடு எழலாம்!

## தலைவர் பதவிக்கு ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை சுதந்திரக்கட்சி மத்தியகுழு தெரிவு

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் பதவிக்கு முன்னாள் பிரதமரும் தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு தெரிவு செய்துள்ளமையானது ஐ.ம.சு முன்னணிக்குள் முரண்பாட்டை மேலும் வலுவடையச் செய்யலாமெனக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.**

சனாதிபதி சந்திரிகா ஐ.ம.சு. முன்னணி தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தததைத் தொடர்ந்து நேற்று கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவைப் புதிய தலைவராகத் தெரிவுசெய்ய முன்னிறுத்தியுள்ளது.

ஐ.ம.சு.முன்னணியின் உடன்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# சனநாயக அரசியல் முறையில் மக்கள் நம்பிக்கை இழக்கின்றனர்

## -ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சனநாயக அரசியல்முறை தொடர்பான நம்பிக்கை மக்களிடம் தற்போது வீழ்ச்சியடைந்து வருவதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு அரசு தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது குறித்து தற்போது மக்கள் மனதில் சந்தேகம் எழுந்துள்ளதென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.தே.கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற அரச சேவை தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் 31. ஆவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஐ.ம.சு.மு.யின் தலைவர் பதவியை ஏற்க அநுரா விருப்பம் தெரிவிப்பு

ஐ.ம.சு.முன்னணியின் கட்சித் தலைவியாக இருந்த சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராஜினாமாச் செய்தததைத் தொடர்ந்து, அவரது சகோதரரும் உல்லாசத்துறை அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்க, கட்சித் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

கட்சி அங்கத்தவர்கள் இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில், கூட்டுக் கட்சியின் தலைவராகப் பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ள அநுரா, கூட்டுக் கட்சிகளுக்கிடையில் சில கருத்து வேற்றுமைகள் இருப்பதை ஏற்றுக் கொண்ட போதும், அவற்றைத் தான் தலைவராக வந்தால், உடனடியாகச் சரிசெய்துவிடத் தன்னால் முடியும் என்றும் சூளுரைத்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துக்கூறிய, அரசாங்கப் பேச்சாளர் மங்கள சமரவீர, தங்களது கூட்டுக் கட்சிகளுக்கிடையில் எதுவித கருத்து வேற்றுமைகளும் இல்லை என்றும்,

(IV ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பொலிஸ் நிலையத்தில் இளைஞன் மீது சித்திரவதை

## -ம.உ ஆ. குழு சட்டநடவடிக்கைக்கு சிபார்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கென தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளையில் இளைஞன் ஒருவனைச் சித்திர வதைகளுக்கு உள்ளாக்கியதன் மூலம் அவனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகம் குற்றம் சாட்டியுள்ளது.

இச் சித்திரவதைச் சம்பவத்திற்கெதிராக வழக்குகளை தாக்கல்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# இ.த.அ.சபை குறித்துப்புலிகளுடன் பேச்சு நடத்த ஜே.வி.பி.தயாராம்

விடுதலைப் புலிகள் அரசிடம் வழங்கிய இடைக்காலத் தன்னாட்சி அலகின் கீழ் சமாதானப் பேச்சுக்களை நடாத்தவும், அதற்கு நோர்வேயின் அனுசரணையைப் பெறவும் கொள்கையளவில் ஜே.வி.பியினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தற்போது முடங்கிப் போயுள்ள பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கும், தற்காலிகமாகத் தாம் விலகிக் கொள்வதாக அறிவித்த நோர்வே அனுசரணையாளர்கள் தமது பணியை மீண்டும் தொடர்வதற்கும் வழிகோலலாம் என எதிர்பார்க்கப்படும் ஜே.வி.பி.யின் இத்திடீர் அறிவிப்பு, சிறிலங்கா அரசியலில் பரபரப்பை உருவாக்கியுள்ளது.நாட்டின் அரசியல் சூழ்நிலைக்கேற்ப தமது முடிவுகளை மாற்றிக்கொள்வது அரசியல் கட்சிகளின் தேவையாக உள்ளது என்று குறிப்பிட்ட நிலவள அமைச்சரும், ஜே.வி.பி. உறுப்பினருமான அநுராதிஸநாயக்க, இடைக்காலத் தன்னாட்சி அலகின் கீழ் பேச்சு நடத்த தற்போது

(IV பக்கம் பார்க்க)

# சிவாஜிலிங்கம் மீது மேவின்சில்வா தாக்குதல் நடத்த முயற்சி

## -பாராளுமன்றத்தில் குழப்பம்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத்தை ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மேவின் சில்வா தாக்க முற்பட்ட நிகழ்வு ஒன்று இன்று பாராளுமன்றத்தில் இடம் பெற்றது.

அமைச்சர் அநுரா பண்டார நாயக்க, தாம் கருணாவை வெளிநாட்டுக்கு அழைத்து செல்லவில்லை என்ற கருத்தை வலியுறுத்தி உரையாற்றினார்.

இதன் போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உரையாற்ற முற்பட்ட போது அதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கவில்லை.

இதனையடுத்து சபாநாயகரின்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க கடற்படை அதிகாரி பலாலி, காரைநகருக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க கடற்படை அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் வலஸ்சி கிறெக்சன் நேற்று பலாலி, காரைநகர் படைத்தளங்களுக்குச் சென்று படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். தற்போதைய பாதுகாப்பு நில வரங்கள் குறித்துக் கலந்து ரையாடிய அவர் முகமாலை சோதனைச் சாவடிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளையும் பார்வையிட்டார்.

((IV ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் மாதாந்த சந்திப்பை ஏற்படுத்தித்தர இராணுவம் கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று, அவர்களுடன் சந்திப்புக்களை நடத்துவதற்குத் தாம் தயாராக விருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சிறிலங்காப் படைத்துறை தெரிவித்துள்ளது.

சிறிலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களையடுத்து, படையினருடனான மாதாந்த சந்திப்புக்களை இடைநிறுத்திக் கொள்வதாக

(IV ஆம்பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கில் நேரடியாக முதலிட பிரித்தானிய வர்த்தக சமூகம் விருப்பம்

## –பிரி. தூதரக அதிகாரி தெரிவிப்பு

(திருகோணமலை)

"பிரித்தானிய நாட்டு வர்த்தக சமூகம் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நேரடியாக முதலீடு செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. இதற்காக அடுத்தவருடம் முற்பகுதியில் பிரித்தானிய வர்த்தகத் தூதுக்குழு ஒன்று வடக்கு, கிழக்குக்கு விஜயம் செய்யவிருக்கின்றது."

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தில் வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்குப் பொறுப்பான முதலாவது செயலாளர் டேவ்வரிங் திருகோணமலை மாவட்ட வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை நடந்த கலந்துரையாடலில் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பிரிட்டிஷ் ராஜதந்திரியுடன் வருகை தந்த வடக்கு, கிழக்கு மனிதாபிமான புனர்வாழ்வு சேவைகள் (லங்கா) லிமிட்டட் பணிப்பாளர் கப்டன் சார்ள்ஸ் ஞானக்கடனும் பங்குபற்றினார். திருகோணமலை மாவட்ட வர்த்தகம், கைத் தொழில்கள் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாவட்ட முன்னணித் தொழிலதிபர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். சம்மேளனத்தின் தலைவர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடன் போரிட்டதால் இராணுவம் நல்ல பயிற்சி பெற்றுள்ளது

## ஐ.நா.தேர்வின் முடிவில் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு தசாப்த காலத்தில் விடுதலைப்புலிகளுடன் போரிட்டு நல்ல பயிற்சியும் அனுபவமும் பெற்றுள்ள சிறிலங்கா இராணுவத்திலிருந்து சிலர் வெளிநாட்டு இராணுவத்திற்கு பயிற்சி வழங்கும் தகுதியைப் பெற்றிருப்பதாக ஐ.நா.வின் அமைதிகாக்கும் படைப்பிரிவினர் நடத்திய தேர்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வரும் காலத்தில் அமைதிகாக்கும் படையினருக்கான குக்குளேகங்க பயிற்சி முகாமில் 23 வெளிநாடுகளின் இராணுவத்தினருக்கு அமைதிகாப்பு பணியில் பயிற்சி வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இச்சர்வதேசபயிற்சி நடவடிக்கை மூலம் இந்நாட்டுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அந்நியசெலாவணி கிடைக்கும் எனவும் முன்பு இதற்காக பங்களாதேஷ் சிறந்த நாடாகக் கருதப்பட்டாலும் பின்னர் சிறிலங்காவில் குக்குளேகங்க தெரிவுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நிறுத்தலளவைக் கருவிகளுக்கு இன்று முதல் முத்திரையிடலாம்

கந்தபுரம் பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடு இன்றிலிருந்து 15 ஆம்நாள் வரை கச்சேரி வீதி(பழைய தமிழீழ வைப்பகம்), கந்தபுரம் நிறுத்தலளவைப் பிரிவு செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

நிறுத்தலளவைக் கருவிகளைப்பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளிற்குள் அவற்றை முத்திரையிட்டுக்கொள்ளுமாறு வருவாய்ப் பகுதியின் நிறுத்தலளவைப் பிரிவினர் வேண்டியுள்ளனர்.

# தேசிய ரீதியிலான கட்டுரைப்போட்டி - உருத்திரபுரம் ம.வி மாணவி 2ஆம் இடம்

(அலுவலக செய்தியாளர்)

"தேசியரீதியில் பல்கலைக் கழகம், க.பொ.த.(உ.த), க.பொ.த (சா.த) என மூன்று நிலைகளில் அராஜகம் வன்முறை" என்பன வற்றிற்கு அதிருப்பதியை விளக்கும் வகையில் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் தேசிய ரீதியில் கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலய மாணவி செல்வி. பேரம்பலம் சாமினி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இரண்டாமிடத்தினைப் பெற்றமைக்காக இவருக்கு 7500ரூபா ரொக்கப்பணமும், சான்றிதழும் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப் பெற்றார்.

அத்துடன் கடந்த 30.07.2004 அன்று கிளிநொச்சி ம.வி.யில் நடைபெற்ற தமிழீழ வரலாற்றுத் தேர்வு வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் வைத்தும் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்களால் பரிசில் வழங்கிப் பாராட்டி கௌரவிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# இருவர் காயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் பகுதியில் உந்துருளி -லான் மாஸ்ரர் விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வேகமாகப் புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த உந்துருளி லான்மாஸ்ரருடன் மோதியதில் இருவர் காயமடைந்ததுடன் உந்துருளி கடுமையான சேதத்திற்குள்ளாகியது. உந்துருளியில் சென்ற வன்னித்தேவன் (வயது17), வானன் (வயது22) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர். (15)

# பேருந்து சேவையை அதிகரிக்க வேண்டுகோள்


முல்லைத்தீவு, நாயாற்றுப் பேருந்துச் சேவையினை விஸ்தரிக்கக் கோரி அப்பகுதி மாணவர்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், மக்கள் அனைவரும் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காலை 6.00 மணிக்கு நாயற்றிலிருந்து புறப்பட்டு முல்லைத்தீவிற்கு வரும் பேருந்து அளவுக்கு அதிகமான பயணிகளோடு வருவதுடன் பெருமளவானவர்களை ஏற்றமுடியாமல் விட்டுவிட்டும் வருகிறது.

இதனால் குறித்த நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் இருக்கின்றதென்றும், வரும்காலம் பரீட்சை காலம் ஆகையால் தாங்கள் குறித்த நேரத்தில் செல்வதற்கு உதவ வேண்டும் எனவும் கூறியே பேருந்து சேவையை அதிகரிக்க வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் இதற்கான நடவடிக்கையினை தாம் ஒரு கிழமைக்குள் எடுப்பதாக கூறியுள்ளார். (20)





கிளிநொச்சி மகாவித்தியாலய கடினப்பந்து கிரிக்கெட் அணியினருக்கு கிளி. மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்கள் சத்துணவு வழங்குவதனையும், அரச அதிபர் மற்றும் மாவட்ட விளையாட்டு அதிகாரி, பயிற்றுநர், பொறுப்பாசிரியர், பாடசாலை முதல்வர், துணை முதல்வர் கிளி. மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர், விளையாட்டு உத்தியோகத்தர்களுடன் கடினப்பந்து கிரிக்கெட் அணியினர் நிற்பதனையும் படத்தில் காணலாம். (படங்கள்:- சோதி,வரன்)


## மனிதவள மேம்பாட்டுப்பகுதி நிதித்துறை

**தரக்கட்டுப்பாட்டாளர் பணிநிலைக்கான வேண்டுகை**

மின்வரும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன

### தகைமைகள்

01. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன் பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும்

02. அகவை:-25 தொடக்கம் 55 வரை

### குறிப்பு

01. விண்ணப்ப முடிவு நாள்:10.08.2004

02. நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள- 12.08.2004 காலை 9.00 மண

03. நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

04. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ்,பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ்களோடு வருக.

05. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி

(சி.9770)


# வகுப்புக்கள் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

பட்டப்பின் கல்வி டிப்ளோமா. பகுதி ii பரீட்சைக்கு தோற்றவுள்ள ஆசிரிய மாணவர்களுக்கான வகுப்புக்கள் 7,8 ஆம் திகதிகளில் நடைபெறும். கிளிநொச்சி பிராந்திய நிலையத்தின் ஊடாக பரீட்சைக்கு தோற்றியவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கி.சின்னராசா அறிவிக்கிறார்.(தீ)

## விசுவமடு குளத்தின் நீர் வீண்விரயம் விவசாயிகள் கவலை

(விசுவமடு)

26.07.2004ஆம் திகதி தொடக்கம் விசுவமடுக் குளத்தின் துரிசுக் கதவு பூட்டமுடியாது இருப்பதனால் இரவுபகலாக குளத்தின் நீர் வெளியேறி வீண்விரயமாகிறது.

இது விடயமாக விவசாயிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் தக்க பயனளிக்கவில்லை. சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் யாரும் எதுவித நடவடிக்கையும் எடுக்காததையிட்டு விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்


## வரி விளம்பரம்

**விசேட செயலமர்வு**

கேம்பிறிஜ் கல்லூரி உதயநகர், இல-01. 2004, ஒகஸ்ட், 15ஆம் திகதி தரம் 05 புலமைப்பரிசிலுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக் கான விசேட செயலமர்வு 2004-08-07ஆம் திகதி சனி (காலை 9.00 மணிக்கு) நடைபெறும். இதில் சகலரும் கலந்து பயன்பெறவும். கட்டணம் 150/= நிர்வாகி. (4649)


# சாவு அறிவித்தல்

## பொன்னையா — சுந்தரலிங்கம் (S.P.S)

சாவகச்சேரி வடக்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரலிங்கம் (s.p.s) அவர்கள் 04.08.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், புனிதவதியின் அன்புக்கணவரும், பொன்னையா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் Dr.பிரேம்ராஜ் (அமெரிக்கா), Dr.பிரேமகிருஸ்ணா (தேசிய வைத்தியசாலை கொழும்பு),Dr பிறேமசிறி (கனடா),பிறேமசீலன் (சுவிஸ்), Dr.பிறேமினி(போதனா வைத்தியசாலை கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.தியாகசீல், ஜெயசிறி, Dr.அனுஷியா, தவமலர், Dr.ராஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சரவணமுத்து (கனடா), தவமணிதேவி, தியாகராஜா(தலைவர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), காலஞ் சென்ற இராசம்மா, பு,மணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஷியாமளி ஆரபி, விதுரன், பிரவீன், அபிர்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.08.2004 ஞாயிற்றுக்கிழமை 12.00 மணிக்கு அவ்ரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கண்ணாடிபிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மடத்தடி,
சாவகச்சேரி- வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:-
Dr.பிரேமகிருஸ்ணா

(சி.9773)

# புதுக்குடியிருப்பில் நடைபெற்ற மாபெரும் தமிழ் விழா





(படங்கள் : தவரட்ணம்)

கிராமசேவையாளர் மீதான தாக்குதலைக் கண்டித்து

## செட்டிகுளம் பிரதேச செயலகம் முன் நேற்று முன்தினம் மறியல் போராட்டம்

(செட்டிகுளம்)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் செயலகம் நேற்று முன்தினம் முற்றாக செயல் இழந்தது. கிராம சேவையாளரைத் தாக்கிய நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கையை பொலிசார் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தே இந்தப் போராட்டம் நடைபெற்றுள்ளது.கடந்த 31ஆம் திகதி கணேஷபுரம் பகுதியில் வைத்து கிராமசேவையாளர் தளையசிங்கம் சிறீகாந்தன் இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இதனுடன் தொடர்புடைய நபர்கள் எவரையும் இதுவரை பொலிசார் கைது செய்யவில்லை என்றும் உடனடியாக சந்தேக நபர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும், அவ்வாறு இல்லை என்றால் எதிர் வரும் புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தை முற்றாக ஸ்தம்பிதம் செய்யப் போவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நீதிமன்றத்தில் பொலிசாரால் 'பி' அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களைக் கைது செய்ய வவுனியா நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.கிராம சேவையாளரை கட்டிவைத்து சித்திரவதை செய்ததுடன் அவரிடம் இருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பணம், நகைகள், மோட்டார் வண்டி என்பனவற்றை அந்த நபர்கள் சூறையாடி சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ரூ.26 கோடி ஹெரோயின் மீட்பு

(சென்னை)

சென்னையிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த 26 கோடி ரூபா ஹெரோயின் போதைப் பொருள் இராமநாதபுரம் அருகே பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தக் கடத்தல் தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கூறி யுள்ளனர்.சென்னையிலிருந்து இராமநாதபுரம்வழியாக இலங்கைக்கு ஹெரோயின் போதைப்பொருள் கடத்தப்படவிருப்பதாக போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதையடுத்து இராமநாதபுரத்தில் புகையிரதத்தில் வந்தவர்களை போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் சோதனையிட்டதில், 26 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டதுடன், அதனை கடத்திவந்த திருச்சியைச் சேர்ந்த ஒருவர், இலங்கையைச் சேர்ந்த மூவர் ஆகிய நான்கு பேரையும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

## பொதுக் கிணற்றில் நீரில்லை

(முள்ளியவளை)

"நியாப்" நிறுவன நிதியுதவியுடன் முள்ளியவளை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட பொதுக் கிணற்றில் நீர்வற்றியுள்ளது. (ஆ)

## வவு.இல் இடம் பெறும் குழு மோதல்கள்

(செட்டிகுளம்)

வவுனியாவில் மீண்டும் குழு மோதல்கள் இடம் பெற ஆரம்பித்துள்ளன. இந்த குழு மோதல்கள் பெரும்பாலும் முச்சக்கர வண்டி நடத்துனர்களுக்கு இடையில் இடம்பெற்றுவருகின்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் இருவர் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதே போன்று திங்கட்கிழமை வவுனியா பண்டாரிக்குளம் பகுதியிலும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த சில வாரங்களாக குழு மோதல்கள் குறைந்திருந்த போதும் இந்த மோதல்கள் மீண்டும் ஆரம்பித்து விட்டன. ஏற்கனவே வவுனியாவில் பல குழுக்கள் இருந்தமையும், பொலிசாரின் நடவடிக்கையை அடுத்து இவை குறைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (28)

## பராகுவே வணிக வளாக தீ விபத்தில் உயிரிழந்தோர் 409 ஆக உயர்வு

தென் அமெரிக்க நாடான பராகுவேயின் தலைநகர் அவுன்சியசிலுள்ள வணிகவளாகமொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் இறந்தோரின் தொகை 409 என அறிவிக்கப்படுகின்றது.

அந்நாட்டின் குற்றச் செயல்களை விசாரணை செய்யும் நீதிபதி இந்த நவீன சந்தையின் சொந்தக்காரரும் அவரது மூன்று பாதுகாப்பு அதிகாரிகளும் மனிதக்கொலைக் குற்றச்சாட்டின் பேரில் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தீ விபத்து சம்பந்தமான விசாரணைகள் பூர்த்தி செய்வதற்கு நான்கு மாதங்கள் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குற்றச் செயல் இடம்பெற்றது என்று நிரூபிக்கப்பட்டால் பராகுவே நாட்டின் சட்டத்தின் பிரகாரம் குற்றவாளிகளுக்கு 15 வருடகால சிறைத் தண்டனை விதிக்க முடியும் எனக் கூறப்படுகின்றது.

## பரசூட் சாகசம் செய்த பெண் நிலத்தில் வீழ்ந்து மரணம்

பேருவில், பரசூட்டில் ஏற்பட்ட கோளாறினால் தரையிறங்கும் போது நிலத்தில் விழுந்த இளம் பெண் மரணமடைந்துள்ளார். ஏராளமானோர் கண்முன்னே சகாஸ நிகழ்வில் ஈடுபட்டபோதே இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது.தென்அமெரிக்க நாடான பேருவில் சுப்புறோ எனுமிடத்தில் வருடாந்தம் பரசூட் திருவிழா நடைபெறுவது வழமை. இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.இதன்போது நான்கு வயதுக் குழந்தையின் தாயான எலினா என்பவரும் பரசூட் சாகஸத்தில் ஈடுபட்டார்.

தரையிலிருந்து 50 மீற்றர் உயரத்தில் இறங்கிக் கொண்டிருந்த போது திடீரென்று அவரது பரசூட்டில் கோளாறு ஏற்பட்டது. அப்போது குறைவான உயரத் திலிருந்தமையினால் உடனடியாக மாற்று பரசூட்டைப் பயன்படுத்த முடியாது திணறிய எலினா ஏராளமானோர் கண்முன்னேயே நிலத் தில் விழுந்து பலத்த காயமடைந் துள்ளார்.உடனடியாக மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காது அவர் உயிரிழந்துள்ளார்.

## வேகத்தடை குறியீடுகள் விசமிகளால் நாசம்

கொடிகாமம், நாவலடிப் பாடசாலைக்கு அருகில் இருந்த வேகத்தடை குறியீகள் சில விசமிகளால் உடைத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

ஏ.9 பிரதான வீதியில் அமைந்துள்ள இப்பாடசாலை அருகில் பல வீதி விபத்துக்கள் இடம் பெற்று வருவதாகத் தெரியவருகிறது. இதற்கு மத்தியில் இப்பாடசாலைக்கு அருகில் இருந்த வேகத்தடை உடைக்கப்பட்டதால் பாடசாலை மாணவர்கள் விபத்தில் சிக்கும் ஆபத்தும் எதிர் நோக்கப்படுகிறது. (28)

## முழங்காவில் காட்டுக்குச் சென்றவர் கட்டுவெடியில் சிக்கிப் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

காட்டிற்குச் சென்றவர் கட்டுவெடியில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் முழங்காவில் காட்டுப்பகுதிக்குச் சென்றவர் வேட்டைக்காக வைக்கப்பட்ட கட்டுவெடியில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு முதலுதவி சிகிச்சை அழிக்கப்பட்ட நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். குருபரன் வீதி, முழங்காவிலைச் சேர்ந்த ஐயாத்துரை பேரின்பநாயகம் (வயது-49) என்பவரே மேற்படி சம்பவத்தின்போது படுகாயமடைந்தவர் ஆவார். (தீ)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் செல்வி பார்வதி-சிவகுரு**

(கணக்காளர் வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கம்)

நெடுங்கேணி.

மலர்வு 1949 .07 .01 — உதிர்வு 2004 .08 .02

கடந்த 24 வருடங்களாகக் கூட்டுறவின் வளர்ச்சிக்காகவும், எமது சங்கத்தின் உயர்ச்சிக்காகவும் முழு மூச்சுடன் செயற்பட்டு, கொடிய நோயினால் மரணமடைந்த எமது சங்கத்தின் கணக்காளர் செல்வி பார்வதி-சிவகுரு அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இறுதிக்கிரியைகள் 08.08.2004ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நெடுங்கேணி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சங்க அங்கத்தவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.

(சி -9775)

# பிக்குமாரும் தொண்டமானும் அரசில் இணைந்தால்

## பாராளுமன்றத்தில் சிக்கல் இராதென்கிறார் அநுரா

(கொழும்பு)

தற்போது அர்சாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களுக்குக் கூடுதலான பெரும்பான்மை பலம் உள்ளதாக நேற்று முதலீட்டு அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் கைத்தொழில் அமைச்சர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எந்த நேரத்திலும் முன்னணியின் பெரும்பான்மை பலத்தை வெளிப்படுத்த அரசு தயாராகவுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். பௌத்த மத குருமார் நிபந்தனையின்றி எமக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். இவ் ஆதரவு கிடைக்கின்றவேளை, எமக்கு பாராளுமன்றத்தில் 113 ஆசனங்கள் இருக்கும். இதற்கு மேலதிகமாக தொண்டமானும் எம்முடன் இணைவார் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

மேலும், இவர்கள் எம்முடன் இணைந்தால் பாராளுமன்றத்தில் எவ்வித சிக்கலும் ஏற்படாது. தொடர்ந்து நாம் எமது வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# அமெ. உலங்குவானூர்தியை தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தினர்

(பாக்தாத்)

ஈராக்கின் நயாப் நகரில் அமெரிக்கப் படையினருக்கும் கடும்போக்கு மதகுருவான மக்தரா அல்சகரின் ஆதரவாளர்களிற்கும் இடையில் இடம்பெற்ற மோதலின்போது அமெரிக்க உலங்குவானூர்தி ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது.

இதில் குறைந்தது இரு விமானிகள் காயமடைந்துள்ளனர். றொக்கட் கைக்குண்டுகள் மற்றும் பெரிய இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் கிளர்ச்சிகாரர்கள் பொலிஸ் நிலையம் ஒன்றைத் தாக்கியதையடுத்து நயாப் நகர ஆளுநர் அமெரிக்கப் படைகளின் ஆதரவைக் கோரினார். இதேவேளை தெற்கு நகரான பஜ்ராவிலும் கிளர்ச்சியாளரின் படைகள் பிரிட்டிஷ் படைகளுடன் சண்டையில் ஈடுபட்டன. இதில் இரண்டு ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். மற்றுமொரு சம்பவத்தில் பக்தாத்துக்குத் தெற்கே உள்ள நகர் ஒன்றில் பொலிஸ் நிலையம் ஒன்றிற்கு வெளியே நடந்த கார்க்குண்டுத் தற்கொலை தாக்குதலில் 9பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

# வடக்கு-கிழக்கில் முதலீடு செய்யமுன் நிரந்தர சமாதானத்தை உறுதி செய்க!

## பிரி. தூதரக அதிகாரிக்கு சட்டத்தரணி சிவபாலன் அறிவுரை

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொழில் துறைகளில் முதலீடு செய்வது குறித்து தீர்மானம் எடுப்பதற்கு முன்பு இலங்கை வர்த்தக சமூகமும், பிரித்தானிய வர்த்தக சமூகமும், இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று திருகோணமலைக்கு நேற்று (வியாழக்கிழமை) வருகை தந்த பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் (வர்த்தகப் பிரிவின்) முதலாவது செயலாளர் டேவ் வரிங்குக்கு (DAVE WARING) வலியுறுத்திக் கூறப்பட்டது.

நேற்று வியாழன் பிற்பகல் 1.00 மணியளவில் திருமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை பிரிட்டிஷ் ராஜதந்திரி, மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றியத்தின் அலுவலகத்தில் சந்தித்தார். அப்போது அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கிழக்கிலங்கை புனர்வாழ்வுக் கழகத் தலைவரும், சட்டத் தரணியுமான கா.சிவபாலன் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அழுத்தத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் இராஜதந்திரியைக் கேட்டுக் கொண்டார்.

"சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சி ஸ்தம்பிதமடைந்துள்ளது. முதலில் சமாதான முயற்சியை திரும்பவும் சரியான தடத்துக்குக் கொண்டுவர வேண்டும்; அதன் பின்னர் வடக்கு-கிழக்கில் வெளிநாட்டு முதலீடு பற்றி பேசலாம்" என்று சட்டத்தரணி சிவபாலன் பிரிட்டிஷ் இராஜதந்திரிக்கு வலியுறுத்திக் கூறினார். (25)

# கிளி.இல் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நாளை காலை 9.00 மணிக்கு மேற்படி உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

வடக்கு கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்ட உதைபந்தாட்ட வீராங்கனைகள் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளரென கிளி.மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் கனகராசா தெரிவித்துள்ளார். (சோ.கு)

### புதிய...

பாட்டின்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே தலைவராகத் தெரிவுசெய்யப்படுவார். அதற்கு ஜே.வி.பி.யின் அங்கீகாரமும் தேவையாகும்.

இந்நிலையில் ஐ.ம.சு. முன்னணிக்கு அடுத்த தலைவராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு தெரிவுசெய்துள்ளதாயினும், ஜே.வி.பி. இத்தெரிவிற்கு ஆதரவு வழங்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

புதிய தலைவராக அநுரா பண்டாரநாயக்க வருவதையே ஜே.வி.பி. விரும்புவதாகவும், ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை அது விரும்பவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் புதியதலைவர் தெரிவு ஐ.ம.சு.முன்னணிக்குள் முரண்பாடுகளை மேலும் தீவிரமாக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் ஐ.ம.சு.முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின்போதே இது குறித்த முடிவுகள் தெரியவரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஐ.ம.சு...

அநுராவின் கூற்றைத் தான் நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளார். எனினும், கட்சியின் புதிய தலைவராக யார் வருவார் என்பது குறித்துக் கருத்தெதுவும் கூற அவர் மறுத்து விட்டார்.


# சாவு அறிவித்தல்

## சரவணமுத்து-விநாயகமூர்த்தி

மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்காலிகமாக 5ஆம் வாய்க்கால் பெரிய பரந்தனை வசிப்பிடமாகக் கொண்டவருமான சரவணமுத்து விநாயகமூர்த்தி என்பவர் 05.08.2004 அன்று காலமாகிவிட்டார். இவர் உலகேஸ்வரியின் கணவராவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது வீட்டில் நடைபெற்று 07.08.2004 அன்று காஞ்சிபுரம் மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்,
**மனைவி,**
**பிள்ளைகள்.**

(4885)

# சாவு அறிவித்தல்

## இராமசிப்பிள்ளை-ஞாகப்பர்

நெடுந்தீவு-மேற்கைப் பிறப்பிடமாகவும், உடையார்கட்டு-தெற்கு, உடையார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை செல்வி இராமசிப்பிள்ளை-ஞாகப்பர் 04.08.2004 அன்று சுகயீனம் காரணமாகக் காலமானார். அன்னார் காலம்சென்ற ஞாகப்பர் சின்னப்பிள்ளை ஆகியோரின் மகளும், தனுஷ்கோடி (ஒட்டங்குளம்) காலம்சென்றவர்களான முருகேசு, சின்னத்தம்பி(நெடுந்தீவு), வள்ளியம்மை (வட்டக்கச்சி), ஞாகப் பா(வன்னேரி) ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 06.08.2004 இன்று தற்காலிக இல்லத்தில் நடைபெற்று மு.ப.11.00மணி அளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக உடையார்கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்
**த.சதாசிவம்(மருமகன்)**
உடையார்கட்டு தெற்கு,
உடையார்கட்டு.

(4886)


### வடக்கு...

க.துரைராஜா, பொதுச் செயலாளர் ஆர்.இராஜாராம் மோஹன், வணிகக் கல்லூரி முகாமைத்துவச் சபைத்தலைவர் பி.விக்கிரமநாயகம் ஆகியோரும் பங்குபற்றினர்.

இதுவரைகாலமும் பிரிட்டிஷ் வர்த்தக சமூகம் இலங்கையில் கொழும்பை மையமாக வைத்தே தனது முதலீடுகளைச் செய்துவந்தது. கொழும்பில் காணப்படும் பிரமாண்டமான கட்டடங்கள் கொழும்பை மையமாகக்கொண்ட வெளிநாட்டு முதலீடுகளுக்குச் சாட்சியமாக விளங்குகின்றன. நாட்டின் தெற்கு மற்றும் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் நேரடியாக முதலிடுகளை மேற்கொள்வதற்குப் பிரிட்டிஷ் வர்த்தக சமூகம் தற்போது எண்ணியுள்ளது. பிரிட்டிஷ் வர்த்தக சமூகத்திற்கு இது தொடர்பாகத் தேவையான தரவுகளைச்சேகரித்து வழங்கும் நோக்கத்துடன்தான் எனது திருமலை விஜயம் அமைந்துள்ளது. திருமலை வர்த்தக சமூகம் திருமலையில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், தேவையான முதலீடுகள் பற்றிய விபரங்களை சமர்ப்பிப்பின் அவற்றை பிரிட்டிஷ் வர்த்தக சமூகத்தின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (25)

### யாழ்...

செய்யும் ஆலோசனையினையும் அது தலைமையகத்திற்கு அனுப்பியும் வைத்துள்ளது.

அத்துடன் இவ் விடயம் தொடர்பாக பொலிஸ் சேவைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரது கவனத்திற்கும் ஆணைக்குழு கொண்டுவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் குற்றச் செயல் ஒன்று தொடர்பாக யாழ். பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்த ப.கஜேந்திரன் (வயது - 20) எனும் இளைஞன் விசாரணைகளுக்கென பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளை உப பொலிஸ் அதிகாரியொருவராலும் (Sub Inspector) சக பொலிசாராலும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்.

இவ் ஆண்டில் மார்ச் 17ஆம் திகதி இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சித்திரவதைச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடொன்றை செய்திருந்தார்.

இது தொடர்பாக நேற்று இடம்பெற்ற விசாரணை யில் தலைமையக பொறுப்பதிகாரி ஆனந்த செனவிரட்ண மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஆகியோர் சமூகமளித்து வாக்குமூலமளித்தனர்.

எனினும் பாதிக்கப்பட்ட இளைஞர்களினால்,தான் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டமை

தொடர்பான ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டதையடுத்தே மனித உரிமைகள் ஆணைக்குழு சட்ட நடவடிக்கைக்கான சிபார்சை செய்துள்ளது (27)

### மட்டு...

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னர் அறிவித்திருந்தனர். விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டுக்குப் பதிலாகவே சிறிலங்கா படைத்துறை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இதுகுறித்து தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான தொப்பிகல காட்டுப்பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டாலும், தாம் அங்கு செல்லத் தயாராக இருப்பதால் மீண்டும் விடுதலைப் புலிகளுடனான மாதாந்த சந்திப்பை வழமை போன்று ஏற்பாடு செய்து தருமாறும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சிறிலங்கா படைத்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. இதேவேளை, சகல மாவட்டங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகளும், தாமும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டுமெனவும் சிறிலங்கா படைத்துறை வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், படையினரின் இந்த வேண்டுகோளினை தாம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விரைவில் தெரிவிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

### அமெ...

பசுபிக் பிராந்தியத்தின் பலபகுதிகளில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கக் கடற்படைகளிற்கும், போர்க்கப்பல்களிற்கும் பொறுப்பாகவுள்ள கடற்படை அதிகாரியான இவர் கொழும்பிற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் புதன்கிழமை வந்து இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொடவுடன் முக்கிய சந்திப்பொன்றை நடாத்தியது தெரிந்ததே.

இக்கடற்படை அதிகாரியின் விஜயத்திற்கான காரணங்களைதையும் வெளியிட சிறிலங்கா இராஜாங்க அமைச்சும், வெளிநாட்டு அமைச்சும் மறுத்துவிட்டன.

### சிவாஜி...

இருக்கையை நோக்கிச் சென்ற அவரை மேவின் சில்வா தாக்க முற்பட்டுள்ளார்

எனினும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனைத் தடுத்தனர், இந்த நிலையில் குழப்பம் காரணமாக பாராளுமன்ற அமர்வு 15 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து பாராளுமன்றம் கூடிய போது, தாம் சபாநாயகரின் இருக்கையை நோக்கி உணர்ச்சி வசப்பட்ட நிலையிலேயே சென்றதாகவும் வேறு எந்த நோக்கமும் தமக்கு இருக்கவில்லை எனவும் கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்

இந்த நிலையில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க மற்றும் ,மேவின் சில்வா ஆகியோருக்கும், தமிழ்தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது

### இ.த..

தாம் இணக்கம் தெரிவிப்பதாகவும், இருப்பினும் இப் பேச்சுக்கள், சிறிலங்கா இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தர இறுதித் தீர்வுடன் இணைக்கப்பட்டதும் தொடர் புடையதுமான பேச்சுவார்த்தையாக அமைய வேண்டுமென்ற தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும் மேலும் தெரிவித்துள்ளார். சனாதிபதி சந்திரிகா, ஐ.ம.சு.மு. கூட்டமைப்பின் தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து, இன்று ஜே.வி.பி. வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பு, சந்திரிகாவை மீண்டும் கட்சித் தலைவியாகத் தக்க வைப்பதற்கா அல்லது உண்மையில் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்படுவதை விரும்பியா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 06 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.